

# திருக்கோயில்

நவம்பர் 1974, ரூ. 1

P
R.R.No. 837/74.
55.
91
5-DEC 1974
12643



# அருள்மிகு
# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணி

**செங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

தொலைபேசி : { அலுவலகம் : 25 மலைக்கோயில் : 43
மலைப்பாதை : 96 தங்கும் விடுதி : 87 }

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

''நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும்
திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!''

இத்தலம் சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பில் இருந்து வடக்கே 14 கி.மீ. ; சென்னை—திருப்பதிப் பாதையில் 84 கி.மீ. ; திருப்பதியிலிருந்து தெற்கே 54 கி.மீ. ; காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 36 கி.மீ.

**தரிசனம் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| விசுவரூப தரிசனம் | காலை 6 மணி | சாயரட்சை | மாலை 5மணி |
| காலை சந்தி அபிஷேகம் | காலை 8மணி | அர்த்தசாமம் பூசை | இரவு 8 மணி |
| உச்சிக்காலம் | காலை 10 மணி | | |

**விழாக் காலங்கள்**

1. ஸ்ரீ வள்ளித் திருமணப் பெருவிழா ... பிப்ரவரி, மார்ச்சு
2. சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் ... மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வானைப் பெருமண விழா ... ஏப்ரல், மே.
4. ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா ... ஜூலை, ஆகஸ்டு.
5. சஷ்டிப் பெருவிழா ... அக்டோபர், நவம்பர்.
6. திருப்புகழ்த் திருப்படி விழா ... டிசம்பர்.

**வேண்டுதல்**

பாதி நன்கொடைத் திட்டத்தின் கீழ்க் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்க விரும்புவோர் ரூ. 10,000 செலுத்த வேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத்தேர்ப் பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்குத் தங்கமாகவும், பிற பொருளாகவும் திருத்தணிக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

95 அறைகளும், 28 குடியிருப்பு இல்லங்களும் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் பணிச் செலவுக்கும் விடப்படுகிறது.

**1974-ஆம் ஆண்டுக் கிருத்திகை நாட்கள்**

*15—7—1974*

*11—8—1974* ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா
*12—8—1974* ஆடிக் கிருத்திகை 2-ஆம் தெப்பப் பெருவிழா.
*13—8—1974* ஆடிக் கிருத்திகை 3-ஆம் தெப்பப் பெருவிழா
*7—9—1974, 5—10—1974, 1—11—1974, 28—11—1974, 26—12—1974.*

திரு. புலவர் மி. ச. நடேசன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன்,
அறங்காவலர்.

திரு. ஊ. ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி.

திரு. வி. எம். துரைசாமி ரெட்டி,
அறங்காவலர்.

**முகப்பு :**

மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலின் தோற்றம்.

# திருக்கோயில்

மாலை 17 | ஆனந்த, ஐப்பசி — நவம்பர், 1974 | மணி 2

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் "திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034" என்னும் முகவரிக்கு ரூபாய் பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரராகச் சேர்த்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறுது கிடைத்திடச் சந்தாதாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 10-00 தனி இதழ். ரூ 1-00**

## பொருளடக்கம்

1. தமிழுக்கு ஒரு பாட்டு — டாக்டர் கலைஞர்
2. இறைவனின் நீதி மன்றங்கள் — கண்ணதாசன்
3. மதுரை மீனாட்சி — புலவர். அன்பு-தங்கவல்லி
4. பக்த மாலை தொடுத்த நாபாஜி — கவியோகி சுத்தானந்த பாரதியார்
5. வள்ளுவர் கடவுட் கொள்கை — வித்வான் ச. சாம்பசிவன்
6. முதற் குறள் மூதுலக உண்மைப் பொருள் — அ. கிருஷ்ணசாமி நாயுடு
7. வள்ளிமலையில் வெண்திங்கள் — வித்வான் செ. வேங்கடராமச் செட்டியார்
8. தென்னுடும் கண்ணபிரானும் — தேவி. இராமாநுசதாசர்
9. கூடல் மாநகர் எடுத்த பொற்கிழி விழா — கே. எஸ். ஜெகந்நாதன்
10. அமலனுதிபிரானும் இறைவனின் கண்ணழகும் — கே. இ. பார்த்தசாரதி
11. திருவருட்பாவில் இலக்கணத்திறன் — ந. ரா. முருகவேள்
12. குன்று தோறுடும் குமரன் — கவிஞர் மனசை ப. கீரன்
13. ஒன்றில் பெருவலி யாதுள ? — டி. என். சுகிசுப்பிரமணியன்

ஆசிரியர்: ந.ரா.முருகவேள் M.A. M.O.L.
துணை ஆசிரியர்: கே.எஸ்.ஜெகந்நாதன்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

# தமிழுக்கு ஒரு பாட்டு

158597

அரசர்கள் புலவர்களை மதிப்பதென்பது இன்று நேற்றல்ல ; அக்காலந்தொட்டே இருந்து வருகின்ற ஒரு மரபு. புலவர்கள் பின்னால் அரசர்கள் ஏழடி தூரம் நடந்து சென்று வழியனுப்பி வைப்பது தமிழ் நாட்டுச் சிறப்பு. புலவர்கள் உட்கார்ந்து கொண்டு பேசியதையும், அமைச்சர்கள் நின்றுகொண்டு பேசியதையும் இங்கே கூடக் கண்டீர்கள். இந்த அரசு புலவர்களுக்கு அளிக்கின்ற மரியாதை இது.

நினைத்துச் செய்யாவிட்டாலும், இயற்கையாகவே நடந்து விட்ட ஒன்று ; கழக அரசு தமிழை—தமிழ்ப் புலவர்களை எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதன் அடையாளமாக அமைந்து விட்டது என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

இந்தப் பொற்கிழி விவகாரமே மணத்தின் அடிப்படையிலே எழுந்தது. தருமி தனக்கு மணம் நடைபெற வேண்டுமென்பதற்காக ஒரு கவிதை தேவைப்பட்டு—அதைத் தேடி அலைந்து பெற்று அதனைப் பாண்டிய மன்னனிடத்திலே சேர்ப்பித்தான். மணத்தின் அடிப்படையிலே தான் அந்தக் கவிதையும் எழுதப்பட்டதாகும்.

பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டா, இல்லையா? என்ற கேள்வியின் அடிப்படையில் சர்ச்சை எழுந்து, புலவர்கள் விடை காண முடியாமல் தவித்தபோது இறையனார் எனும் புலவர், எப்படியோ அதற்கொரு முற்றுப் புள்ளியை வைத்தாக வேண்டும் என்று, 'பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டு' என்று எழுதி முடித்த ஒரு கவிதையைத் தருமி வாயிலாக அனுப்பி வைத்தார். அதற்குப் பிறகு எழுந்த போராட்டங்கள் இன்றைக்கும் விவாதத்திற்கு உரியன.

ஆனால் பொற்கிழி பற்றி அறிவிக்கப்பட்டதும் அதைப் பெற வேண்டும் என்று தருமி துடித்ததும் இரண்டும் மணத்தின் அடிப்படையில்தான். ஆனால் அந்த மணங்கள் இரு வகைப்பட்டவை, ஒன்று தருமிக்குத் தேவைப்பட்டது மணம். அதற்காக அந்தப் பொற்கிழியைப் பெற வேண்டும் என்று துடித்தான்.

அரசன் ஆரணங்கின் கூந்தலுக்கு இயற்கையான மணம் உண்டா? இல்லையா? என்பதை அறியத் துடித்தான்.

இது பற்றி இங்கே பேசிய மு. வ. அவர்கள், பஞ்சணையிலேயே இருந்து கொஞ்சிக் கொண்டிருப்பவனுக்கு இதைப் பற்றி ஆராயப் புலவர்கள் தேவைப்பட்டார்கள் என்று அழகுற எடுத்துச் சொன்னார்கள். எப்படியோ ஒரு நல்ல பாட்டு தமிழுக்குக் கிடைத்தது.

அந்த அளவில் பாண்டியனுடைய சந்தேகம் வரையறுக்கப்பட்டது. விளைவு நல்லவைகளாக இருந்தால், தொடக்கம் சிறிது பொல்லாதவைகளாக இருந்தாலும் பரவாயில்லை.

அந்த வகையில்தான், தமிழுக்கு ஒரு நல்ல பாட்டு ''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி'' என்று ஆரம்பமாகின்ற வரிகளோடு தமிழுக்குக் கிடைத்திருக்கின்றது. அந்த முதல் அடியிலேயே எவ்வளவு நயமிருக்கிறது; எவ்வளவு பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்தால், தமிழ் அருமையும், தமிழ்க் கவிஞர்களின் கற்பனைத் திறமையும் தெளிவாக விளங்கும்.

''கொங்குதேர் வாழ்க்கை'' என்பதைப் படிக்கின்ற பலரும் அதன் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டிருப்பார்களோ என்கின்ற ஐயம் எனக்கு உண்டு. 'அஞ்சிறைத் தும்பி' என்பதற்கு, அழகான சிறகுகளைப் படைத்த தும்பி அல்லது வண்டு என்று பொருள் கொள்கிற நேரத்தில், அதற்கு அடைமொழியாக அமைந்திருக்கிற ''கொங்குதேர் வாழ்க்கை'' என்பது எதைக் குறிப்பிடுகிறது?

'கொங்கு' என்றால் என்ன? 'தேர்' என்றால் என்ன? 'வாழ்க்கை' என்றால் என்ன? என்று பதம் பிரித்து, 'கொங்கு' என்றால் கோவை மாவட்டத்தைக் குறிப்பிடுவது; 'தேர்' என்றால் திருவில்லிப்புத்தூரிலே கவிழ்ந்ததே, அதைக் குறிப்பிடுவது; 'வாழ்க்கை' என்றால் நாம் எப்படியோ நடத்திக் கொண்டிருக்கிறோமே அதைக் குறிப்பிடுவது என்று கூட எண்ணிக் கொள்ளலாம்.

ஆனால்,



மாண்புமிகு
டாக்டர். கலைஞர்
முதல்வர்

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்ற அழகான வரி எதைக் குறிப்பிடுகிறதென்றால், பூவிலே இருக்கிற தாது இருக்கிறதே, அதைத் தேர்ந்தெடுக்கின்ற வாழ்க்கையைக் கொண்ட அஞ்சிறைத் தும்பி.

அஞ்சிறைத் தும்பி என்கிற நேரத்தில், அழகான சிறகுகளைப் படைத்த தும்பி என்றும் சொல்லலாம்; வண்டினுடைய சிறகு அது பறக்காமலிருக்கும்போது, மற்ற பறவைகளுக்குத் தெரிவதைப் போல், வெளியே தெரிவதேயில்லை; அது அகத்திலேயே இருக்கிறது. அதோடு ஒட்டி விடுகிறது; ஆகவே, அது 'அஞ்சிறைத் தும்பி' என்றும் பொருள் கொள்ளுகின்றார்கள். இவ்வளவு அரிய விளக்கங்கள் பொதிந்தது அந்த ஒரு வரி.

தருமிக்கு இறைவன் எழுதிக் கொடுத்ததாகக் கூறப்படும் அந்தப் பாடலின் கதாநாயகனாக வண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் மணத்தைப் பற்றியது. அது கூந்தலுக்கு உண்டா? இல்லையா? என்கின்ற சர்ச்சை.

நாம் அந்த ஆராய்ச்சியில் இறங்கத்தேவையில்லை. ஏனென்றால், இறைவன் நக்கீரனைப் பார்த்துக் கேட்ட கேள்விகள், அப்படி ஆராய்ச்சியிலே இறங்குபவர்களைச் சிக்கலிலே ஆழ்த்திவிடும்.

மணம் இல்லை என்று சொன்னால், 'உடனே இறைவன் 'உத்தமமான பெண்களுடைய கூந்தலுக்குக்கூட இல்லையா?'' என்று கேட்கிறார். ஆமாம் இல்லை என்கிறார் நக்கீரர்.

கதையைச் சொல்கிறேன்.

பிறகு, தேவ மாதர்களுக்கும் இல்லையா? என்கிறார். 'இல்லை' என்றே சொல்லுகிறார் நக்கீரர்.

'உமையவளின் கூந்தலுக்கும் மணமில்லையா?' என்று கேட்கிறார்.

நக்கீரர் 'இல்லை' என்றே கூறுகிறார்.

பிறகுதான் சிவனுக்கு ஆத்திரம் வருகிறது. சாபமிடுகிறார். பொற்றாமரைக் குளத்திற்குப் போய் சாப விமோசனம் பெறுகிறார் நக்கீரர் என்றெல்லாம் கதை முடிகிறது.

'இல்லை' என்றோ 'உண்டு' என்றோ வாதிப்பது இரண்டுமே நாம் இப்போது விஞ்ஞான ரீதியிலே ஆராயப் புகுந்தால், நம்முடைய குடும்ப வாழ்க்கையே கெட்டுவிடக் கூடும்.

நாம், கூந்தலுக்கு மணம் இருக்கிறதா? இல்லையா? என்று ஆராய்ந்து, 'உத்தமமான பெண்கள் கூந்தலுக்கு மணம் இருக்குமென்று சிவனே சொல்லியிருக்கிறாரே, இங்கு அந்த மணம் இல்லையே என்ன காரணம்' என்கிற சங்கடத்திலே ஆழ்ந்தால் மண மலர்த் தோட்டத்திலே தென்றல் நுழைவதற்குப் பதிலாக மனம் என்ற தோட்டத்திலே புயல் நுழைந்துவிடக் கூடும்.

ஆகவே அந்த ஆராய்ச்சி தேவையில்லை. வண்டு அதிலே கதாநாயகனாக ஆக்கப்பட்ட காரணம் என்ன?

இலக்கியங்களில், இந்த வண்டு காதலர்களின் நட்புக்காகப் பயன்பட்டிருக்கிறது.

'வண்டோச்சி மருங்கணைதல்' என்று கூறுவது உண்டு. காதலியின் கூந்தலுக்கு மேல் வண்டு பறந்து கொண்டிருக்கிறதாம்; அதைத் தட்டி விடுவதைப் போல வந்து அவளைத் தொட்டுப் பார்க்கிறானாம்.

வண்டு மணத்தை உணரக் கூடிய சக்தி படைத்தது. எப்படி?

சீவக சிந்தாமணியில், குணமாலைக்கும் சுரமஞ்சரிக்கும் தாங்கள் தயாரிக்கும் சுண்ணத்தில் எந்தச் சுண்ணம் உயர்ந்தது என்ற போட்டி ஏற்படுகிறது. சீவகனிடத்திலே வழக்கைக் கொண்டு போகிறார்கள். அவன் இரண்டு சுண்ணத்தையும் எடுத்துப் பார்த்து விட்டு, தானே தீர்ப்பளிக்காமல், ஒரு சரியான சாட்சியத்தை வைத்துக்கொண்டு தீர்ப்பளிக்க முயன்று, இரண்டு சுண்ணத்தையும் தனித் தனியாக வாரி வீசுகிறான். குணமாலை தயாரித்த சுண்ணத்தில்தான் வண்டு மொய்க்கிறது. வண்டு நுகரத் தக்க தகுதியான மணம் குணமாலை தயாரித்த சுண்ணத்திலேதான் இருக்கிறது என்று சீவகன் தீர்ப்பளிக்கிறான் என்கிறது சீவக சிந்தாமணி.

ஆகவே இந்த மண ஆராய்ச்சிக்கு வண்டுகள் சரியான சோதனைக் கருவிகள் என்ற காரணத்தாலேதான், 'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' என்ற இப்பாடலிலும், காதலன் வண்டைத்தான் கேட்கிறான். 'வண்டே, நீ எத்தனையோ மலர்களையெல்லாம் பார்த்திருக்கிறாய்; அந்த தாதுக்களை நுகர்ந்திருக்கிறாய்! ஆனால் இவளுடைய கூந்தலைவிட மணமுள்ள மலர்களை நீ கண்டதுண்டா? நுகர்ந்ததுண்டா? என்று.

பாட்டிலேகூட, இறையனார் மிகத் தந்திரமாக, பெண்ணின் கூந்தலுக்கு மணம் உண்டு, அல்லது இல்லை என்று அந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்காமல், ஒருவன் கேட்பதைப் போலக் கேட்டுப் பாட்டை முடிக்கிறார்.

அப்படிப்பட்ட ஒரு அருமையான பாடல் இந்தப் பொற்கிழி மூலமாக, பாண்டியனுக்கு ஏற்பட்ட ஐயத்தின் மூலமாக, தருமிக்கு ஏற்பட்ட திருமண ஆசை காரணமாக, இறையனார் எழுதித் தந்ததாகச் சொல்லப்படுகிற அந்தக் கவிதை நம்மையெல்லாம் மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தில் ஆழ்த்தத் தக்க வகையிலே அமைந்திருக்கிறது.

இதுபோன்ற கவிதைகளை நாட்டிலே பரப்ப, வரலாற்றை மீண்டும் மக்களுக்கு நினை

லூட்ட, நம்முடைய தமிழிலக்கியங்களை மீண்டும் பாமரர்களுடைய மத்தியிலே கொண்டு வந்து நிறுத்த, தமிழ் மன்னர்களின் வீர வரலாறுகள், புலவர்களின் வரலாறுகள் ஆகியவைகளையெல்லாம் மக்களிடத்திலே கொண்டு வந்து நிறுத்த, இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளின் பல்வேறு கட்டங்களிலே நடைபெற்று வருகிற முயற்சிகளிலே ஒன்றுதான், மதுரைக் கோயிலிலே நடக்கிற இந்த விழா என்று சொன்னுல் மிகையாகாது.

இது கோயில் விழா அல்ல, கோயிலிலே நடைபெறுகிற விழா.

இடைக் காலத்திலே தமிழுக்கு இவ்வளவு பெருமை அளிக்கப்பட்டதா? புலவர்கள் இவ்வளவு போற்றப்பட்டனரா? என்றெல்லாம் இங்குப் பேசிய குன்றக்குடிஅடிகளார் கேட்டார்கள்.

அன்று மன்னராட்சி, இன்று மக்களாட்சி என்று வேறுபாடு இருந்தாலும்கூட, அன்றும் தமிழாட்சிதான் நடைபெற்றது. இன்றும் தமிழாட்சிதான் நடைபெற வேண்டும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் நமக்குக் கிடையாது.

அந்தத் தமிழாட்சி, தமிழராட்சி நடைபெறத்தான் இன்றைக்கு நாம் பாடுபட்டு வருகின்ருேம்.

எவ்வளவு இன்னல்கள் வந்தாலும், அந்தக் காலத்து மன்னர்கள் தமிழை இகழ்ந்ததில்லை ; தமிழுக்குத் தர வேண்டிய மரியாதையைத் தரத் தயங்கியதில்லை.

தம்பி அமணன், குமணனின் தலையையே கேட்கிருன். கொண்டு வந்து கொடுப்பவர்க்குப் பத்தாயிரம் பொற்காசுகள் பரிசளிக்கப்படும் என்று பறையறிவிக்கிருன்.

வறுமையில் வாடுகிற ஒரு புலவர் குமணனைக் காட்டிலே சந்திக்கிருர். காட்டிலே வாழுகிற அந்த நிலையிலும் குமணன்,

''அந்தநாள் வந்திலை
அருங்கவிப் புலவோய்!
இந்தநாள் வந்துநீ
நொந்தெனை அடைந்தாய்
தலைதனைக் கொண்டுபோய்த்
தம்பிகைக் கொடுத்து
விலைதனைப் பெற்றுஉன்
வறுமைநோய் களையே''

என்று கூறுகிருன். தலையைக் கொண்டு வந்தால் பத்தாயிரம் பொன் என்று, அந்தக் காலத்திலேயே அப்படியெல்லாம் பறையறிவித்திருக்கிருர்கள். தலைக்கு விலை வந்தது.

ஆனல் அவர் தமிழரல்லவா? தமிழ்ப் புலவரல்லவா? அவர் தலை போல ஒன்றைச் செய்து கொண்டு போய் அமணனிடத்திலே காட்டி, தானுடா விட்டாலும் தன் சதையாடும் என்கிற உணர்வை எழுப்பி, இரு உடன்பிறப்புகளையும் ஒன்று சேர்த்தார்.

இன்னெரு தமிழ்ப் புலவர், நப்பசலையார், மிகுந்த நட்பு பாராட்டிய மன்னன் கிள்ளி வளவன் மாண்டுவிடுகிருன்.

புலவருக்குப் பெரும் ஐயமே ஏற்படுகிறது. 'இவனை யாராலும் கொல்ல முடியாதே ; இவனுடைய உயிர் எப்படிப் போயிருக்கும்?' என்கிருர். தனக்குத்தானே! அந்தக் கேள்வி பாடலாக எழுந்து, விடையும் வருகிறது.

''செற்றன்று ஆயினும்
செயிர்த்தன்று ஆயினும்
உற்றன்று ஆயினும்
உய்வின்று மாதோ!
பாடுநர் போலக்
கைதொழுது ஏத்தி
இரந்தன்று ஆதல்வேண்டும்''

இதுதான் அந்தப் பாடல்.

'இவனை எதிர்த்தோ, உறவாடியோ இவனுடைய உயிரை எடுக்க முடியாதே; யாராலும் காலனுலும் பறிக்க முடியாத இந்த உயிர் எப்படிப் போயிற்று?' என்று கேட்டுவிட்டு, 'எமன், பாடுகின்ற புலவனைப் போல வந்து, அவர் கேட்கின்ற பல நன்கொடைகளில் ஒன்ருக, உன்னுடைய உயிரைக் கொடு என்று கேட்டிருப்பான். காலனைக் கவிஞன் என்று கருதிக் கிள்ளி வளவன் தன்னுடைய உயிரைக் கொடுத்திருப்பானேயன்றி, அவனை யாரும் கொன்றிருக்க முடியாது'' என்று விடையளித்துப் பாடுகிருர்.

இது கற்பனையாக இருந்தாலும், எந்த அளவிற்கு அந்த மன்னன் புலவர்களிடத்திலே அன்பு கொண்டிருந்தான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற கவிதை இது.

தந்தையும் மகனும் சண்டையிட்டுக் கொண்டாலும், புலவர்கள் தமிழ் மரபிற்கு ஏற்ப இடையிலே நின்று இருவரையும் சமாதானப்படுத்தினுர்கள் ; அண்ணனும் தம்பியும் போரிட்டுக் கொண்டாலும், இடையிலே நின்று சமாதானப்படுத்தினுர்கள் ; அதுதான் தமிழ் மரபு என்று இங்கு பேசிய மு.வ. அவர்கள் குறிப்பிட்டார்.

ஆனல் வாலியும் சுக்ரீவனும் சண்டையிட்டுக்கொண்ட போது, ''நீங்கள் சண்டையிடுங்கள்; மறைந்திருந்து அண்ணனைக் கொல்லுகிறேன்'' என்று சொன்ன இராமனையும் நாம் இன்றைக்குத் தமிழ் மரபாகத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிருேம்.

இராமனும் ஒரு தமிழ்ப் புலவனுக இருந்திருந்தால் வாலியையும் சுக்ரீவனையும் சந்தித்த நேரத்தில், இருவரும் ஒற்றுமையாக இருங்கள் என்று உபதேசித்திருப்பான். பாவம், இராமன் புலவனுக, தமிழ்ப் புலவனுக இல்லாத காரணத்தால் அப்படி ஆகிவிட்டான்.

இராமனுக்குப் பதிலாக அந்த இடத்திலே கம்பர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பார் என்று கருதுகிறீர்கள்? இருவரையும் ஒன்ருக்கி மகிழ்ந்திருப்பார்.

கம்பனைப் போன்ற ஒரு புலவன் வராமல், இராமனைப் போன்ற ஒரு மன்னன் வந்த காரணத்தால், சண்டையை அதிகமாக்கி, தானே முன்னின்று, மன்னிக்கவும், மறைந்து நின்று அந்த யுத்தத்தை முடித்தார்.

**புறநானூற்று வரி நினைவுச் சின்னங்கள்**


இன்றைக்குத் தமிழகமெங்கனும் புறநானூற்று வரிகள் இடம் பெற வேண்டும். அவை ஏடுகளிலே இருந்தால் மாத்திரம் போதாது. நிலையான நினைவுச் சின்னங்கள் இருந்தாக வேண்டுமென்ற அடிப்படையிலே தான் நாம் ஒக்கூரிலும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் பிறந்த ஊருக்கு அருகாமையிலும், ஓரிடத்தில் ஓர் மலைக் குகையிலும் ; பறம்பு மலையிலும் புறநானூற்றுச் செய்யுட்களைச் செதுக்கி வைத்து, யார் யார் பாடினுர்கள் என்கிற விளக்கங்களையும் தந்திருக்கிறேம்.

அதைப் போலவே இன்றைக்கு மதுரை மூதூரில், ஐயூர் முடவனர் எழுதிய பழங்காலத்துப் புறநானூற்று வரிகள் செதுக்கப்பட்ட கல்வெட்டையும் நான் திறந்து வைத்து இருக்கிறேன்.

உள்ளாட்சித் துறை மூலமாக ஆங்காங்கு உள்ள ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் ஆகியவற்றிலெல்லாம், அவைகளின் தலைவர்கள், அங்குள்ள உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், ஆகியவர்களின் துணையோடு அடிகளார் அவர்களுக்கு உறுதுணை நின்று இப்படிப்பட்ட சங்க காலப் பாடல்கள், இயற்றியவர்களின் பெயர்கள் நாட்டப் பெறும் என்பதனை இந்த விழாவிலே நான் மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தென்னரசு அவர்கள் முன்மொழிந்து, பல்கலைக் கழகத் துணைவேந்தர் மு.வ. அவர்களால் வழிமொழியப்பட்டிருக்கிற கண்ணகி நினைவுச் சின்னமும், தகுதியான இடத்தில் உரிய நேரத்தில் இங்கே நிறுவப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[மதுரையில் 14—9—74 அன்று நடைபெற்ற பொற்கிழிப் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை. —ஆசிரியர்]



அருள்மிகு கந்தசாமி கோயில் வசந்தமண்டபம் அறக்கட்டளையின் சார்பில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் படத்தைச் சென்னை மாவட்டத் தி.மு.க. செயலாளர் ஆர். டி. சீத்தாபதி திறந்துவைப்பது. உடன் மாண்புமிகு அமைச்சர், அறநிலைய ஆணையர் அவர்களும். உடன் இருப்பது சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. ந. கணபதி, B.A., B.L.

# இறைவனின் நீதி மன்றங்கள்

கண்ணதாசன்

## 2. மொபைல் நீதிபதி

உலவும் ஆவிகள் பற்றி 'அர்த்தமுள்ள இந்து மதம்' புத்தகத்தில் நான் ஏற்கனவே கூறியுள்ளேன். அந்த வகை ஆவிகளே 'குட்டிச் சாத்தான்' போன்றவை.

ஆசை நிறைவேருமல் இறந்த உயிர்களும், தற்கொலை செய்து கொண்ட அல்லது கொல்லப் பட்ட உயிர்களும் குட்டிச் சாத்தான்களாகின்றன என்பது என் கருத்து.

ஒரு சில சாத்தான்கள் நல்லது செய்கின்றன.

பலவந்தமாகக் கொல்லப்பட்டவர்களின் ஆவிகள் பழி வாங்குகின்றன.

சத்தியசாயிபாபா என்பவரைப் பற்றிக் கூறப்படும் தகவல்கள், அவர் பல குட்டிச் சாத்தான்களை ஏவலுக்கு அமர்த்திக் கொண்டவர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

அவரது தலைமயிர் திடீரென்று இரும்பு போல் இருக்குமாம். யாராவது அதைத் தொட்டால் கை யெல்லாம் ரத்தமாகி விடுமாம்.

திடீரென்று அவர் விபூதி கொடுப்பாராம்; வெறும் கையிலேயே விபூதி வருமாம்.

பிறரது கனவில் ஊடுருவும் சக்தி அவருக்கிருக்கிறது என்பது உண்மை.

குட்டிச் சாத்தான்கள் மூலமாகவே அப்படி ஊடுருவ முடிகிறது என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய கனவிலும் அவர் இரண்டு முறை ஊடுருவினர்.

முதல் முறை வந்த கனவில் சத்திய சாயிபாபா அமர்ந்திருக்கிருர். நான் கைகளால் ஊர்ந்து அவர் அருகே செல்கிறேன்.

இரண்டாவது கனவில் சத்திய சாயிபாபா அமர்ந்திருக்கும் கட்டிடத்துக்குள் ஒரு கரண்ட் என்னை இழுக்கிறது; நான் அதை எதிர்த்துப் போராடுகிறேன். கிருஷ்ணு!! கிருஷ்ணு!! என்று நான் சத்தமிடுகிறேன். அந்தக் கரண்ட் என்னை விட்டுவிடுகிறது.

சத்தியசாயிபாபா செய்வதாகச் சொல்லப்படும் காரியங்கள் அனைத்துமே சித்து, வேலையாகவே எனக்குத் தோன்றுகின்றன.

இதேபோல் பன்றிமலை சுவாமிகளைப் பற்றியும் ஏராளமான கதைகள் கூறப்படுகின்றன.

அவரை ஒரு நாள் நான் பார்க்கப் போனேன்.

அங்கிருந்த ஒரு மலர் மாலையிலிருந்து ஏழு எட்டு மலர்களை உருவிக் கைக்குள் தேய்த்தார். உடனே அனைத்தும் திருப்பதி அட்சதைகளாக மாறின.

அவர் பாம்பு என்று ஒரு காகிதத்தில் எழுதி வைக்கிருர், அதை நீங்கள் விரலால் தொட்டால் விஷம் ஏறுகிறது.

நெருப்பு என்று எழுதிவைக்கிருர்; தொட்டால் சுடுகிறது.

சந்தனம் என்று எழுதி வைக்கிருர்; தொட்டால் மணக்கிறது.

ஆங்கிலத்தில் கட்டுரை எழுதும் அளவு அவர் வல்லுநர் அல்ல.

நீங்கள் ஏதாவது ஒரு விஷயம் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரை எழுதித் தரும்படி அவரிடம் கேட்டால், அவர் 'முருகா' என்பார். எங்கிருந்தோ டைப் அடிக்கப்பட்ட காகிதங்கள் வந்து விடுகின்றன.

திட்டவட்டமாகக் குட்டிச் சாத்தான் ஏவல் கொண்டவர் அவர் என்றே நான் கருதுகிறேன்.

கோவை ஜெயில் ரோடில் 1950-ம் ஆண்டில் நான் தங்கியிருந்தபோது என்னிடம் ஒரு சாமியார் வந்தார். அவர் இரண்டு ரூபாய்கள் தாம் என்னிடம் கேட்டார். கொடுத்தேன்; அவர் ஒரு தாயத்துக் கொடுத்தார். ஒரு காகிதத்தில் 'நல்லது நடக்கும்' என்றும், இன்னொரு காகிதத்தில் 'தீமை நடக்கும்' என்றும் எழுதித் தூரத்தில் வைத்தார். நாலடி தூரத்தில் தாயத்தை வைத்தார். தாயத்து ஊர்ந்து சென்று நல்லது நடக்கும் என்ற காகிதத்தில் ஏறிற்று.

ஏதோ ஒரு ஆவியை அடக்கி வைத்திருப்பவர் போலிருக்கிறது அவர் செய்கை.

வீதியிலே விந்தை காட்டுகிறவன் ஒருதுணி பொம்மையின் தலையில் அடித்தால், பார்த்துக் கொண்டிருப்பவர்கள் எல்லோருடைய தலையிலும் அடி விழுகிறது. மேலும் அவன் செய்யும் குட்டிச் சாத்தான் வித்தைகளை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

மாஜிக் நிபுணர்களும் குட்டிச் சாத்தான்களை அடக்கி யாள்பவர்களே!

இந்தச் சாத்தான்களை எதிரியின் மேல் ஏவ முடியும் என்கிறுர்கள் சிலர்.

எனக்கு அதில் நம்பிக்கை இல்லை.

சோற்றிலே மலம் வந்து விழுந்தது ; வீட்டிலே கல் விழுந்தது ; எல்லாம் குட்டிச் சாத்தான் வேலை என்று சொல்வோர் உண்டு. இவை எவ்வளவு தூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது.

ஆனுல் ஆவிகள் உலவுவதும், அவையே குட்டிச் சாத்தான் என்று அழைக்கப்படுவதும் அசைக்க முடியாத உண்மை .

இந்த ஆவிகளை எப்படிச் சிலர் அடக்கியாளுகிறுர்கள் என்ற வித்தைதான் எனக்குத் தெரியவில்லை.

குட்டிச் சாத்தான்கள் நல்லவர்களுக்கு வழித் துணையாக விளங்குகின்றன.

தீயவர்களுக்குத் தீங்கு செய்கின்றன.

இந்தச் சாத்தான்கள் வயல்களைக் காவல் செய்கின்றன.

இறைவனிடமும், மனிதனிடமும் பேசுகின்றன.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் இவை மீண்டும் பிறக்கின்றன.

மனிதர்களாகவோ மிருகங்களாகவோ தோன்றுகின்றன.

ஏழைகளுக்கு உணவு வழங்குகிறவர்கள் வீட்டையும், பிறர் கஷ்டத்தில் உதவுகிறவர்கள் வீட்டையும் இவை காவல் காக்கின்றன.

உண்மையில் இவை மொபைல் நீதிபதிகளாகவே விளங்குகின்றன.

(இதைப் படிப்பவர்கள் குட்டிச் சாத்தான்கள் பற்றிய தங்கள் அனுபவத்தை "கண்ணதாசன், 16, ஹென்ஸ்மென் ரோடு, சென்னை-17" என்ற முகவரிக்கு எழுதக் கோருகிறேன்).

தொடரும்

## அருள்திரு அரங்கநாதப்பெருமாள் திருக்கோயில்

### கீழையூர்,

நாகை வட்டம், தஞ்சை மாவட்டம்.

இத்தலம் நாகையிலிருந்து 14 கல் தொலைவில் தென்மேற்கில் வேளாங்கண்ணி வழியாக திருத்துறைபூண்டி செல்லும் பேருந்து சாலையில் உள்ளது.

''ஸ்ரீரங்கம்'' என்கிற தென் அரங்கத் தலபுராணத்தில் சொல்லப்பட்டுள்ள கீழரங்கம் (கீழையூர்), தென்அரங்கம் (ஸ்ரீரங்கம்), மேலரங்கம், வடரங்கம், ஆதிரங்கம் என்ற பஞ்ச அரங்க ே த்திரங்களுள் கீழையூர் என்கிற கீழரங்கம் மார்க்கண்டேய முனிவரால் பாடப்பெற்ற சிறப்புடைய தொன்ருகும்.

தலத்தின் வடபாலுள்ள சந்திரநதிக்கரையில் தபசு செய்த மார்க்கண்டேயர், பராசர் முதலிய முனிவர்களுக்குக் கெருடாரூடராய் சேவை சாதித்தும், பின்பு மார்க்கண்டேயருடன் திருக்கோயிலுக்கு எழுந்தருளி திருவரங்கத்தைப்போலவே சேஷ சயனத்தில் காட்சி தந்தும், பின்னர் அதிரூபவல்லித் தாயாரை மணம்புரிந்துகொண்டு சேவை, சாதித்தும், புனிதமான சந்திரநதி, பத்மத்தடாகம், காமேஸ்வரம், கிழக்கு சமுத்திரதீர்த்தம் இவைகளுடன் சேர்ந்து அமைந்துள்ளதுமான இப்புண்ணிய திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் திரு அரங்கநாதர், தன்னை வணங்கிய பக்தர்களுக்குத் தண்நோக்கால் மிக்க மகிழ்ச்சியையும் சகல நன்மைகளையும் கொடுத்துக் காப்பாற்றுகின்ருர் என்பதாக ஸ்ரீ மார்க்கண்டேய முனிவரால் பாடப்பட்டிருக்கிறபடியால், பக்தர்கள் வெள்ளமென தவருது வந்து வணங்கி எல்லா நன்மைகளையும் பெற்று உய்யுமாறு வேண்டுகிருேம்.

இக்கோயிலுக்குத் திருப்பணி முடிந்து, இறுதியாகச் சென்ற 14-6-1971-ல் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா சிறப்பாக நடந்தேறியது.

**கோ. குஞ்சிதபாதம்,**
செயல் அலுவலர்.



அருள்திரு கந்தசாமி கோயில் வசந்தமண்டபம் அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற திருக்குறள் போட்டியில் பரிசுபெற்ற மாணவிக்கு அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் பரிசளிக்கின்றார். உடன் சட்டப்பேரவைத் துணைத்தலைவர் கணபதி அவர்கள்.



சேலம் அருள்திரு சுகவனேசுவர சுவாமி திருக்கோயிலின் திருக்குளத்தை அறங்காவலர் குழுத்தலைவர் பி.எஸ். மாணிக்கம், எம்.சி., தலைமையில் அறங்காவலர் திரு. ரங்கராஜு, நிர்வாக அதிகாரி கே. ஆறுமுகம் பி. ஏ., காண்டிராக்டர் திரு. வெங்கடாசலம், அறங்காவலர் திரு. தம்மண்ண செட்டி ஆகியோர்.



அருள்திரு கந்தசாமி கோயில் வசந்தமண்டபம் அறக்கட்டளைத் திருக்குறள் போட்டிப் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்த அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களை அறக்கட்டளைத் தலைவர் நமசிவாயம் மாலை அணிவித்து வரவேற்கிறார்.

# மதுரை மீனாட்சி

இரண்டாம் பரிசு பெற்ற நூறுவரி போற்றிக் கவிதை

புலவர். அன்பு - தங்கவல்லி

**காப்பு**

மங்கையர்க் கரசி மதுரைமீ னாட்சி
சங்கத் தமிழ்க்குத் தலைவனின் நாயகி
செங்கயல் நெடுங்கட் செவ்வியை வேண்டித்
தங்குமென் நெஞ்சகம் தாளிணைக் கீழே!

**துணிவு**

திருமுகங் கண்டு திறல்கண்டு—செந்தமிழ்ப்
பொருமுகத் தெதிர்கொளப் புறப்படு கின்றேன்
நுண்ணறி வாள ரேந்திய நூற்படை
திண்ணிதா யிருப்பவென் சிற்றிள நெஞ்சும்
அங்கயற் கண்ணி அருள்வலி வதனாற்
சிங்கமாய்ச் சிலிர்த்துச் செய்யுளா யதுவே.

**கோலம்**

கோலக் குமரி குறுநகைச் சிரிப்பும்
காலைப் பசுமை கதிர்விடு மேனியும்
நீலப் பூவிழி நிகழ்த்துகாப் பியமும்
வாலை வடிவும் மறுத்தழல் வளர்க்கும்.

செந்தழல் வடிவச் சிவனவன் மொய்ம்பில்
சிந்தனை மயங்கத் திருநுதல் வியர்த்துச்
சிந்துரஞ் சிந்தச் செந்தமிழ்க் கடவுட்
சுந்தரி தோற்றம் சுடரொளி துலங்கும்

(வேறு)

வில்லேந்திய கரமுங்—கூர்
    வேலேந்திய விழியும்
சொல்லேந்திய துணிவும்—நகைச்
    சுடர்தூங்கிய இதழும்
பொல்லாங் கொடுகள்ளம்—தனி
    புரியுங்குறு நகையும்
மல்லேந்திய புயஞ்சேர்—கைலை
    மலையான் உளமீர்க்கும்.

விழிமேவிய வியப்பும்—உன்
    விரல்கீண்ட அந்நிலமும்
மொழிமேவிய தயக்கம்—மொடு
    முகமேவிய வியர்ப்பும்
அழல்மேவிய கையான்—அவன்
    அகமே வினவென்றால்
பழிமேவிய எளியேன்—மனப்
    பாழ்மேவிய திலையே.

(வேறு)

மூடி நிற்கும் விழிக ளோடு
    அன்னை கோயில் முன்பிலே
வாடி நிற்கும் ஏழை நெஞ்ச
    வாட்டம் போக்க என்மனம்

தேடி யுட்பு குந்த என்றன் தேவி
காட்டும் பேரெழில்
ஓர்நொ டிக்கு ளாகவோர்
குழந்தை யாக மாறுமே.

(வேறு)

அம்மனை யாகி அனைத்துல குந்தான்
அளித்துத் தனித்துறைவாள்—இப்
பொய்ம்மனை வாழ்விற் புன்னகை மேவும்
பொற்பை எமக்கீந்தாள்—தான்
கைம்மனை மீது கழங்கு மொதுக்கிக்
களித்துச் சிரித்தாடும்—ஓர்
அம்மனை யாகிக் கைம்மலர் மீதே
அம்மனை யாடுகிருள்.

(வேறு)

உடனமர் தோழியர் உலகநா யகிபுகழ்
அடல்படப் பாடி ஆடுகின் ருர்கள்.

(அம்மானைப் பாட்டு)

செவ்வான வண்ணற்குத் தென்மதுரை மீனுட்சி
மைவான வண்ணம்போல் வனப்பினள்காண் அம்மானை
மைவான வண்ணம்போல்—வனப்பினளே யாமாயின்
பொய்ம்மாறும் புலவர்புறம் பழியாரோ அம்மானை
புறப்பொருளாம் அவையெல்லாம் அகப்பொருள்காண் அம்மானை.

என்னன்னை இம்மீனுள் என்மக்கள் எல்லார்க்கும்
அன்னையென வேமுறைதான் அமைந்தவள்காண் அம்மானை
என்னன்னை என்பாள்தான் என்மக்க ளெல்லார்க்கும்
பின்னைமுறை யாற்பாட்டி ஆகாளோ அம்மானை?
பின்னென்ன எந்நாளும் பெரும்பாட்டி அம்மானை!

சொக்கருக்கு வாய்த்துளவெம் பிராட்டி துணையாலே
திக்கெல்லாம் பெரும்புகழைச் சேர்கின்ரு ரம்மானை
திக்கெல்லாம் பெரும்புகழைச் சேர்கின் ராமாயின்
மக்களெலாங் கேட்டு மலையாரோ அம்மானை
மலையாரே ஆயிடினும் மலையார்கா ணம்மானை.

துன்பம் அளித்துத் துயரந் தருவாள்
துணையாய் மகிழ்வென்னும்
இன்பம் அளிப்பாள் இரண்டும் ஒன்ரும்
இணைந்தே வருவதுபோல்
முன்பின் மாற்றி அம்மானை யாடும்
முறையிற் கழங்குகள் போய்
இன்பம் வந்தால் துன்பம் நானென்
றியம்பித் தொடர்வதுகாண்.

இரவும் பகலும் இறப்பும் பிறப்பும்
இணைந்தே உடனுடனுய்
விரவி வருதல் போலென் அன்னை
விரல்சேர் கழங்குகள்தாம்
விரையும்; அதன்பின் விரைந்தேபின்னுல்
விழிகள் தொடர்ந்திடவே
கரவின் மயங்கிச் சிறிய பிள்ளைக்
கனவைக் காட்டுகிருள்.

கைவழி யோடிய கண்மல ரோடு
கழங்கு சுழன்ருேடும்—உன்
மைவிழி காட்டும் மயக்கில் இறையவன்
மனமுங் களிமேவும்.
பொய்வழி கண்டு மெய்யெனக் கொண்டு
புலம்பும் எளியேனும்—உன்
கைவழி யோடும் கழங்குகள் போலக்
கடைக்கண் பெறுவேனே?

(வேறு)

சொக்கர்தமக் கினியநலத் துணைவி யானாள்
        சொற்பேச்சுக் கிளிப்பிள்ளை வண்ணமாவாள்
பக்கமென வந்திருப்போர் நெஞ்ச மெல்லாம்
        பக்குவமாய்த் தன்வசத்தில் ஈர்த்துக்கொண்டாள்
இக்கருணை எவர்செய்வார் ஐய ஐயோ
        என்றெளியேன் உயிருருகி இரங்கச் செய்தாள்
மிக்கபெருந் தனக்காரி மீனாள் இந்த
        மீன்விழியால் உலகவர்க்குத் தூண்டிலிட்டாள்.

ஆகாய வாசலிலே அண்ட மெல்லாம்
        ஆட்டுவிக்கும் எம்பெருமான் ஆட்ட ஆட்டத்
தோகைமயில் பொன்னூசல் ஆடு கின்றாள்
        சுழலுகின்ற உலகங்கள் தலைகீழ் மாறிப்
போகையிலே நான்மாடக் கூடல் மீது
        புன்னகைப்பால் நிலைபேறு புரிய வந்தாள்
மாகாளி பொன்னூசல் ஆடும் மாயை
        மணித்தமிழ்க்குச் சிறைப்படுமோ? வாவா நெஞ்சே!

(ஊசல்)

பின்னி ருந்து தோழி தள்ள
        முன்னி ருந்து தைத்துமே
தன்னி ரண்டு கால்கள் வீசிச்
        சாய்ந்து சாய்ந்து ஆடுவாள்
அன்னை தேவி ஆடு கின்ற
        ஆடல் கண்ட கண்களே
பின்னை வேறு காண்ப தற்குப்
        பார்வை நாட வில்லையே.

இங்கு மங்குஞ் சென்று சென்று
        தங்க வூசல் ஆடிடும்
பங்க யங்கள் தங்கு பொய்கைப்
        பதியில் வந்த செந்திரு
அங்க யற்கண் தேவி பக்கல்
        அன்புத் தோழி யாகவே
செங்கை கொண்டு உந்தி உந்தித்
        தெய்வ வூசல் ஆட்டுவாள்.

கைகள் கொட்டிக் கைகள் விட்டுக்
        கன்னிப் பாவை ஆடுவாள்
பொய்யு தைந்து ஞான மான
        புனித முந்த ஆடுவாள்
வைய கம்புகழ் வளர்க்கும்
        வண்மை மீன நாயகி
தெய்வ தங்கள் யாவினுக்கும்
        தேவி யாக ஆடுவாள்.

(வேறு)

இருவிழி முறுகிய கறுவொடு புகையழல்
        எழுப்பிட உயிர்ப்பொடு செந்தீ
உருமிடி யெனஎதிர் எழுமவள் புறமெலாங்
        கனலவே உலவுவள் காணாய்
செருமுகம் எதிர்கொளத் திருமுகஞ் சிவந்து
        திசையெலாம் பொடிபடச் சிரித்தே
கருமைகொள் காளியாய் எருமையின் மீதிலே
        கயற்கணி வடிவுணர் கின்றேன்.

குருதியின் அருவி பெருகிடக் குடித்துக்
        குடர்கரங் குவித்துநின் றாடிச்
செருமுகத் தரக்கர் பெருமிதமழித்துச்
        சினத்தொடு பிணக்குவை படுத்துக்

குறுவுகொள் நெஞ்சிற் களப்பலி முடித்துக்
கட்கடைக் கனலெழ விழித்துச்
செறுநரை யழித்துச் செற்றவள் மேனி
தீயெனக் காந்துவள் தேவி.

அழிப்பது வொன்றே விழுப்பமென் றுணர்ந்தே
ஆற்றுவாள் ஆற்றலின் பின்னே
கழிப்பன வாழ்விற் கடைப்படுப் பனவாம்
கட்டுகள் தூசுகள் அறுப்பாள்.
பழிப்பவர் திறத்துப் பழித்தகை முடித்துப்
பற்றறப் பற்றுக ளறுத்து
விழித்தழல் ஒன்றில் மேதினி முழுதும்
வெந்தெழச் செய்குவள் அன்னை.

நிலமிசை யூன்றித் தலைநிமிர் விசையால்
நெடிதுற நின்றிருந் துறங்கும்
அலைவறு பம்பரம் போல்வளென் அன்னை
அடற்பகை அடுதிறல் மறைத்தே
நிலைபெறு மவளாய் ஏழைமைமாந்தர்
நெஞ்சிடை எழில்வளர் கின்றாள்
மலைகலங்கிடினும் மனவுரம் குறையா
மாட்சிமை நல்கிடு கின்றாள்.

## கேசாதிபாதச் சிறப்பு

(முடி முதல் அடி வரை)

சிறுகுழந்தை இட்டவளை கோடு கள்போல்
செவியிறங்கிச் சுரிகுழலும் வெள்ளி மீனில்
மறுவெனப்பொட்டிட்டதுநேர் கரிய கண்ணும்
மங்கலஞ்சேர் திருநுதற்குங் குமமுஞ் சூழச்
சிறுவிளக்காய் மூக்குத்தி சிரிப்புக் காட்டித்
திகழ்மூக்கும் செந்தமிழ்த்தேன் பிலிற்று கின்ற
நறுமலர்போற் செவ்வாயும் நறவமூறி
நம்பனவன் விருந்துண்ணும் இதழ மிழ்தும்

வண்டுபுர ளும்மாலை யணிந்த தோளும்
வளைகுலுங்குந் திருக்கரமும் பசுங்கிள் ளையும்
கண்டசரம் மின்னுமெழிற் கழுத்துங் காழிக்
கவுணியர்க்குப் பால்சுரந்த கனகச் செப்பும்
உண்டுகாண் இல்லையடி என்று தோழி
உரைவழக்கில் முடிவில்லா மருங்கும் வாழைத்
துண்டமெனத் திரண்டவெழிற் குறங்கும் கிள்ளை
துளிமூக்குப் போற்சிவந்த அடியும் மேவி

அன்னையென நிற்கின்றாள் புலவோர் ஏற்றும்
அரியபிள்ளைத் தமிழ்த்தொட்டில் மகவா கின்றாள்
முன்னையுல கெல்லாமும் படைத்த ளித்த
முனிவற்கு மோகமனை விளக்காய் நின்றாள்
பின்னைநாட் பகைமுடிக்கச் சினந்து சீறிப்
பிழையழிக்கக் காளியெனும் பேரெ டுத்தாள்
தன்னிரண்டு விழிகளிலே தண்ணென் றூறும்
தனிக்கருணை அமுதத்தாள்; கூடல் கொண்டாள்.

(வேறு)

தொந்தோம் தோமெனத் துடியிடை முழக்கிய முழக்கும்
தந்தோம் ஓமெனச் சங்கரன் மொழியருள் வழக்கும்
வந்தோம் ஓமென முழக்கிடு கடைமணி அழைக்கும்
எந்தாய் எந்தாயென் றென்மனம் தன்னினை விழக்கும்

அழகிய விழியிடைப் பொழிகருணைச்சுழ விழுக்கும்
பழகிய மொழியிடைப் பரவசம் நதியெனச் சுரக்கும்
மழையென மழையினில் முழுகிய தெனவுடல் சிலிர்க்கும்
அழலுறு சுடரென விழியிடை ஒருநிழல் உயிர்க்கும்

கருவிடைப் புரள்கிற சிறுதலை யெனக்களி துடிக்கும்
உருவறி யாவொரு துயரிலே உள்மனம் திளைக்கும்
திருமுகச் செல்வியைச் சொல்லிலே சிறையிடத் தவிக்கும்
பொருமிய மகவெனப் புலம்பொடு கண்கணீர் துடைக்கும்

(வேறு)

செவ்வாயிற் பசுங்குதலை அசும்பூறச் சிறுசிரிப்பில்
எவ்வாயும் மாந்தர்தம திருதயத்தைக் கொள்ளையிடும்
சைவா கமவிதிக்குத் தமிழ்ஞான சம்பந்தன்
கைவாய் வெதும்பியழக் கனகமுலை தந்தவளே.

கயல்துள்ளும் குளக்கரையிற் கைபிசைந்து கண்மலர்கள்
துயர்ததும்ப நீர்துளும்பும் சம்பந்தன் தூய்தமிழ்க்கு
மயல்ததும்பி மற்றொருகால் மங்கையருக் கரசியெனப்
பயில்தந்து தமிழ்மகவின் பாசத்தாற் கனிந்தவளே.

சீகாழிக் குளக்கரையில் திருமுலைப்பா லமுதுண்டு
பாகான செந்தமிழிற் பயிலாமற் பாடுதலால்
மாகாளீ அதுகேட்க மங்கையருக் கரசியென
ஆகாயந் தோய்கூடல் அரசிருக்க வந்தவளே!

(ஏக்கம்)

கோலநெடு நான்மாடக் கூடலிலே கோபுரத்து
மேலிருக்குஞ் சிறுபுறவாய் மேனியெழில் காணேனோ
நீலநெடு விழியாளின் தோள்புரண்டு நீளுகிற
மாலையிலே ஒருசிறிய மருக்கொழுந்தாய் மாறேனோ?

ஒக்கலைத் தூக்கி உவந்து வளர்த்தெடுக்கும்
மக்கள்தமை மாண்புடைய ராக்கிமிகு வைத்ததன்பின்
பொய்க்குப்பை என்றொதுக்கிப் புனிதவதி அம்மையைப்போல்
கைக்குப்பக் கத்திருந்துள் கண்ணெழிலைக் காணேனோ?

எல்லாம் ஒதுக்கியிவை யாவையுந் தான்துறந்து
செல்லாப் பெருமிதமாம் செல்வமொன்றே சேர்த்துவைத்துப்
பொல்லாங்கு சூழும் உலகத்துப் பொய்ம்மையெலாம்
நில்லாத் தமிழ்நெஞ்சம் நீயளித்த செல்வமடி!

கைகுவித்து நிற்கின்றேன் கண்துளும்பி நிற்கின்றேன்
மெய்சிலிர்த்து நெஞ்சமெலாம் விதிர்விதிர்த்தல் காண்கின்றேன்
பொய்தவிர்த்து வாழ்க்கைப் புரைதவிர்த்த நாயகியைக்
கைதொழற்குக் காலமெலாம் கரைந்துருகி நிற்கின்றேன்.

**வாழ்த்து**

அங்கயற் கண்ணே(டு) அருள்நெறியான அறம்வளர்க்கும்
பங்கயச் செல்வி பதாம்புயம் நெஞ்சிற் பயில்தரவே
சங்கத் தமிழும் தமிழ்சேர் தலைமைப் புலவனுமாய்ப்
பொங்கு மதுரைப் புகழும் புலமையும் வாழியவே.

வாழ்க நிரந்தரம் வாழ்க கயல்விழி வாழிய வாழியவே
வாழ்வு கவின்பெறச் சூழ்துயர் நீக்குவள் வண்புகழ் வாழியவே
தாழ்வுகள் நீக்கிச் சமத்துவம் படைக்கும் தாயவள் வாழியவே
சங்கத் தமிழொடு பொங்கு மதுரை தன்புகழ் வாழியவே...

# பக்தி மாலை தொடுத்த நாபாஜி

கவியோகி சுத்தானந்த பாரதியார்.

திருவருட் பேறுபெற்ற அன்பர்கள் வரலாறுகளைத் தமிழகத்தில் தொகுத்து அளித்தவர் சேக்கிழார் நாயனார். மராட்டிய நாட்டில் தொகுத்தளித்தவர் நாபாஜீ என்னும் வைணவச் செம்மல். ஒரு காலம் கடுமையான வறட்சியும் பஞ்சமும் ஏற்பட்டு, நாட்டில் வறுமை நலிந்தது. பெற்றோர்கள் பெற்ற பிள்ளைகளைக் கூடக் காப்பாற்ற முடியாமல் அப்படியப்படி விட்டு வலசை போயினர். நாபாஜீ சிறு குழந்தையாய் இருக்கும்போது தாயார் அவ்வாறு கைவிட்டுச் சென்றாள். குழந்தை ''அம்மையே அப்பா'' என்று தன்னந் தனியாக அழத் தொடங்கியது. அக்கிரதாசர் என்னும் அருளன்பர் அக்குழந்தையை அழைத்து வந்து வீட்டு முன்றிலில் இருக்கச் செய்தார். அவர் சாதி குலம் பார்ப்பார். ஆதலால் அனாதையான குழந்தையை வீட்டிலே சேர்க்கவில்லை. வீட்டிற்குப் பல அந்தணர் வந்து உண்பர். அவர் உண்ட மிச்சிலை அந்தக் குழந்தை உண்பது வழக்கம். நல்ல திருத்தொண்டர் உண்ட மிச்சத்தை உண்டதால் நாபாஜீ தூயுற்று, அறிவுற்றுப் பொலிந்தான். சாதுக்கள் இக் குழந்தையின் ஒழுக்கத்தைக் கண்டு மகிழ்ந்து வாழ்த்துவர். அவர்கள் செய்யும் வழிபாடுகள், சொற்பொழிவுகள் எல்லாம் கண்டு கேட்டு நாபாஜீயின் அறிவு தெளிவுற்றது. கேட்டதை உள்ளத்தில் அமைத்து, நினைத்து அறிவிற் பழுத்தான் நாபாஜீ. நாளடைவில் அவனுக்கு வெகு தொலைவில் நடப்பதை உணரும் ஆற்றல் ஏற்பட்டது.

அக்கிரதாசர் ஒவ்வொரு நாளும் பெருமாளை வழிபட்டு அவன் அருளைப் பெற்று அவனை மனக்கண்ணால் பார்த்து மகிழ்வதுண்டு. ஒரு நாள் அக்காட்சிப்பேறு எய்தாமல் தாசர் திகைத்தார்; நொந்தார்; வெந்தார்; அழுதார்; புரண்டார். அதைக் கண்ட நாபாஜீ, ''சுவாமி வருந்த வேண்டாம். கடல் கொந்தளிக்கின்றது. ஒரு கப்பலில் கடவுளன்பர் வருகின்றனர். அந்தக் கப்பல் புயலிற் சிக்கி மூழ்கும் தருவாயில் அன்பர், ''ஹரி, ஹரி, அபயம், கார்வண்ணா காப்பாற்று'' என்று முறையிட்டனர். எம் பெருமான் அடியார்க்கு எளியனாய்க் கடலில் நீந்திச் சென்று கப்பலை ஓட்டி அன்பரைக் காப்பாற்றினான்'' என்றான். அக்கிரதாசர் நாபாஜீயின் அருட்காட்சியை வியந்தார். அச்சமயம் கப்பலைவிட்டு இறங்கி அருளன்பர் வந்து சேர்ந்தனர். பக்தர்களின் அற்புதக் கதைகளை அவர்கள் சொன்னார்கள். அவை நாபாஜீக்கு அரிய விருந்தாயின. திருவருளால் எழுத்தறிவும், சொல்லறிவும் பெற்ற நாபாஜீ எழுதிய நூலே பக்த மாலையாக இன்று வழங்குகிறது. ஒவ்வொரு பக்தர் வரலாற்றிலும் வாழ்விற்கு இனிய அறிவும், அறமும் செறிந்திருப்பதைக் காண்போம்.

## ஒரே பிள்ளை

''தந்தை தாய் பேணு'', ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்ற அறவுரைகள் நமக்குத் தெரியும். பெற்றோரைப் பேணாத் தீயர் துயரையும், பெற்றோரையே கடவுளாக வழிபடும் தூயர் நலத்தையும் இந்தக் கதை விளக்குகிறது.

மராட்டிய நாட்டில் மிகச் சிறந்த திருத்தலம் பண்டரிபுரம். அங்கே ஐத்வா என்ற அந்தணன் சாத்யகீ என்னும் கற்பரசியுடன் இல்லறமாகிய நல்லறம் காத்தான். அவன் எதைச் செய்தாலும் இறை வழிபாடாகச் செய்தான். அவனது சொல் செயல் சிந்தை எல்லாம் இறைவனிடம் ஈடுபட்டன. கணவனும் மனைவியும் மகப்பேற்றிற்காக எம்பெருமானை வேண்டித் தவம் புரிந்தனர். மகன் பிறந்தான். புண்டரீகன் (செந்தாமரையான்) என்று பெயரிட்டு அவனைச் செல்வமாக வளர்த்தனர் பெற்றோர். சரியான வயதில் பூணூல் போட்டுக் காயத்திரி மந்திரம் பயிற்றி, வேதக் கலையும் அளித்தான் தந்தை. பதினாறு வயதில் திருமணம் ஆனது. மாயை மயக்கியது; கற்றும் கருத்தடங்கவில்லை ; காமக் களியாட்டத்திற் சிக்கினான் புண்டரீகன். மனைவியை வஞ்சனை செய்தான்; விலை மகள் வலைப்பட்டான்; வீட்டுப் பொருளை வீணாக் கிரைத்தான், விழலுக்கிறைத்தான். தாய் தந்தையர் மனம் நொந்து நல்லது சொல்லியும் கேளான்.

## இன்பமே வேண்டும்

ஒரே பிள்ளை என்று செல்லமாக உன்னை வளர்த்தோம்.

அதற்கென்ன. ஒரே பிள்ளை இன்புறக் கூடாதா?

அட மகனே, அறம் பொருள் இன்பம் எல்லாம் இறைவன் அருளைப் பெறவே பயனாக வேண்டுமப்பா.

எனக்கு இன்பம் வேண்டும்.

நீ கருதும் விலையின்பம் கொலையின்பம் அப்பா. வேசையர் ஆசை வாழ்வை நாசமாக்குமப்பா?

நீ வாயை மூடு; எனக்கு எல்லாம் தெரியும். என் இன்பம் எனக்கல்லவா தெரியும்?

மகனே மனதைக் கடவுளிடம் வைத்து ஜபம் செய். ''ஹரி ஹரி ராம கிருஷ்ண கோவிந்த ஹரி'' என்று பாடி வணங்கு ; பிணி விலகும். சிற்றின்பம் பாடி வேசையருடன் கூடியாடிக் குலத்தைக் கெடுத்தாயே, பாவி இதற்கா உன்னைப் பெற்றோம். இப்படி நீ அழிவதைக் காணவா இன்னும் இருக்கிறோம்?

உம்மை யார் இருக்கச் சொல்வது. அப்பா அம்மா இருவரும் போங்கள். நச்சுக் கனிகளா?

எங்கேயப்பா போவோம்?

நேராக எமலோகத்திற்கு. நீங்கள் இறந்தலே என் இன்பம். நீங்கள் இருத்தலே என் துன்பம். ஒழியுங்கள். இன்றே ஒழியுங்கள், பீடைகள், கிழட்டுப் பிணங்கள்!

**காசி யாத்திரை**

அருமை மகனின் அழிமொழி கேட்டு மனம் நொந்த பெற்றோர் பாண்டுரங்கன் திருமுன்னர் முறையிட்டனர், அழுதனர். ''தீயன் திருந்துவான், கவலை வேண்டாம்'' என்ற அசரீரி எழுந்தது. அப்போது அங்கே காசிக்குச் செல்லும் வழிப்போக்கர் வந்தனர். அவர்களுடன் ஜத்துவாவும், சாத்யகியும் பயணமாயினர். பெற்றோர் சென்றபின் புண்டரீகன் அழியாட்டம் அவனையே பழி வாங்கியது. விலையுறவு வீணானது. கலையுறவு கனவானது. வஞ்சமற்ற பெற்றோரைச் செய்த கொடுமை அவனை வாட்டியது. தானும் காசி யாத்திரைக்குப் புறப்பட்டான். பெற்றோர் நடந்து சென்றனர். மகன் இரண்டு குதிரைகளை வாங்கி ஒன்றில், மனைவி, ஒன்றில் தான் ஏறி, வழிச் செலவுக்கு வேண்டியதெல்லாம் எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இன்னும் அகந்தை கரையவில்லை; வழியில் தாய் தந்தையர் கால்நோக நடந்து செல்வதைக் கண்டான். மனம் இரங்கவில்லை. மிடுக்காகக் குதிரையை முன்னே முடுக்கி விரைந்தான். ''பாண்டுரங்கா ஹரி விட்டலே'' என்று பெற்றோர் பெருமூச்செறிந்து சென்றனர்.

**குக்குட முனிவர் தவம்**

குதிரை மேல் விரைந்த இருவரும் வழி தப்பி தெற்கே ஒரு சத்திரத்தை அடைந்தனர்; அதன் அருகே குக்குட முனிவர் ஆசிரமம் இருந்தது. குக்குட யோகி வழிபடும் கடவுளர் அவரது தாயும் தந்தையுமே. இருவரையும் சிவனும் சக்தியுமாகக் கண்டு வணங்குதலே இந்த யோக முனிவரின் சாதனமாகும். காலையில் வேதப் பாசுரங்களை ஓதிப் பெற்றோருக்கு வெந்நீர்வைத்துத் திருமுழுக்காட்டி, மலர் தூவித் தீப தூபங் காட்டி வணங்கி, அவர்கள் செவி மடுக்கக் கீதை ஓதுவார் முனிவர்; பிறகு நல்லுணவு சமைத்து ஊட்டி, மிச்சில் மிசைவார்; அவர்களுக்கு ஓய்வு கொடுத்து மாலையில் நல்ல கதை புராணங்களைப் படிப்பார். இரவில் இன்னிசையுடன் இறைவன் அருளைப் பாடி இன்ப மூட்டுவார். ''மகனே நீ சுகனே'' என்று பெற்றோர் மனங்குளிர ஆசி கூறுவதைக் கேட்டு மனமகிழ்ந்து, ''கண்முன் கடவுளான தாய் தந்தையரே, சிவசக்திக் கோலமாக என்னை யாளும் கருணையமுதங்களே, உங்கள் பக்தியே என் முக்தி'' என்பார் யோகி.

**உணர்ச்சி பெற்றான்**

குக்குட முனிவர் செய்யும் தந்தை—தாய் வழிபாட்டைக் கண்டு புதிய உணர்ச்சி பெற்றான் புண்டரீகன். அகந்தை இகந்தது. அவன் உள்ளத்தில் தாய் தந்தையர் அன்பு புகுந்தது. அவர்கள் இதற்குள் காசியிலிருப்பார்கள். குக்குட முனிவரைப் புண்டரீகன் வினவினான்.

முனிவரே காசி எவ்வளவு தூரம் இருக்கும்.

காசியா! இதோ என் பெற்றோர் திருவடியே காசியும் ராமேசுவரமும். பெற்றோரே எம்பெருமான்.

நீங்கள் காசி சென்றதில்லையா?

இல்லை?

கங்கையாடியதில்லையா?

இல்லை. கங்கையும் காசியும் கடவுளும் வீடுபேறும் இதோ என் பெற்றோர் தொண்டு தான். பெற்றோரே என் கண்முன் தெய்வமாக உற்றோர்.

முனிவரே அண்மையிலிருந்தும் புண்ணியக் கங்கையில் ஆடாதிருப்பதேன்?

கங்கை, யமுனை, சரஸ்வதி எல்லாம் பெற்றோரிடம் நான் கொண்ட அன்பும், ஆர்வமும், அரும் பணியுமே.

இவ்வாறு சொல்லி முனிவர் பெற்றோருக்கு இரவில் காலைப்பிடித்துவிட்டு, உறங்கச் செய்து நிட்டை கூடினார். புண்டரீகன் திண்ணையில் படுத்து உறக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான்.

**மூன்று பெண் சக்திகள்**

அப்போது மூன்று பெண்கள் நீர்க்குடத்துடன் வந்தனர்; அவர்கள் மேனி அழுக்கடைந்து இருந்தது. அவர்கள் குக்குடாசிரமத்தைக் கூட்டி மெழுகிக் கோலம் இட்டு மலரணி செய்து உறங்கும் முனிவரையும் தாய்தந்தையரையும் வணங்கினர். உடனே அவர்கள் அருள்—அழகு பெற்றுப் பொலிந்தனர். புண்டரீகன் இவற்றை எல்லாம்வியப்புறக் கண்டு அவர்களை மறித்து வினவினான்.

பெண்மணிகளே நீவிர் யாவர்? என்னிடம் பேசிச் செல்வீர்?

அட பாவி டே பாதகா? தீதகா, உன் முகத்தைக் காணக் கூசுகிறோம். நீ மூடன். முரடன், முட்டாள், பாவி . .

அடியாத்தா, என்ன கோபம். ஏன் இங்கு வருகிறீர்கள்? இந்தக் குக்குடரை ஏன் வணங்குகின்றீர்? அவர் பெருமை என்ன?

உன் மூஞ்சியைப் பார்க்கவா வந்தோம். பாவி, பதிதா, மூதேவி.

அம்மாக்களா என் மேலே பாய வேண்டாம். உங்களை வணங்குகிறேன். நான் பாவி தான். அப்பாவி . .என்மேல் இரக்கங்கொண்டு குளிரப் பேசுங்கள் அம்மா? என் பாபம் போக வழி சொல்லுங்கள். ஆணுக்கு இரங்குவீர் பெண்ணணங்குகாள்.

நீ கெட்ட கேட்டுக்கு இரக்கமா? குக்குட முனிவர் காலில் விழுந்து தூசியைத் தலையில் பூசு! அவர் பெருமை என்ன தெரியுமா? அவருக்குத் தாய் தந்தையரே தெய்வம். வேறு கடவுளை அவர் அறியார். தாய் தந்தையர் சேவையே தவம்; வேறு தவம் அறியார். அவர்களுக்கு ஊனுடையளித்து மகிழ்விப்பதே வழிபாடு; வேறு வழிபாடறியார்; அவர்கள் திருவடியே காசி, அவர்கள் மனமகிழ் ஆசியே கங்கையாடல்; வேறு கங்கையை அறியார். அதனால் அவர் வாழ்வு மாசற்றது, தேசுற்றது.

அப்படியா.. சரி, நீங்கள் இங்கே வந்து, உழவாரம் செய்வதேன்?

உனக்குப் புத்தி வரத்தான். பெற்றோரைப் பணியும் பிள்ளையின் தவமே தவம். நீபெற்றோர் மனம் நோக நடந்து பெரும் பாபம் சுமந்தாய்.

இப்போது புத்தி வந்தது. பழைய பாவத் திற்குப் பரிகாரம் என்ன? நீங்கள் இங்கேன் வருவதோ!

சும்மா கேள்வி கேட்டு நைக்கிறாயே. உன்னைப் போலப் பாவிகள் வந்து மூழ்கி மூழ்கி அழுக்கும் பிழுக்கும் சுமந்து வருந்துகிறோம். இங்கே இந்த முனிவர் பணி செய்தே நாங்கள் தூய்மையுறுகிறோம். நாங்கள் யார் என்று முனிவர் சொல்லுவார்.

முனிவரை வணங்கி மூவரும் சென்று மறைந்தனர்.

புண்டரீகன் மாறிப் பிறந்தான். குக்குட முனிவரை வணங்கி முன் செய்த பிழைகளுக்கு வருந்திக் கண்ணீர் விட்டு நின்றான். முனிவர் கண்ணீரைத் துடைத்துக் குழந்தாய் இப்போது வந்து சென்ற பெண்கள் கங்கை, யமுனை, சரஸ் வதி ஆகியோர். அவர்கள் பல தீயர் முழுகுவ தால் அழுக்குற்று இங்கே வந்து பணி செய்து தூயராகின்றனர். இங்கே நாம் செய்யும் தவம் ஒன்றே—பெற்றோரைப் பேணுதல்.

''இளமையிலே பெற்றோர்
இயற்றியதை மைந்தர்
முதுமையிலே செய்யன்முறை.''

''அன்னை அளித்தவுடல்
அன்னை அளித்த உயிர்
அன்னை அருட்பணிக்கே யாம்''

தந்தை சிவம், தாய் சக்தி. இந்த சிவ சக்தி வணக்கமே எனது தவம்.

குரு தேவா. பெற்றோருக்குப் பெருந்துயர் விளைத்தேனே. அந்தப் பாவத்திற்குக் கழுவா யென்னவோ? என் மனம் வருந்தித் துடிக் கிறதே.

அன்பா, போனது போகட்டும். நீ உடனே காசிக்குச் செல். அங்கே மணிகர்ணிகா கட்டத் தில் அவர்களைக் காணலாம். அவர்கள் காலில் விழு; மன்னிப்புக் கேள். இனி அவர்கள் பணியில் அன்பூன்று.

புண்டரீகன் முனிவரை வணங்கி ஆசி பெற்றான்.

முனிவரே வணக்கம்-சிவன்
முத்தரேவணக்கம்; சொல்லில்
இனியரே வணக்கம்—பெற்றோர்
இறைவரென் றன்பு செய்யும்
புனிதரே வணக்கம்-என்றன்
புன்மைதீர்த் தருளிச் செய்த
தணியரே வணக்கம்-தந்தை
தாயரே மிக வணக்கம்!

என்று வணங்கிக் குதிரையேறி நேராகக் காசி சென்று புண்டரீகன் மனைவியுடன் பெற்றோரைக் கண்டுவணங்கினான். வழிபட்டான். பிழைகளுக்கு வருந்தினான். அவர்களைக் குதிரை மேல் வைத்து நடத்தினான். வீடு சேர்ந்ததும், பெற்றோர் வழிபாடே தவமெனப் புரிந்தான். அவர்கள் உண்ட மிச்சமே உண்டான். மனம் மகிழ்ந்தது; இனம் மகிழ்ந்தது.

## விட்டல் ஹரி தரிசனம்

ஒரு காலம் துவாரகையிலிருந்து உருக்கு மிணி தேவி பண்டரிபுரம் வந்து தவம் புரிந் தாள். அவளைப் பார்க்கக் கண்ணன் வந்தான். உருக்குமிணியைப் பார்த்த பிறகு அன்பன் புண் டரீகன் செவ்வியைக் காண வந்தான் கண்ணன். அப்போது புண்டரீகன் பெற்றோருக்கு வழிபாடு செய்து கொண்டிருந்தான். கண்ணன் கதி ரொளி வீசி நின்றான். புண்டரீகன் செங்கல்லைப் பரப்பி அதன் மேல் நிற்கச் செய்து தந்தைக்கு மலர் தூவிப் பணிந்தான். கண்ணனும் மகிழ்ந்து புகழ்ந்து நின்றான். பெற்றோரை வழிபட்ட பிறகே புண்டரீகன் கண்ணனை வணங்கி நின் றான். விட்டல் ஹரியான் கண்ணன் அன்பா, ''கேள் வரம்'' என்றான்.

ஆயிரம் கதிரொளியழகின் சொக்கு!
அமைதிப் புன்னகை அருள்விழிக் காந்தம்
சங்கு சக்கரம் தங்கும் கைகள்
இடுப்பிலே கைகள்—இனமணிமாலை
மின்னும் மார்புடன் பொன்னணி துலங்க
வாசவன் ''அன்பா வரங்கேள்'' என்றான்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, புண்ட ரீகன் கண்ணனின் மலரடி பற்றி,

இதே இடத்தில் என்றும் இருந்து
நின்ற கோலமே நன்று நிலைத்து
பண்டரி புரத்தைப் பாலித்தருளி
ஆர்வநல் லன்பரை ஆதரித்தருளி
விட்டல் என்று விளங்கும் பெயரால்
உலகை யெல்லாம் உய்வித்தருள
வேண்டினேன் வரமே ஈண்டெனக் கருளாய்!

அன்பன் வேண்டுகோளை ஐயன் அளித்தான். செங்கல் மேலே நின்ற கோலம் அப்படியே நிலைத்தது. பாண்டுரங்க விட்டலன், பண்டரி நாதன் எண்டிசையன்பருக்கும் இன்னருள் புரி கின்றான்.

சிந்தையிற் சிவந் துலங்கும்
செய்கையில் வெற்றியோங்கும்
வந்திடு வினைகள் போகும்
வாழ்வில் இன்பம்பொங்கும்
தந்தைதாய் கடவுளென்று
தகவுறத் தொண்டுசெய்யும்
மைந்தரின் மரபு நீடு
மங்கல மாவதாமே.

புண்டரீக வரதா! ஹரிவிடலே! என்னும் ஆர்ப் புகள் எங்கும் எதிரொலிக்கின்றன.

## அந்தர் பிராணயாமம்

இது குரு மூலமாகவே பொறுமையாகப் பயிலும் ரகசியம். நீண்ட நாள் பூரா கும்பக ரேசகப் பிராணயாமம் செய்து நாடிகளில் பிராண சக்தியைச் சேர்க்க வேண்டும். பிறகு மூக்கினால் மூச்சிழுக்காமல், மூலாதார சக்தியால் உள்ளிருந்து பிராணத்தை ஆதார சக்கரங்களில் ஏற்றி உச்சியில் வைத்து உள்முகமாகவே இடா பிங்கலா நாடிகளில் இயங்கவிடுதல் அந்தர்பிரா ணயாமம் அல்லது உள்ளுயிர்ப்பு ஆகும். இதையே திருமூலர்,

உருத்தரித்த நாடியில்
ஒடுங்குகின்ற வாயுவைக்
கருத்தினால் இருத்தியே
கபாலமேற்ற வல்லரேல்
விருத்தருமே பாலராவர்
மேனியும் சிவந்திடுமே

என்று விளக்குகிறார்.

# வள்ளுவர் கடவுட் கொள்கை

வித்வான் ச. சாம்பசிவன், எம். ஏ.,

**முன்னுரை**

''அன்னை தந்த பால்ஒழுகும் குழந்தைவாய் தேன்ஒழுக அம்மா என்று சொன்னதுவும் தமிழ்; அக்குழந்தை செவியினிலே தோய்ந்த தான பொன் மொழியும் தமிழ்; புதிது புதி தாய்க் கண்ட பொருளினேடு மின்னியதும் தமிழ்; விளையாட்டுக் கிளிப் பேச்சும் தமிழ்''. இத்தகு இனிமைத் தமிழ் மொழியில் தோன்றிய எண்ணிலா நூல்களில் தன்னிகரற்றுத் தரணி போற்ற இலங்குவது திருக்குறள். வள்ளுவர் அருளிய தெள்ளுதமிழ்த் திருக்குறள், ''மொழி சுருங்கல், பொருள் விளங்கல், மொழிய இனி தாதல், நலமொழி புணர்த்தல், வழியமையோ சையிற் பொலிதல், ஆழ்ந்திருத்தல், முறை நிறுவல், மலைவு தீர்தல், மொழி விழுமியது பயத்தல், காட்டாதல்'' எனும் இப்பத்தழகும் பொலிய விளங்குவது. இத்தகு திருக்குறளில் வள்ளுவப் பெருந்தகையின் கடவுட் கொள்கை யாது என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**வள்ளுவர் காலம்**

வள்ளுவர் வாழ்ந்த காலச் சூழல் பற்றி ஓரளவேனும் அறிந்தால்தான் அவரது கடவுட் கொள்கை பற்றியும் ஓரளவு காணுதல் கூடும். திருவள்ளுவர் பற்றி ஆராய்ந்து முடிவு கட்டிய நாவலர் சு. சோமசுந்தர பாரதியார், ''மூன்றும் சங்கத்தின் முற்காலத்தே வாழ்ந்தவர் வள்ளுவர்'' என்பார். இம்முடிபு எங்ஙனமாயினும், வள்ளுவர் வாழ்ந்த காலத்தே நம் தமிழகத்தில் சமய வழிபாடு மிக்கிருந்தது என்பது தெளிவு. சைவ வைணவ சமய பௌத்த சமயங்கள் தமிழகத்தில் நிலவியிருந்தன. ஆதலின், வள்ளுவரும் இச்சமயங்களில் யாதானும் ஒன்றின்மீது பற்றுக் கொண்டவராக, அல்லது ஏதேனும் ஒன்றைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

இயற்கையில் தோய்ந்து, இயற்கையில் திளைத்து, இயற்கையையே இறைவனுகக் காணும் 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர் என்பது அனைவரும் அறிந்தது. சிவன், முருகன், திருமால், கிறித்து முதலான தெய்வங்களின் மீது பாமாலைகள் தொடுத்தவராயினும், இவர் சைவ சமயத்தவர் என்பது கண்கூடு. அவ்வாறே வான்புகழ் வள்ளுவரும் உலகம் ஒப்பக் கூடிய பொது நெறிகளையே கூறும் பான்மையின ராயினும், தமக்கென ஒரு சமயக் கோட்பாட்டைப் பின்பற்றியிருத்தல் வேண்டும் என்பது வெள்ளிடைமலை.

**கடவுள் வாழ்த்து**

வள்ளுவர் வகுத்த 'கடவுள் வாழ்த்து' எனும் அதிகாரம், அவரது கடவுட் கொள்கையை வலியுறுத்தும் அகச்சான்றாய் மிளிர்கிறது. ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை யேகினன், வேண்டுதல் வேண்டாமையிலான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமையில்லாதான், அறவாழியந்தணன், எண்குணத்தான், முதலான சொற்களால் கடவுளை வாழ்த்துகின்றுர் வள்ளுவர். இவற்றுள் 'ஆதிபகவன்' எனும் தொடர் வள்ளுவரது கடவுட் கொள்கையை அறிய ஒருவாறு துணை புரிகிறது.

'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்பது குறளின் தலையாய்த் திகழ்கிறது.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை யுடையன; (அதுபோல) உலகம் ஆதிபகவனுகிய முதலையுடைத்து என்பது பரிமேலழகர்போன்றோர் பகரும் உரையாகும். ஈண்டு ஆதிபகவன் என்பதற்கு ஆதியாகிய பகவன் என்றே பலரும் உரைகூறிப் போந்தனர். இவ்வுரை பொருந்துமா எனச் சிந்தித்தால், வள்ளுவர் கடவுட் கொள்கை பற்றித் துணியலாம்.

**சிந்துவெளி நாகரிகம்**

வள்ளுவர் வாழ்ந்த காலத்தும், அதற்கு முன்னரும் நெடும் பல்லாண்டுகளாக இந்நாட்டில் சைவ சமயம் தழைத்து ஓங்கியது என்பது வரலாறு காட்டும் உண்மை. சைவ சமயத்தில் முழு முதற் பரம்பொருளாக விளங்கும் சிவ பெருமானை உமையொருபாகனுக வழிபட்டு வரும் மரபு தொன்றுதொட்டு வருவது. சைவ சித்தாந்தத்தில் 'சக்தி' வழிபாட்டிற்கு இன்றியமையாத இடமுண்டு. மிகப் பழைய திராவிட நாகரிகம் எனப் போற்றப்படும் சிந்துவெளி நாகரிக காலத்திலேயே சிவ (பசுபதி) வழிபாடு, சக்தி வழிபாடு, இலிங்க வழிபாடு முதலியன இருந்து வந்தன என்பர் வரலாற்றுசிரியர்.

மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்களின் சமயக் கோட்பாடுகளையும் தெரிவிக்கின்றன. சக்தி வழிபாடு (Cult of the Divine Mother) மக்களிடை அதிகமாகப் பரவியிருந்தது. பிற்காலச் சத்தி வழிபாட்டு முறைகள் இவைகளை ஒட்டியவை யல்ல என்றுலும், அடிப்படைகளில்

பலத்த ஒற்றுமை காணலாம். உதாரணமாகச் 'சத்தியே படைப்பின் மூலம்' எனும் சமயக் கருத்துப் பொதுவாக அமைந்திருப்பதைக் காணலாம். சக்தியுடன் சிவனை வழிபடும் வழக்கமும் இருந்தது.

சிவ வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிந்துவெளி நாகரிகத்திலே காணப்பட்டாலும், சிந்துவெளி நாகரிகத்திலே முதலிடம் பெற்று விளங்கியது பெண் தெய்வ (அன்னை) வழிபாடே என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. சிந்துவெளி நாகரிகத்துக்குச் சம காலத்தனவான சிரியா, சின் ஞசியா, எகிப்திய நாகரிகங்களிலும் பெண் தெய்வங்கள் முக்கியமானவையாக விளங்கின. மார்சல், புதைபொருள் ஆராய்ச்சியின் விளைவாகச் சில கருத்துக்களைக் கூறுமுன்னர், சந்தா என்பவர் இவ்வுண்மையைத் தொட்டுக் காட்டியுள்ளார். அவர் கூறினர்: ''சிரியாவிலே அகத்தாத் என்னும் தத்துவமும், சின்ஞசியாவிலே சிபிலேயும், எகிப்திலே இசிஸ் கோட்பாடும் தோன்றிய அதே சமுதாய நிலையிலேதான் இந்தியாவில் சத்தி வழிபாடு தோன்றியிருத்தல் வேண்டும். சிவனே முழு முதற் பரம்பொருளாகக் கொள்ளப்பட்டாலும், இறைவன் தனது சித் சத்தியைக் கொண்டே மாயையைத் தொழிற்படுத்துவன் என்பதே சைவ சித்தாந்திகளின் கொள்கை.

**சங்க இலக்கியங்களில் உமைபாகன் :**

சங்க இலக்கியங்களில் சிவபெருமானைப் பற்றிப் பல விரிவான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன என்ருலும், உமையொருபாகனுக விளங்கும் திறம் பெரிதாகப் பேசப்படுகின்றன,

''உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்''
''நீல மேனி வாலிழை பாகத் தொருவன்''
''ஊர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே''
''பெண்ணுரு வொருதிற ஞகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்''
''..... ...... இரண்டுருவா
யீரணி பெற்ற வெழிற்ற கையன்''
''உமையொடு புணர்ந்த...வேள்வி முதல்வன்''
''உமையமர்ந் துயர்மலை யிருந்தனனுக''

வள்ளுவர், தம் காலத்திலும், தம் காலத்திற்கு முன்னரும் இந்நாட்டில் நிலவிவந்த சைவ சமயக் கோட்பாட்டை உடையவராய்த் தமது முதற் குறளில், உமைபாகனும் சிவபெருமானையே, ஆதி பகவன் என்ற தொடரால் சுட்டலாயினர் எனலாம். ஆதி என்பது உமையையும், பகவன் என்பது சிவனையும் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**சைவ இலக்கியங்களில் உமைபாகன் :**

வள்ளுவருக்குப் பின்னர்த் தோன்றிய சைவ நாயன்மார்களும், பிறருள் உமைபாகனுகிய சிவபெருமானை வழுத்தியும் போற்றியும் அருள்நிலை பெற்றனர்.

''காதில் வெண்குழை தோடு கலந்து தோன்றும்''
''மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்''
''குவளைக் கண்ணி கூறன் காண்க''
''கொங்கை பங்கன், மங்கைபங்கத் திறைவன்''
''சத்தியும் சிவமுமாம் சரிதைப் பன்மை யோனிகள்'
''மாமலை யாளுடன் கூட வீற்றிருந்த வள்ளலார்''

'அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான ஆதியை' என்னும் தாயுமானவரின் பரசிவ வணக்கத் தொடருக்கு உரை கூறவந்த புரசைச் சபாபதி முதலியாரவர்கள் 'சிற்றறிவாகிய உயிர்க்குள் அறிவாகிப் பேரின்பப் பெருக்கே தனது மயமான ஆதிசத்தியை' என்று குறிப்பிடுவர் ''சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரினெத் தொழிலும் வல்லதாம்'' என்பது சௌந்தரிய லகரி. ஐந்தொழில்களும் ஆதி சேர்க்கையால் நடக்கும் என்ருலும் சத்தியும் சிவமும் ஒன்றேயாம்.

''சிவஞ்சத்தி தன்னை யீன்றும் சத்திதான் சிவத்தை யீன்று
முவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்''
''அருளது சத்தியாகு மரன்றனக் கருணை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தியில்லை''

''எத்திற நின்ரு னீச னத்திற மவளு நிற்பள்''
''சத்திதான் ஆதி யாகும்''

என்னும் மொழிகள் இவ்வுண்மையைத் தெளிவுறுத்தும். பகலவனும் ஒளிக் கதிர்களும் போலத் தன்னியல்பில் நிற்பதும், புறம்பே நின்று உணர்த்துவதுமாகிய இரு தன்மையுடைய பேரறிவாகிய சைதன்யமொன்றே புறம்பொருளை நோக்கு நிலையிற் சத்தியெனவும், அதனை நோக்காத அறிவு மாத்திரையாய் நிற்கு நிலையிற் சிவமெனவும் வேதாகமங்கள் உணர்த்தும்.

**இகர ஈற்றுப் பெண்பாற் பெயர்கள் :**

பெண்பாற் பெயர்கள் இகர ஈற்றில் முடியலாம் என்பது இலக்கண விதி. சங்க காலத்தே ஆதிமந்தி, மாசாத்தி, பொத்தி, மாற்பித்தி, வருமுலையாரித்தி, வெண்ணிக்குயத்தி, வெண்பூதி, வெண் மணிப்பூதி, வெள்ளிவீதி முதலான பெண்பாற் புலவர்கள் வாழ்ந்தமை அறிகின்ரேம். இப்பெயர்கள் எல்லாம் இகர ஈற்றில் முடிந்தவை என்பது நோக்கத் தக்கது. எனவே 'ஆதி' எனும் சொல், உமாதேவியைக் குறிக்க வந்த இகர ஈற்றுப் பெண்பாற் பெயர் என்பது போதரும். வள்ளுவர், ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தார் என்று வழங்கிய கட்டுக் கதையிலும் ''ஆதி'' என்பது ஒரு தாயின் பெயராகக் கொள்ளப்பட்டதும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

**இல்லற நெறி ஏற்றம் :**

இனி வள்ளுவர், உமைபாகனுகிய ஒரு கடவுளை முதற் குறளில் விதந்து ஓதுவானேன் என்ற வினு எழுதல் இயற்கை. வள்ளுவர் வகுத்த திருக்குறளினுள், அறம் பொருள் காமம் எனும் முப்பால்களைத் தன்னுட் கொண்டதன்ரே? இவற்றுள் காமத்துப்பால் முழுதும் இன்பம் பற்றியது. முதற்கண் அமைந்த அறத்துப்பால், இல்லறம் துறவறம் எனும் இரு பிரிவுகள் உடையதேனும், இல்லறம் 24 அதிகாரங்களுடையது. துறவறமோ எனின், முற்கூறிய இல்லறத்தின் வழுவாதொழுகி அதன் பின் வீடுபேற்றின் பொருட்டு மேற்கொள்ளும் நெறியாம். நடுவண் அமைந்த பொருளும் இல்லறத்தின் வழிப்படுவதே. வள்ளுவர், வை

யத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளைச் சொல்ல வந்தவராதலின், இல்லறமே ஏற்ற மென ஓதினர். உலகம் வாழ, இல்லற நெறி சிறக்க வேண்டும்; இல்லற நெறிக்குத் துணை நிற்பவள் மனைவியன்றோ?

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக் கியாதுமோர் குறைவில்லை,
கண்ணில்நல் லஃ துறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'

என்பது தேவாரம். பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருப்பதாலேயே இவ்வுலக உயிர்களும் ஆண்பெண் தொடர்பால் இன்புற்றிருக்கின்றன. கவிச் சக்கரவர்த்தி செயங்கொண்டாரும் தம் கலிங்கத்துப்பரணியில், உமாபதி வணக்கத்தையே முதற்கண் இயம்பினர். இறைவன் சிவனுஞ் சத்தியுமாய் நின்று உயிர்களை இயக்காவிடில் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய் இன்பந் துய்க்கமாட்டா என்பதை மணிவாசகப் பெருந்தகை,

''தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம் பலவன்
பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ''

பெண்ணின் பெருந்தக்க யாவுள? என்று துணிந்து கேட்ட நம் பொய்யில்புலவர், பெண்ணின் நல்லாளோடு வீற்றிருக்கும் பெருந்தகை யாம் உமைபாகனை 'ஆதிபகவன்' என ஏத்துவது சாலப் பொருத்தமாகுமன்றோ?

**உரைகாரர் கூற்று :**

பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களோ, 'ஆதிபகவன்' என்பதற்கு ஆதியாகிய பகவனை என்று உரைகூறிப் போந்ததைச் சிறிது ஆராய்வோம். இறைவனுக்கு வரம்பிலா ஆற்றல்கள் உண்டு. 'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க், கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு வானாகி நின்ற' அவனை என்ன சொல்லியும் வாழ்த்தலாம். ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ'' என்பது மணிவாசகர் அணிவாக்கு. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளாக உள்ள அவனை 'ஆதிபகவன்' என அழைப்பதும் பொருத்தமே. ஆனல், ஆதியாக இருப்பவனுக்கு அநாதியும் உண்டோ என்ற கேள்வியும் பிறக்கலாம். இதனை உணர்ந்த மணிவாசகர் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி' என்றார். எனவே ஆதியாகிய இறைவன் என்பதைவிட, ஆதியில்லாத இறைவன் என்பது மிகப் பொருத்தமாகத் தோன்றுகிறது. அன்றியும் 'பகவன்' என்ற சொல்லையும் ஓர்ந்து பார்த்தல் வேண்டும். பகு, பக, பகவு, பகவன், பகல், பகலவன், பகுத்தல், பகுப்பு, பகிர், பகிர்ந்து முதலான பல சொற்களின் வடிவத்தைக் காணுங்கால், பகுத்தல் என்ற பொருளில் பகவன் அமைந்தது என்பது புலனாகும். தன் உடம்பின் ஒரு பாதியைப் பெண்ணுக்கு (ஆதி) பகுத்தளித்தவன் சிவபெருமான் ஒருவனே ஆதலின் 'ஆதிபகவன்' என்றான். எனவே ஆதியாகிய பகவன் என்று சொல்வதைவிட, உமைபாகன் ஆகிய ஆதிபகவன் என்றலே ஏற்புடைத்து எனலாம்.

**பரிதியார் உரை :**

வள்ளுவர் கடவுள் வாழ்த்தில், நற்றாள், மாணடி, அடி, தாள் முதலான சொற்களைப் பெய்திருக்கும் பான்மையை ஆராய்ந்தால், அவர் உருவ வழிபாட்டிலும் நம்பிக்கை உடையவர் என்பது தெரியவரும். அருவமும் உருவமுமாய் இருக்கும் சிவபெருமானை உருவமாய் வழிபடுதல், சைவ சித்தாந்தத்தின் சிறந்த கோட்பாடாகும். இந்த நோக்கத்தையே வள்ளுவர் நயமாகச் சுட்டினர் எனல் வேண்டும். இந் நுட்பத்தை ஓர்ந்துணர்ந்த பரிதியார், இக்கடவுள் வாழ்த்திற்கு உரைகூறுமிடத்து, 'வாலறிவன் நற்றாள்' என்பதற்குச் 'சிவன் சீபாதத்தை' என்றும், 'மலர்மிசை ஏகினன்', 'மாணடி' என்பதற்குப் 'பக்த சனங்களிட்ட புட்பத்தின்மேல் எழுந்தருளி யிருக்கும் சிவன் சீபாதத்தை' என்றும், 'இறைவன் பொருள்சேர் புகழ்' என்பதற்குச் 'சிவகீர்த்தி' என்றும், 'அறவாழி அந்தணன்' என்பதற்குத் 'தன்ம மென்னும் சமுத்திரமாயுள்ள பரமேசுவரன்' என்றும், 'எண்குணத்தான்' என்பதற்கு 'எட்டுக் குணங்களையுடைய சிவன்' என்றும், 'பிறவிப் பெருங்கடல் நீந்தார்' என்பதற்குப் 'பிறவியாகிய சமுத்திரத்தை நீந்துவர் சிவனடி சேர்ந்தார்' என்றும் கூறுதல் இக்கருத்துக்கு அரணாக உள்ளது. ''எண்குணத்தான்'' என்பதற்கு விளக்கம் கூறவந்த பரிமேலழகரும், எண்குணங்களாவன : தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது என்பதும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. எனவே, ஆதிபகவன் என்பது உமைபாகனையே குறிக்கும் என்பது தேற்றம்.

**உவமைப் பொருத்தம் :**

இனி, இக்குறளில் உவமைப் பொருத்தம் சிறிது காண்போம். ''எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன'' அதுபோல உலகம், ஆதிபகவனை அதாவது உமைபாகனை முதலாக உடைத்து என்பதே இக்குறளின் கருத்தாகும். 'அ' எனும் எழுத்தைக் கூறவந்த திருவள்ளுவர் 'அம்முதல்' என்னது 'அகரமுதல' என்பது சிந்திக்கத் தக்கது. 'அ' தானே தனித்து இயங்க வல்லது ஆயினும் அதனை வள்ளுவர், 'கரம்' என்ற சாரியை சேர்த்து, அகரம்' என்றார். கரச் சாரியை சேர்த்து 'அகரம்' என்றாலும், அஃது 'அ' என்ற ஒன்றினையே குறித்து நிற்றல் போல, உமையுடன் சேர்ந்த சிவனை 'ஆதிபகவன்' என்றாலும், சிவனாகிய முழுமுதற் பரம்பொருளையே குறிக்கும் என்பது போதரும். மேலும் அகரம் உண்டாவதற்கு 'உதானன்' எனும் காற்று உந்தவேண்டும்; அது

போலவே, சத்தியாகிய ஆதியினது தொழிற் பாட்டினுலேயே சிவனுகிய பகவனும் இவ்வு லகை இயக்குகின்றனன்.


ஆனல் பரிமேலழகர், 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்பதற்கு, 'உலகம் ஆதிபக வனுகிய முதலே உடைத்து' என்று கூறி, 'ஆதி பகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை வடநூன் முடிபு' என்றும் குறிப்பிடு வது அத்துணைப் பொருத்தமாகத் தோன்ற வில்லே. தெய்வத் தமிழில் முழு முதல் நூலே —ஒப்பற்ற ஒரு நூலே யாத்த வள்ளுவப் பெருந் தகை, தமிழுக்கே உரிய இலக்கண நெறியைப் பின்பற்ருமல், வடநூன்முடிபைப் பின்பற்றி இத்தொடரை அமைத்திருப்பாரா என ஆராய் தல் அறிஞர் கடன்.

**முடிவுரை :**

இதுகாறும் கூறியவாற்ருல், சைவ சமயம் பண்டைத் தமிழர் மேற்கொண்ட சமயம் என்பதும், இது குறித்துச் சங்க இலக்கியங்களும் பிற்கால நூல்களும் விரிவாகப் பேசுகின்றன என்பதும், உமைபாகனுகிய முன்னேர் வணங் கிய வழிபாட்டையே வள்ளுவரும் பின்பற்றித் தம் முதற் குறளில், 'ஆதிபகவன்' என மொழிந் தார் என்பதும், இதனுல் வள்ளுவரது கடவுட் கொள்கை சைவ சமயமே என்பதும் ஒருவாறு உணரலானேம்.

[இங்ஙனமே அவ்வச் சமயத்தாரும், திருவள்ளு வரைத் தமது சமயத்தவர் என்றும், திருக்குறளைத் தமது சமயத்திற்குரிய நூல் என்றும் கூறிக்கொண்டு மகிழ்வதில், இழுக்கொன்றும் இல்லே.

—ஆசிரியர். ]




சென்னை திருமயிலேக் கபாலீசுவரர் கோயிலில் நிகழ்ந்த பன்னிரு திருமுறை விழாவில் ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், நீதிபதி என். கிருஷ்ணசாமி ரெட்டியார், சென்னை வானெலி இயக்குநர் திரு. கோபால் முதலிய பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தபொழுது, ''திருக்கோயில்'' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் சிறப்புரை நிகழ்த்துதல்.

# முதற் குறள் மூதுலக உண்மைப் பொருள்

அ. கிருஷ்ணசாமி நாயுடு

## 1. திருவள்ளுவர் காலச் சமயங்கள்

திருவள்ளுவர் காலத்தில் பிரமாணவாதம் சைவவாதம் பிரமவாதம் வைணவவாதம் வேதவாதம் ஆசீவகவாதம் நிகண்டவாதம் சாங்கியவாதம் பூதவாதம் எனப் பத்து வகைச் சமயங்கள் இருந்தன என்று மணிமேகலையில், சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதையால் அறிகிறோம். அவற்றுடன் புத்தம் சைவம் ஆகிய வாதங்கள் உண்டு. இவற்றுள், வேதம் பூதவாதம் சாங்கியம் வைசேடிகம் பூர்வமீமாம்சம் தேரவாத பௌத்தம் என்பன, இவ்வுலகைப் படைக்கும் கடவுளர் எவரும் இலர் என்றும், யோகம் நியாயம் உத்திர மீமாம்சம், மகாயான பௌத்தம் இவ்வுலகைப் படைக்கும் கடவுளர் உளர் என்றும் சொல்கின்றன. இங்ஙனம் உலகைப் படைக்கும் கடவுளர் இலர் என்பவர், உலகம் எங்ஙனம் உண்டாயிற்று என்பதைப் பற்றியும், கடவுளர் உளர் என்பவர் எங்ஙனம் படைத்தான் என்பதைப் பற்றியும் தெளிவான இயற்கை விளக்கம் சொல்லவில்லை. பின்னர் உரைத்த புராணத்தாரும் தம்தம் சமயக் கடவுளர் இவ்வுலகைப் படைத்தான் என்பர். அதைப் பழந் தமிழரும் ஏற்றுக் கொண்டு,

> நீரும், நிலனும், தீயும், வளியும்
> மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
> மழுவாள் நெடியோன் தலைவனாக
>
> —மதுரைக் காஞ்சி, 453.

என்பதில் மழுவாயுதப் பரம சிவனும்,

> மணிதிகழ் உருவின் மாஅ யோயே
> தீ, வளி, விசும்பு, நிலன், நீர் ஐந்து
> ஞாயிறும் திங்களும் அரனும் ஐவரும்
> மாயோய் நின்வயின் பரந்தவை உரைத்தேன்
>
> —பரிபாடல், 3.

என்பதில் மாயோன் திருமால் உலகைப்படைத்தான் என்பர். இதற்குப் படைக்கும் கற்பனைகளாவன : கம்பர் காப்பில்,

> உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
> நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகிலா விளை யாட்டுடை யாரவர்
> தலைவ ரன்னவர்க்கே சரண் நாங்களே

என்று சொன்னதைப் போல், விளையாட்டாகப் படைத்தான் என்பர். இங்ஙனம் படைக்கப்பட்ட உயிரினங்கள் பலப்பல முறைகளில் துன்புறுவதைக் காண்பது விளையாட்டா? என்றால் இல்லை; இல்லை அருளினர் என்பர். அருளினால் ஒரே வகைப் பிறப்புக்களைக் கொடுக்காமல் பல வேறுபட்ட பிறப்புக்களை ஏன் கொடுத்தார் என்றால், அவ்வுயிர்களின் வினைகளுக்குத் தக்கபடி பிறப்புக்களைக் கொடுத்தார் என்பர். வினை இன்றேல் பிறப்பில்லை ; பிறப்பின்றேல் வினை இல்லை. எது முந்தியது என்றால், நிர்க்குணப் பிருமம் தனக்குள்ள மாயையாம் பொய்மை ஆற்றல்களால் சகுணப் பிருமமாம் இவ்வுலகு உடல் உயிர்களாகி வினைகளைச் செய்து பிறப்புக்களை அடைந்து வருகின்றது என்பர். இதில் உள்ள மாயைப் பொய்மைகளாவன.

(1) எக்குணமும் இல்லாத நிர்க்குணப் பொருள் இவ்வுலகத்தில் இல்லை. கருத்து முதல் வாதரும் தாம் கற்பனை செய்யும் அப்பாலுலகங்களிலும் சொல்லவில்லை.

(2) அப்பொய்மை நிர்க்குணப் பிரமத்திலிருந்து தோன்றிய சகுணப் பிருமம் எவற்றால் ஒன்றுக்கொன்று மேலும் கீழும் உயர்வும் தாழ்வும் பெருமையும் சிறுமையும் ஆன பலப்பல வேறுவகைப் பிறப்புக்களில் எங்ஙனம் பிறந்தது.

(3) பிறந்து வினைகளைச் செய்தது என்றால் வேறு வேறான வினைகளை நல்வினை தீவினை என எங்ஙனம் செய்தது, என்பதற்குச் சங்கரர் செய்த வரலாற்றுக் கற்பனைகளைக் காண்போம்.

அப்பாலுலகக் கடவுளைப் பற்றியும் உலகத் தோற்றத்தைப் பற்றியும் ஒன்றுமே விளக்காத புத்தமதத்திலிருந்து வேறு சமயம் கற்பனை செய்வதற்காகக் கடவுள் இல்லை என்பதை நிர்க்குணப் பிருமம் என்றனர். உலகத் தோற்றத்திற்கு முதல் காரணமான மூலப் பகுதியைப் பற்றிய விளக்கம் தெரியாமையால் நிர்க்குணப் பிருமம் என்றும், அம் மூலப் பகுதியாம் ஆதி பகவனுக்குள்ள பேரறிவு பேராற்றல்களால்

இயங்கி இயங்கி இவ்வுலகம் ஆயிற்று எனும் உண்மையை மாயை என்றும் சொல்லினர். இவை புத்த மதத்திலிருந்து வேறு சமயம் கற்பனை செய்வதற்காகச் சங்கரர் செய்தது ஆகும். இதனால் சங்கரரைப் பிரச்சன்ன பௌத்தர் என்பர்.

அன்று முதல் இன்று வரை வேறு வேறு சமயத்தார் அனைவரும் ஒன்றாக அப்பாலுலகக் கடவுளர் இவ்வுலகப் படைப்பதற்குத் துணைக் காரணம் நிமித்த காரணம் என்பர். அக்கட வுளர் உலகிற்கு முதல் காரணம் எனச் சொல்ல வில்லை. சொல்லார்—ஏன், மண் முதற்கார ணம். குடம் காரியம். குயவன் நிமித்த காரணம். குயவன் முதல் காரணமாம் மண் அல்ல. மண்ணை எவரும் இயம்பார். அங்ங னமே உலகிற்கு முதற் காரணம் அப்பாலுலகக் கடவுளர் எனச் சொல்லார், ஏன்? இவ்வுலகிற்குக் கடவுளர் முதல் காரணம் எனில் அக்கடவுளரே உலகமாய் விடுவர். இவ்வுலகம் இயற்கையாக இயங்குவதற்குள்ள பரிணாம முறைப் பேரறிவுப் பேராற்றல்களே நிமித்த காரணம் ஆகும். ஆயின் அப்பாலுலகக் கடவுளர் இவ்வுலகத் தோற்றத்திற்கு நிமித்த காரணம் என்பதைக் கருத்து முதல்வாதரே கற்பனை என ஒத்துக் கொள்வர். பெண் ஆண் அமைப்புள்ள ஆதி பகவனும் மூலப் பகுதிக்குள்ள இயற்கைப் பேரறிவுப் பேராற்றல்களால் இயங்கி இயங்கி ஐம்பூதங்களும் இவ்வுலகமும் உடல் உயிர்களும் உள்ள ஓரறிவுப் புல்செடி முதல் ஆறு அறிவு மக்கள் வரை ஆகி உள்ளது எனும் பூதவாதப் பொருள் முதல் சமயமே இயற்கை என எண் ணுவர், இயம்புவர்.

அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. அதைப்போல் உலகம் ஆதிபகவனை முதலாக உடையது.

## 2. ஆதிபகவன் பண்புத்தொகை அன்று உம்மைத் தொகை

ஆதிபகவன் இரு பெயரொட்டுப் பண் புத்தொகை, வடநூல் முடிபு என்றனர் பரிமேலழகர். இதனை உரையாளர் ஒப்பினர். தமிழ் நூல் முடிபாயின் ஆதிப்பகவன் எனப் பகர ஒற்று மிகுதல் வேண்டும். அங்ஙனம் மிகாததற்குக் காரணம் காட்டத் தெரியா மலோ, தெரிந்தும் மறைப்பித்தற்கோ வடநூல் முடிபென்றனர். ஆதிபகவன் என்பன தமிழ்ச் சொற்கள், உம்மைத் தொகை. ஆயின் இரண்டு மூன்று தனிச் சொற்கள். கபிலபரணர், சேர சோழபாண்டியர் என்பன போலப் பன்மை விகுதி அர் பெற்று ஆதிபகவர் என முடிய வேண்டியது தமிழ் நூல் மரபு. அங்ஙனமின்றி ஆதிபகவன் என ஒருமை விகுதி பெற்று முடியாதே. ஆம். உண்மை. இவ்வுண்மையைச் சிந்தித்துச் சிந்தித்துத் தெளிந்த திருவள்ளுவர் ஆதிபகவன் என்பதற்கு மட்டும் பன்மை விகுதி அர் கொடுக்காமல் ஒருமை விகுதி அன் கொடுக்க வேண்டும் எனும் முடிவிற்கு வந்த னர். எங்ஙனம் எனில்? வெவ்வேறான இரண்டு தனித் தனிப் பொருள்களுக்குப் பன்மை விகுதி கொடுத்தல் வேண்டும். அங்ஙனமின்றித் தனித் தனித் தன்மை உள்ள இரண்டு பொருள்கள் பிரிக்க முடியாமல் ஒன்றெனும் தன்மையதாக இருந்தால் அதற்கு ஒருமை விகுதி அன் கொடுக்க வேண்டும். இத்தமிழ் நூல் மரபுப் படி அன் விகுதி கொடுத்து ஆதிபகவன் என் றனர். இவ்வியற்கைச் சமயத் தமிழ் முடிபை எண்ணியே ஆரியச் செயற்கைச் சமயத்தினர் தனித் தனி தன்மையாய்ப் பிரிக்க முடியாமல் உள்ள பெண் ஆண் தன்மைகள் இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து இலட்சுமிநாராயணன், பார்வதி பரமேசுவரன் என்றனர். இன்றும் சமுதாயத்தில் கணவனும் மனைவியும் இரண்டு உடலினர் ஆயினும் ஒருமை உள்ளம் உடைய வர் என்பதற்காக இருவர் பெயரையும் சேர்த்துப் புஷ்பம்காந்தியப்பன் என்றாற்போல ஒருமை விகுதியில் சொல்கின்றனர்.

## 3. ஆதிபகவன் என்பதின் பகுபத முடிவு

ஒன்றிற்கு அடிப்படைக் காரணமாய் உள்ள தற்கு ஆதி எனப் பெயர். முப்பால், 543. ''ஆதியாய் நின்றது மன்னவன்கோல்'' என்ற தில் ''ஆதி'' என்பதற்கு 'அடிப்படை' என்பது பொருள். முப்பால் 560. 'ஆ பயன் குன்றும்' என்பதற்கு, அடிப்படை விளைவுப் பயன் குறைந்து போகும் என்பது பொருள். ஆபயன் வினைத்தொகை. ஆனபயன், ஆகின்ற பயன், ஆகும் பயன் என விரியும். இங்கு உலகத்திற்கு அடிப்படையான ஆதி எனும் மூலப் பகுதியைப் பெண்பாலாகச் சொல்லப் பெற்றது. அதற்கு ஆ பகுதி. இ பெண்பால் விகுதி. த் எழுத்துப் பேறு. முப்பால் ,187-189-ல் முறையே பகச் சொல்லி, எள் பகவு என்பதில், பகு என்பது பகுக்கக் கூடியது எனும் பொருளில் வந்துள்ள தால், பகவன் என்பதற்கும் பகு பகுதி, அன் ஆண்பால் விகுதி, வ் எழுத்துப் பேறு. இங்ங னம்.பகுத்த முடிவுகள் ஆதிபகவன் என்பதாம்.

## 4. மூலப் பகுதியாம் ஆதிபகவனே உலகின் முதல் துணைக் காரணம்

அம்மூலப் பகுதியாம் ஆதிபகவனிலிருந்து பரிணாம முறையில் தோன்றிய உலகில் உடல் உயிர்கள் எல்லாம் பெண்பால் ஆண்பால் ஆகவே உள்ளன. ஆதலால், அம்மூலப் பகுதி யும் பெண் ஆண் அமைப்புள்ளதாகவே இருக் கிறது என்பதற்காக அம்மூலப் பகுதியை ஆதி பகவன் என்றனர். மேலும் தனித் தனித் தன் மையான உடல் உயிர் இரண்டும் இரண்டென்ப தில்லாமல் பிரியாத ஒன்றாக ஆதிபகவனும் மூலப் பகுதியுள் இருப்பதாலும் இரண்டெனும் பெண் ஆண் அமைப்பும் பிரியாமல் ஒன்றெனும் தன்மையாய் மூலப் பகுதியுள் இருப்பதாலும் மூலப் பகுதியை ஆதிபகவன் என்றனர்.

ஆதிபகவனும் மூலப் பகுதி இயற்கையாகவே தனக்குள்ள பேரறிவுப் பேராற்றல்களால் இயங்கி இயங்கிப் பரிணும முறையில் ஓரறிவுள்ள புல்செடியிலிருந்து ஆறறிவுள்ள மக்கள் வரை ஆகி உள்ளது. இங்ஙனம் உலகம் தோன்றுவதற்கு இவ்வுலகுக்கப்பாலுள்ள எக்கடவுளரும் காரணரும் இலர். மூலப் பகுதியாம் ஆதிபகவன் முதற் காரணமும், உலகம் இயங்குவதற்காம் ஆதிபகவனின் பேரறிவுப் பேராற்றல்களே நிமித்த காரணம் துணைக் காரணமும் ஆகும். இதற்குச் சிலந்தி தன் வயிறு முதல் காரணமாகவும் தன் அறிவு முயற்சி நிமித்தம் துணைக் காரணம் ஆகவும் நூலை வெளியே விடுகிறது. இதை யாவரும் கண்டும் கேட்டும் உள்ளனர். ஆதிபகவனில் வைத்துத் தெரிக; தெளிக. பரிமேலழகர் ஆதிபகவனே உலகின் முதல் காரணம் என்பர்.

அகரம் ஆதிபகவற்கு உவமையாகச் சொன்னது தலைமை பற்றி வந்த எடுத்துக் காட்டுவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தால் அன்றி நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை உணர்வால் அன்றி இயற்கை உணர்வால் முற்றும் உணர்தலானும் எனும் பரிமேலழகர் : ''காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின் ஆதிபகவன் முதற்றே உலகு என உலகின் மேல் வைத்துக் கூறினுரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க'' என்றனர். மூலப் பகுதியாம் ஆதிபகவன் தனக்குள்ள இயற்கைப் பேரறிவு பேராற்றல் களால் இயங்கி இயங்கி ஐந்து பூதங்களால் ஆனது காணப்படும் உலகம். இவ்வைம்பூத உலகில் ஓரறிவுப் புல் செடி முதல் ஆறறிவு மக்கள் வரை பரிணும முறையில் ஆகியுள்ள இயற்கைப் பேரறிவுப் பேராற்றலின் காண முடியாத தன்மைகளைக் கடவுள் என்றனர். இதனுல் செயற்கை உணர்வால் அன்றி இயற்கை உணர்வால் முற்றும் உணரும் ஆதி பகவனே உலகிற்கு முதல் காரணமாகும்.

முதல் நிமித்தம் காரணமுள்ள அகரம் உவமானம், அக்காரணங்களுள் ஆதிபகவன் உவமேயம் :

தொல்காப்பியர் ஐந்திறம் எழுத்தியலில் 'அ ஆ அங்காப்புடைய' என்றபடி அங்காப்பாம் வாய் திறத்தலால் பிறக்கும் ஒலி அகரம். உயிர் மெய் உயிர்மெய் என்னும் மூவகை எழுத்துக்களும் பிறப்பதற்கு முதல் காரணமாய் அவ்வெழுத்துக்களுடன் கலந்தும் இருப்பதால் அவ்வொலி அகரம் அம் மூவகை எழுத்துக்களும் பிறப்பதற்கு முதல் காரணமாயிற்று. அம் மூவகை எழுத்துக்களும் வாய் திறக்கும் அகர ஒலியுடன் இதழ் பல் நாவு அண்ணம் மூக்கு என்பனவற்றுடன் பிறத்தலால் இதழ் நா முதலியன நிமித்த துணைக் காரணங்கள் ஆயின. அகரம் பிறக்கும் வாயும் வாயிலுள்ளனவன்றி மற்றெவற்றையும் முதல் துணைக் காரணங்களாகக் கூறவில்லை. இதனை எல்லாச் சமயத்தினரும் ஒத்துள்ளனர். அங்ஙனமே ஆதிபகவனை உலகத்திற்கு முதல் காரணமாகக் கொண்ட சமயத்தார் ஆதிபகவனையே நிமித்தம் துணைக் காரணமாகக் கொள்ளல் வேண்டும். எழுத்துக்களுக்கு முதல் நிமித்தம் துணைக் காரணமாம் அகரம் உவமானம். உலகத்திற்கு முதல் துணை நிமித்தம் காரணமாம் ஆதிபகவன் உவமேயம். இதுகாறும் அகரத்திற்கு அம் மூன்று காரணங்களை அனைவரும் ஒப்பினர். இதனைச் செவ்வனே சிந்தித்தால் உலகிற்கும் அம் மூன்று காரணங்கள் ஆதிபகவனே என்பதைத் தேர்ந்து தெளிவர். அத்தெளிவில் அப்பாலுலகக் கருத்து முதல் கற்பனைக் கடவுளரை உலகிற்கு நிமித்தம் துணைக் காரணம் என்பதை மறந்துவிடுவர், மகிழ்வர்.

பௌதிகர் உலகத்தை எக்கடவுளும் படைக்கவில்லை என்பர். பௌதிக விஞ்ஞானியர் உலகம் என்றும் உள்ளது. உலகிற்கு அப்பாலாம் ஒரு கடவுளாலும் உலகம் படைக்கப் படவில்லை. உலகமே இல்லாதிருந்தது எனக் கருதுவோம் ஆனுல் உலகம் தோன்றுவதற்குக் காரணமான எதுவுமே இருந்திருக்க முடியாது. உலகம் என்றும் உள்ளது. உண்மையாகவே கடவுள் இருக்குமானுல் அது ஏன் எவ்வழியிலும் வெளிப்படுவதில்லை. நுண்ணிய எலெக்ட்ரான் கள்கூட மனிதனுல் ஆராயப்படுகின்றன. நமது புலன்களாலோ பௌதிக சாதனங்களாலோ விஞ்ஞான முறைகளாலோ தேவர்களை ஏன் காண முடியவில்லை. உலகில் ஒரு பொருளைக் காட்டி இது தேவதையால் செய்யப்பட்டது எனச் சொல்வதற்கு ஏதேனும் ஒரு பொருள் உள்ளதா? இல்லை. கல்லைப் பாருங்கள். அதற்குள் இயக்கம் நடந்துகொண்டிருக்கிறது. இயற்கை உலகம் தனது வளர்ச்சிக்கென மூலத்தை — ஆதிபகவனை — தன்னுள்ளேயே கொண்டிருப்பதாக லெனின் சொன்ன இயக்க இயல் பொருள் முதல் வாதம் என்பதில் உள்ளது.

பௌதிகர் கொள்கை இராஜாஜியே ஒப்புக் கொண்டனர். இராஜாஜி 28—7—68 கல்கி பக்கம் 9-ல், ''இம்மனம் உயிர் ஆகியவையும் ஜடப் பொருளிலிருந்து பரிணமித்தவையே'' என்று சயன்சு பெருமளவிற்கு நிலை நாட்டியுள்ளது. ஆதியில் சத்து என்று ஓர் உண்மைப் பொருள் இருந்தது. அதிலிருந்து சலமும் உண்டாயின. சத்து ஒன்றுதான் உண்மை என்பது உபநிஷதக் கருத்து. உண்மையாம் உபநிஷத்திலிருந்து அகிலவிசுவமும் தோன்றியுள்ளன. சூனியமாம் இன்மையிலிருந்து அவை, உலகம் தோன்றியிருக்க முடியாது. ஜீவசாஸ்திரப் பரிணும நிபுணர்களின் ஆய்வினுல் சின்னஞ் சிறிய ஜீவ அணுக்குள் சகலமும் உள்ளதாகச் சொல்கிருர்கள். மனிதனுக வளர்வதற்குரிய சகல அம்சங்களும் ஜீவ அணுவுக்குள் காண்கிருேம். இதனுல் உயிர் என்பது ஜடத்திலிருந்து தோன்றியது என்பதால் பயம் பக்தி மறைந்துவிட வேண்டியது இல்லை. உயிரிடத்தில் காட்டிய மதம் என்னும் பயபக்தியை இனி ஜடத்திடத்திலும் காட்ட வேண்டும் எனத் தன்னபிப்பிராயத்துடன் எழுதியுள்ளார். இதனுல் பௌதிக விஞ்ஞானியர் சொல்லும் ஜடம் என்பதும் உபநிஷத்துக்

காரர் சொல்லும் சத்து—உள்ளது—என்பதும் ஒன்றே என்றும் இச்சமயம் ஜடமே அகில உலக மாகத் தோன்றுவதற்கு இச்சத்தாம் ஜடத் திற்குப் புறம்பே ஒரு கடவுளோ எக்காரணங் களோ இல்லை என்றும், இச்சத்தாம் ஜடமே தனக்குள்ள பேரறிவுப் பேராற்றல்களால் இயங்கி இயங்கிப் பரிணும முறையில் இவ்வுலகம் ஆகத் தோன்றியிருக்கிறது என்றும், இச்சத்தாம் ஜடத்திடம் மதபக்தியைக் காட்ட வேண்டும் என உளமார இராஜாஜியும் ஒப்புக் கொண்ட னர்.

### அறிவாம் மூளை அறிவாம் உயிர்

ஆராய்ச்சியாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் ''உயிர் வளர்ச்சியில் கண்ட இறை வடிவம்'' என்ற நூலில் உள்ளதாவது : தொல் காப்பியர் உயிர்களிடையே ஒற்றுமையைக் காட்டும் வகையில் ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர் வகைகளைக் காட்டி உள்ளார். அவற்றில் அறிவுகளுக்கேற்ற வடிவுகளைச் சொல்லியுள்ளார். தாவர உயிரினங்கள் வளர வளர ஞானேந்திரியங்களின்—மெய் வாய் கண் மூக்கு செவி என்பவைகளின் வன்மை விலங்கினங்களில் மிகுந்தும் மனிதனிடத்தில் குறைந்தும் காணப்படுகிறது. ஆனுல் அறிவு வளர்ச்சியில் மூளை அமைப்புக்கள் மக்களில் மிகுந்தும் மற்ற இனங்களில் குறைந்தும் உள் ளது. கடவுளர் மூளையைத் தவிர வேறு இல்லை என்பதாம்.

முப்பாலில் மூளை என்ற மொழி இல்லை. மனம் அறிவு உயிர் எனும் மொழிகள் உள்ளன. உடலின் ஐம்பொறிகளால் புறப்பொருள்களைக் காண்பதில் மூளையும் மனமும் ஒரு தன்மையன. புலன்களால் கண்ட அப்பொருளைக் பகுத்தறி யும்பொழுது அம்மூளையும் மனமும் அறிவு எனப் படும். அம்மூளையும் மனமும் ஒன்றையும் அறியாது செயலற்று நிற்கும் பொழுது அறிவும் அங்ஙனமே நின்று விடுகின்றது. அதன் இறுதி நிலையில் மூச்சாம் உயிர்ப்பும் நின்று விடுகிறது. அவ்வுயிர்ப்பை உயிர் என்கிறோம். தொல்காப் பியர் ஐந்திறம் மரபியலில் ''மக்கள் தாமே ஆறறிவு உயிரே'' என அறிவையே உயிர் என்றனர். இதனுல் பௌதிகர் சொல்லும் மூளையும் முப்பால் ஆன்மீகர் சொல்லும் மனம், அறிவு, உயிர் என்பனவும் ஒன்றேயாகும். பௌதிகர் மூளையைக் கடவுள் என்றதையும் முப்பாலின் அறிவாம் உயிரின் பேரறிவுப் பேராற்றலையும் கண்டு கற்பனை கருத்து முதல் வாத சமையத்தார் அறிவாம் உயிரைக் கடவுள் என்றனர்.

### உண்மைப் பொருள்

இவ்வுலகுக் கப்பாலுள்ள எக்கடவுளரும் எக்காரணங்களும் இன்றி உலகிற்கு முதல் காரணமாம் ஆதிபகவன் எனும் மூலப்பகுதி அணுக்களே பெண் ஆண் அமைப்புள்ள உடல் உயிர்த் தன்மையனவாகிப் பிரிக்க முடியாமல் ஒன்று போலிருந்தது. அவ்வணுக்களுக்குள்ள இயற்கைப் பேரறிவுப் பேராற்றல்களால் இயங்கி இயங்கிப் பரிணும முறையில் இப்பேருல கமாகவும் உடல் உயிர்களாகவும் தோன்றி யுள்ளது. இதுவே முதல் குறள். ஆதிபகவன் உலகாயதச் சமய உண்மைப் பொருளாகும். முப்பால் ஆய்வாளர் இவ்வுண்மைப் பொருளில் உள்ளன ஆய்ந்து தங்கள் கருத்தை எழுத வேண்டுவன்.


# அருள்திரு
# இராமவிநாயகர் திருக்கோயில்

**கண்ணன்புதூர்,**

தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்

இந்தியப் பெருங்கண்டத்தின் தென்கோடியாகிய புண்ணிய பூமியில், கன்னியா குமரி மாவட்டத்தில், நாகர்கோவில் திருநெல்வேலி நெடுஞ்சாலையில் வெள்ளமடம் என்ற சிற்றூரினின்று 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மாதவலாயம் ஊராட்சிக்கு உள்ளிட்ட கண்ணன்புதூர் என்ற சிறப்புமிகு திருத்தலத்தில் அருள்மிகு இராமவிநாயகர் கோயில் கொண்டு, சுமார் 300 ஆண்டுகட்கும் மேலாக வேண்டுவோர்க்கு வேண்டுவன அளித்து பேரருள் புரிந்து வருகிறுர்.

அவர்தம் புண்ணியத் திருத்தலத்திற்கு வருகைபுரிந்து, இறைவன் அடிபணிந்து இம்மைக்கும் மறுமைக்கும் இறையருள் பெற்றுய்யப் பக்தப்பெருமக்களை வருக வருக என்று அன்புகூர்ந்து அழைக்கின்றோம்.

**நா. சிவதாணுபிள்ளை, கோ. வரநாராயண பிள்ளை,**
அறங்காவலர்கள்.

**மீ. மகராஜபிள்ளை,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

# வள்ளிமலையில் வெண்திங்கள்

வித்வான் செ. வெங்கடராமச் செட்டியார்

158597

**முன்னுரை :**

புலவர்களின் கற்பனை பலவற்றிற்கும் இலக்காக விளங்குவது வெண்திங்கள். வெண்ணிலவின் பயனையும் அதன் எழில்மிகு தோற்றத்தையும் அதன் இயக்கத்தையும் பற்றிப் பேசாத புலவர்களே இல்லை எனலாம். சின்னஞ் சிறு குழந்தைகள், விளையாட்டுச் சிறுர், மங்கைப் பருவத்து நங்கையர், மைந்துமிகும் ஆடவர், நரைமுதிர் யாக்கையர் ஆகிய எல்லோர் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும்பேரழகும் தண்மையும் வெண்மையும் சந்திரனிடத்தில் இயல்பாக அமைந்துள்ளன. அழகற்ற பொருள்களையும் தம் சொல்வண்ணத்தால் அழகு மிக்க தாக்குகின்ற திறமை சான்ற புலவர்கள், இத்தகைய எழில் மிக்க வெண்மதியைப் பற்றி என்னதான் சொல்ல மாட்டார்கள்!

பாற்கதிர் பரப்பி யெழுந்த முழு நிலவு ஓர் உயர்ந்த மலையின் உச்சிமேல் வருகின்றது. அம்மலையில் வாழும் குறவர் மகளிர் தம் கருங் குழலுக்கு மேலும் நறுமணமும் கருநிறமும் பெருக்குவதற்காக அங்குள்ள அகிற் கட்டைகளை மூட்டிப் புகையை யூட்டுகின்ருர்கள். அவ்வகிற் புகை விண்ணிலும் பரவுகின்றது. விண்மிசை யுலவும் அவ்வெண் திங்கள் அந்த அகிற் புகையுண்டு தன்னிறம் மாறிச் சிறிது செந்நிறம் பெற்றுத் திகழ்கின்றது.

**கபிலர் :**

ஓங்குமலை உச்சியில் உயர்ந்து தோன்றும் அந்தச் செந்நிறம் பெற்ற திங்களை அம்மலையில் கட்டியுள்ள தேனின் இருல் என அம்மலை வாழ் குறவர்கள் மயங்குகின்ருர்கள். அம்மலை மிக உயர்ந்திருப்பினும் அம்மலையிலும் உயர்ந்து காணப்படும் அத்தேனிருலை எப்படியும் பெற வேண்டும் என்ற பெரு முயற்சி அவர்கட்குத் தோன்றுகின்றது. உடனே, அவ்வுயரத்தை எட்டுவதற்கு உரிய மிக உயர்ந்த ஏணியைச் செய்கின்ருர்கள். தமக்கு எட்டாத நிலையில் இருக்கின்ற அது கிட்டாது என்று வெட்டென மறந்துவிடவில்லை குறவர்கள். கருதியது முடிக்கும் கருத்துடையவர்களாக அக் குறவர்கள் இருக்கின்ருர்கள். இதனை :

'அவனும்தான்
ஏனல் இதணத்து அகிற்புகை உண்டு இயங்கும்
வானூர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இருல் என ஏணி இழைத்திருக்கும்
கானக நாடன் கேள்.

—குறிஞ்சிக் கலி—3.

என்ற கபிலர் தம் கவின்மிகு கலித்தொகைப் பாடற் பகுதியில் கண்டு களிக்கலாம். இப்பகுதி அறத்தொடு நிற்கும் தோழியின் கூற்ருக அமைந்துள்ளது. இதில் தலைவனது மலையின் உயர்வும் அவன் குடியின் பெருமையும், அவன் கருதியது முடிக்கும் கடப்பாட்டுள்ளமும் நன்கு புலனுதல் காணலாம். இது தலைவனை ஏத்திக் கூறியதாகும். தலைவியை மணந்து இல்லறம் ஏற்பதற்குரிய உயர்குடிப் பிறப்பும் அயர்வறு முயற்சியும் உடையவன் குறிஞ்சித் தலைவன் என்பது புலப்படுத்த வந்த நலமிகு பாடல் இது. வெண்ணிறமுடைய சந்திரன் அகிற் புகையின் சார்பால் தேனிருல் போலக் காட்சி யளிக்கின்ருன் எனக் கபிலர் கூறிய இக்கருத்தைக் குமரகுருபரர் உளங் கொண்டு மேலும் தம் கற்பனைத் தேரை ஓட்டிப் பேசுகின்ருர்.

**குமரகுருபரர் :**

கபிலர் காட்டிய கற்பனை, தினைப் புனத்தில் அமைந்த பரணில் மூட்டிய அகிற் புகையால் வெண் திங்கள் தேனிருலைப் போலத் தோன்ற, அத்தேனிருலைப் பெற வேண்டிக் குறவர்கள் உயர்ந்த ஏணி அமைக்கின்ருர்கள் என்ற அளவேயாகும். இந்தக் கற்பனையை மேலும் சுவை தோன்ற வளர்த்துக் கூறும் குமரகுருபரர் கருத்துச் சிந்திக்கச் சிந்திக்க இனிக்கும் இயல்பினது.

அங்குக் கபிலர் கூறிய மலை, இங்கு மாடமாக மாறுகின்றது. அங்குக் கூறிய அகிற்புகை இங்கு முகிற் படலமாக உருவெடுக்கின்றது. அங்கு மலையிலும் உயர்ந்து காணப்பட்ட வெண்மதி, இங்கு மாடத்தின் தோரண முகப்பில் தவழ்ந்து ஏறுபவனுகத் தாழ்ந்து விடுகின்ருன். முகிலைக் கிழிக்கும் துகிற் கொடிகள் சோலை போலக் காட்சி யளிக்கின்றது. மழை முகிலில் நுழைந்து வானுயர் மாடத்தின் தோரண முகப்

பில் தவழ்ந்தேறும் சந்திரனின் தோற்றம், மது மாந்தி ஓங்கும் மாடமிசையுலவும் மகளிர் கண்ணுக்குத் தேனீக்கள் கட்டிய தேனிறாலாகக் காட்சியளிக்கின்றது. அந்தத் தேனிறாலில் உள்ள புது மணத் தேனைப் பருகி மகிழ விரும்பிய அம்மகளிர் தம் கணவர்களைக் கொண்டு தம் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள நினைக்கின்றார்கள். அக்கணவன்மாரைப் பார்த்து, ''இங்கு வாருங்கள்! இங்கு முதிர்ந்து தொங்குகின்ற இத்தேனிறாலை எடுத்து எமக்குத் தாருங்கள்'' என்று தம் கிஞ்சுக வாய் திறந்து கொஞ்சு மொழி பேசிக் கெஞ்சிக் கைகூப்புகின்றார்கள். தேனீக்கள் தம்மைக் கொட்டிவிடுமே என்ற அச்சம் அப்பெண்டிரை இப்போது ஆடவரை வணங்கச் செய்துவிட்டது. இந்த வாய்ப்பை ஆடவர் விடுவரோ? உடனே அந்தச் சந்திரனாகிய தேனிறாலைக் கையில் எடுத்துப் பிழிகின்றார்கள்.

மது மயக்கத்தில் ஆடவர்கள் இது செய்கின்றார்கள் என எண்ணாது, சந்திரன் தான் முன் செய்த குற்றத்திற்காக—இவர்தம் மங்கையர் முகத்திற்கு ஒப்பாவேன் என்று செருக்கிய தன் குற்றத்திற்காக—இவர்கள் தண்டனை கொடுக்கின்றார்கள் என்றே எண்ணி, 'ஐய, இனி உம் மகளிர்தம் ஒளிமிக்க முகத்திற்கு யான் ஒப்பாவேன் என்று செப்பேன்; என் உயிர் ஒன்றையும் விடுங்கள்' என்று வேண்டிக் கொள்கின்றான். அவ்வேண்டுகோட்கு இரங்கி உண்மையுணர்ந்து சந்திரனை விட்டு விடுகின்றார்கள். கள்ளுண்டவர்தம் கையிலிருந்து தப்பிப் பிழைத்தோமே என்று சந்திரன் விடுதலை பெற்ற மகிழ்ச்சியுடன் மேல் செல்கின்றான். அத்தகைய, சந்திர மண்டலமளவு உயர்ந்த மாடங்கள் மலிந்திருப்பது 'கந்தபுரி' (புள்ளிருக்கு வேளூர் வைத்தீசுவரன் கோவில்) என்று குமரகுருபரர் தம் கற்பனைத் தேரை மிக உயரப் பறக்க விடுகின்றார்.

''துளிதூங்கு மழை முகிற்படலங் கிழிக்குந்
துகிற் கொடிகள் சோலைசெய்யத்
தோரண முகப்பிற்றவழ்ந்தேறு கலைமதித்
தோற்றத்தை யறுகால் மடுத்து
அளிதூங்கு தேனிறாலிது தம்மின் வம்மின்
என்று அழிநறு ஆர்ந்து நிற்கும்
அந்நலார் கைகூப்ப ஆடவர் பிழிந்தூற்று
மளவிலப ராதமிதெனு
ஒளிதூங்கு முகமதிக் கொப்பெனகிலேன் விடுதிர்
உயிர்ஒன்றும் எனவிட லும்அவ்
உடுபதிக் கடவுள்நற வுண்ட மற்றவரினும்
உய்ந்தோம் ஒழிந்தோம் எனக்
களிதூங்கு மாட மலி கந்தபுரி''

—முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், 48

என்பது அக்கற்பனைக் கவியாகும். சங்க காலத்துக் கபிலர் செய்த கற்பனையைக் கருவாகக் கொண்டு பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரர் தம் கற்பனையை இவ்வாறு விரிவுபடுத்தி இனிமையூட்டியுள்ளார். பல்லாயிரம் மைல் பரப்புடைய சந்திரன் ஒரு மாடத்துத்தோரண முகப்பில் தவழ்ந்தேறினான் என்பதும், அத் திங்கள் மண்டலத்தை ஆடவர் தம் கையில் பிடித்துப் பிழிந்தூற்றினார்கள் என்பதும், அறிவியலுக்குப் பொருந்தாமல், உண்மையோடு படாத கற்பனையே யாயினும் கலையுணர்வோடு காண்போர்க்குக் களிப்பூட்டும் கற்பனையாகவே காட்சியளிக்கும். இக்கற்பனையைக் குழந்தை உள்ளத்தோடு நின்று சுவைத்தல் வேண்டும்.

**கம்பர் :**

இவ்வாறே, சந்திரனில் தோன்றுகின்ற மலைத் தொடர்களின் தோற்றத்தைக் களங்கம் என்றும் முயல் என்றும் மான் என்றும் கற்பனை செய்வர் கவிஞர். மகளிர் முகம் களங்கம் இல்லாதது; சந்திரனுக்குக் களங்கம் உண்டு ; அதனால் மகளிர் முகத்திற்குச் சந்திரன் ஒப்பாக மாட்டான்; என்று கூறுவார்கள். அழகு மிக்க சந்திரனுக்கு நடுவில் கறை ஒன்றிருப்பது குறையாகத்தான் தோன்றுகிறது. இதனையும் தீர்த்துக் காட்டவேண்டும் என்று கம்பர் உள்ளம் கருதியது போலும்! சித்திரகூட மலை மிக உயர்ந்தது. அம்மலை உச்சியில் ஏறினால் சந்திரனைத் தொட்டுப் பிடித்துக் கொள்ளலாம். அம்மலை அவ்வளவு உயர்ந்துளது. அம்மலையில் வாழ்கின்ற குறத்தி ஒருத்தி அம்மலையுச்சியில் ஏறிச் சந்திரனை எட்டிப் பிடித்துக் கொள்கின்றாள். ஈண்டு அந்தக் கந்தபுரி மைந்தர்கள் செய்ததுபோல அச்சந்திரனைப் பிழிந்து ஊற்றவில்லை. இந்த எழில் மிக்க சந்திரனுக்குக் கறையிருப்பது குறையாகும் என்று கருதி, முகம் பார்க்கும் கண்ணாடி மேலுள்ள தூசுகளைத் துடைப்பதுபோல, அந்தச் சந்திரனில் உள்ள கறையைத் துடைக்கின்றாள் அப்பேதைக் குறத்தி. இக்காட்சியை இராமன் சீதைக்குக் காட்டுவதாகக் கம்பர் கூறுகின்றார்.

'பிறையை யெட்டினள் பிடித்திதற்கு இது பிழை
யென்னாக்
கறை துடைக்குறு பேதையோர் கொடிச்சியைக்
காணாய்''

என்றது காண்க. சந்திரனிடத்து இயல்பாக விளங்கும் கறையைத் தன் முயற்சியால் போக்கிவிடலாம் எனத் தன் பேதைமையால் குறத்தி துடைப்பதைக் காட்டுவார் போல, மலையின் உயர்ச்சியையும், அங்கு வாழும் மக்களின் நன்முயற்சியையும், கம்பர் காட்டிச் செய்கின்றமை யூன்றி நோக்கியுணரலாம்.

**நல்லந்துவனார் :**

இனி, இச்சந்திரனது களங்கத்தின் முயல் போன்ற தோற்றத்தைப் பார்த்துச் சந்திரனில் தங்கி வாழும் முயலாகக் கற்பனை செய்வதும் உண்டு. தலைவனை நெடிது பிரிந்து வருந்திய தலைவி ஒருத்தி, ஊரவர் காணப் புறம் போந்து கடற்கரையில் உலவிக் கொண்டு, அங்குள்ள பொருள்களைப் பார்த்துப் பலப்பல பேசித் திரிகின்றாள். வானத்தில் தோன்றும் சந்திரனையும் அதில் தோன்றும் களங்கமாகிய முயலையும் பார்த்துச் சில கூறுகின்றாள்.

பொங்கிரு முந்நீர் அகமெல்லாம் நோக்கினை
திங்களுள் தோன்றியிருந்த குறு முயால்!
எங்கோன் இதனகத்து உள்வழிக்காட்டீமோ
காட்டீயா யாயின் கதநாய் கொளுவுவேன்
வேட்டுவர் உள்வழிச் செப்புவேன் ஆட்டி
மதியொடு பாம்பு மடுப்பேன் மதிதிரிந்த
என் அல்லல் தீராய் எனின்

—நெய்தற்கலி—27, 17-23

என்பது அத்தலைவியின் காமமிக்க கழிபடர் கூற்று. வெண்ணிலவு வீசும் தண்மதியை விண்ணிடைக் கண்ட தலைவி, அதனுள் சிறிய முயல் தங்கியிருப்பதைக் காண்கின்ருள். 'இந்தக் குறுமுயல் சந்திரனில் இருப்பதால், அலைகடல் சூழ்ந்த இந்நிலவுலகம் முழுவதையும் காணும் பேறு பெற்றுள்ளது. ஆதலால், என் கேள்வனைக் காண இயலும். இதனை அச்சுறுத்தின் என் காதலனை நிச்சயமாகக் காட்டிவிடும்' என்று கருதிச் சொல்கின்ருள். 'திங்களுள் தோன்றும் சிறிய முயலே! என் கேள்வன் இருக்கும் இடத்தைக் காட்டுவாயாக' என்கின்ருள். அந்த முயல் ஒன்றும் காட்டவில்லை. தலைவிக்குக் கோபம் பொங்குகின்றது. 'நீ என் காதலனைக் காட்டி என் துன்பத்தைத் தீர்க்காவிட்டால், உன்னைக் கதநாய் கவ்வுமாறு ஏவிவிடுவேன் ; இல்லையேல் வேடர்கட்கு நீ உள்ள இடத்தைக் காட்டி விடுவேன்; இல்லையேல், உன்னைத் தாங்கிக் கொண்டுள்ள சந்திரனை விழுங்குமாறு பாம்பினைச் சூட்டி ஏவிவிடுவேன்! என்று அச் சுறுத்துகின்ருள். இது நல்லந்துவனரின் நலமிகு கற்பனையாகும். இதில் சந்திரனில் காணப்படும் களங்கத்தை முயலாகக் கூறும் மரபு புலப்படு கின்றது

**கச்சியப்பர் :**

நல்லந்துவனரின் இந்தக் கற்பனை கந்த புராணம் இயற்றிய கச்சியப்ப சிவாசாரியார் கருத்தினைக் கவர்கின்றது. நல்லந்துவனரின் இக் கற்பனையை அடித்தலமாகக் கொண்டு ஒரு கற்பனைக் கோபுரம் அமைக்கின்ருர் கச்சியப்பர். ஆறுமுகன் ஆடலையெல்லாம் ஆறு காண்டங் களில், பதினுயிரத்து முந்நூற்று நாற்பத்தைந்து செய்யுள்களில் அழகுற அடக்கித் தம் புலமை வீறு காட்டிக் கந்தபுராணத்தைச் செய்தருளிய பெருமையர் கச்சியப்பர். அவர்தம் கற்பனை யாற்றலை—காப்பியப் பண்புகளை அந்நூலில் கண்டு களிக்கலாம்.

முருகப் பெருமான், சூரபன்மாவை வென்று இந்திரனுக்கு விண்ணுலகீந்து தெய்வ யானையை மணந்து, போர் வேட்கை தணிந்து, தணிகை மலையில் தங்கியிருக்கின்ருர். வள்ளி மலையில் குறமகளாகிய வள்ளி, தன்னையே நினைந்து தவங் கிடக்கின்ற நிலையை நாரத முனிவன் மூலம் கேள்வியுற்று, அவ்வள்ளி மலைக்குச் சென்று தினைப்புனங் காக்கும் வள்ளி நாச்சியாரைத் தமிழ் நெறிப்படி களவில் கலந்து மணந்த நிகழ்ச்சியைக் கடைசிப் படலமாகிய வள்ளியம்மை திருமணப் படலத்தில் விரித்து உரைக்கின்ருர்.

அப்படலத்தில் வள்ளிமலையின் உயர்ச் சியைப் புலப்படுத்து முகத்தான் அரியதொரு கற்பனையை அமைத்துக் காட்டுகின்ருர் கச்சி யப்பர். குமர குருபரரின் கற்பனைக்குக் கபிலர் காட்டிய கற்பனை கருவாக அமைந்ததுபோலக் கச்சியப்பரின் கற்பனைக்கு நல்லந்துவனரின் நெய்தற்கலி கற்பனைக் கருவாக அமைந்துளது என்பதை உய்த்துணர்ந்தாலன்றி, அவர் காட்டும் கற்பனையின் கருத்து நம்மனேர்க்குப் புலப்படல் அரிதாகும்.

பறையடிப் பதனுற்சேணின் பயன்
விரிப் பார்போல், மாறு
யறையடிப் பாந்த ளார்ப்ப,
அகல்இரு விசும்பு ஏறுஆர்ப்ப,
கறையடித் தொகுதி ஆர்ப்ப,
கடுந்திறல் அரிமான் ஆர்ப்ப,
சிறையடிக் கொண்டு சிம்புள்
ஆர்த்திடத் திங்கள் செல்லும்

(16)

என்பது கச்சியப்பரின் கற்பனைச் சித்திரமாகும்.

158597

**வள்ளிமலை :**

வள்ளிமலையின் வளமிக்க உயர்ச்சியால் இரவில் சந்திரன் மலைக்கு அண்மையில் இருப்பது போலத் தோன்றுகின்றது. மலைவாழ் குறவர் கள், சேணெடுந் தொலைவில் உள்ள விண்ணின் பயனை விரித்துக் கூறி விளம்பரம் செய்பவரைப் போல, மேலே பார்த்துப் பறை அடிக்கின்ருர் கள். அங்ஙனம், பறை அடிப்பதனுல்தோன்றும் வல்லொலி, பாறையடியில் வாழும் பாம்பின் மெல்லிசை விரும்பும் செவிக்குக் கடுமையான பேரொலியாகத் துன்பம் செய்கின்றது. வலிய பறை யொலியைக் கேட்ட வெறுப்பில் மனம் பொருது பாம்பு சீறி ஆரவாரிக்கின்றது. மலை வாழ்பாம்பின் சீறல்ஒலியை அறிந்து அம்மலையில் தவழும் மேகத்தில் உள்ள இடி, அப்பாம்புக்கு நேராக இடித்து ஆரவாரிக்கின்றது. அந்த இடியின் ஒலியை அம்மலையில் வாழும் உரல் போன்ற அடிகளையுடைய யானைக் கூட்டம் கேட்கின்றது. கரிய மேகங்களினின்றும் வரு கின்ற ஒலியைத் தம்மைப் போன்ற யானைக் கூட்டத்தின் பகைமை தோற்றும் பிளிருெலி யாக நினைந்து மதமயக்கமுடைய அந்த யானைக் கூட்டம் மாருகப் பிளிறுகின்றது. இவ்வாறு யானைக் கூட்டம் செய்யும் ஆரவாரத்தை அம் மலையில் வாழும் சிங்கம் கேட்கின்றது. 'யான் இருப்பதை யறியாமல் இந்த யானைகள் ஆர வாரிக்கின்றன போலும்' என்று கருதித் தன் னிருப்பினை யுணர்த்து முகத்தால் அந்தச் சிங்கம் பெருங்குரல் எடுத்து ஆரவாரிக்கின்றது. அந்தச் சிங்கத்தின் கர்ச்சனையை அம்மலையிற் வாழும் சிம்புள் (சரபம்) கேட்டுத் தான் இருக்க வும் சிங்கம் கர்ச்சிப்பதா! என்ற எண்ணத்தால் தன் இறகுகளை யடித்துக் கொண்டு ஆரவாரிக் கின்றது.

இங்ஙனம் வள்ளிமலையில் குறவர்கள் அடிக்கும் பறை ஒலியும், அவ்வொலிக்கு மாறாக எழுந்த பாம்பின் சீறலொலியும், அப்பாம்பின் சீறலுக்கு மாறாக எழுந்த இடியேற்றின் ஒலியும், அவ் இடி ஒலிக்கு மாறாக எழுந்த யானைகளின் பிளிறொலியும், அப்பிளிறொலிக்கு மாறாக எழுந்த சிங்கத்தின்கர்ச்சனை ஒலியும், அந்தக் கர்ச்சனைக்கு மாறாக எழுந்தார்க்கும் சிம்புளின் பேரொலியும் நிகழுமாறு சந்திரன் வள்ளிமலையில் செல்கின்றான் என்பது இச்செய்யுளின் கருத்தாகும்.

**கற்பனையின் நுண்பொருள் :**

இக்கற்பனையால் கச்சியப்பர் உணர்த்தக் கருதிய நுண்பொருள் ஏதேனும் உண்டா? என்று நோக்குவோம். வள்ளிமலைக்கு வந்த சந்திரானின் தெய்வத்தன்மை கண்டு வணங்குதலோ அவன் பேரழகைக் கண்டுமகிழ்தலோ, அல்லது வெண்ணிலவின் பயன் துய்த்தலோ செய்யாது வேடர்கள் தாம் பழகிய வேட்டுவத் தொழிலையே மேற்கொண்டு சந்திரனின் களங்கத்தை முயல் என்று மயங்கி அதனைப் பிடிக்கப் பறையடிக்கின்றார்கள் என்பதனால், முருகன் வேடனாக வள்ளிமலையில் உள்ள வள்ளியம்மையை மணக்க வரும்போது, இவ்வேடர்கள் தம் நிலத்திற்குரிய கடவுளாகிய முருகப் பெருமான் நேரே காட்சியளிக்கின்றான் என்று வணங்குதலோ, அன்று அவன் தெய்வ எழிலைக் கண்டு மகிழ்தலோ, அன்றி அவனை வேண்டித் தமக்கு வேண்டிய வரங்களைக் கொள்ளுதலோ, செய்யாமல் நம்மைப் போன்ற மனிதனே இவன் என மயங்கிக் கருதித் தம் காரியத்தையே கவனித்துக்கொண்டிருப்பார்கள் என்ற குறிப்பும் இத்தகைய அறியாமை மிக்க சூழ்நிலையில் தான் ஞான வடிவமாகிய வள்ளியம்மை வளர்ந்து வனப்புடன் முருகனை வழிபட்டு வருகின்றாள் என்ற குறிப்பும், இச்செய்யுளில் புலப்படுத்தியதாகக் கொள்ளலாம்.

மேலும், சந்திரனிடத்து இயல்பாக அமைந்துள்ள களங்கத்தை முயலென மயங்கியுணர்ந்த வேடர்களின் ஆரவாரமும், அந்த ஆரவாரங் காரணமாக எழுந்த மற்றைய ஆரவாரங்களும் நிகழ்ந்தனவாகக் கூறியதால், கடவுள் தன்னிலையில் திரிபில்லாதிருக்கவும் அக்கடவுளைப் பற்றிச் சமய வாதியர் சிலர் தம் பேதைமையால் தாம் அறிந்த அளவு சில முடிபுகளைச் சொல்ல, அதனைக் கேட்டு மற்றைச் சமய வாதிகள் மாறுபட்டு ஆரவாரிப்பதை உணர்த்தும் குறிப்பும், இச்செய்யுளில் அமைந்துள்ளது எனலும் ஆம்.

**முடிவுரை :**

எனவே, இச்செய்யுள் கற்பனையை விரும்புவோர்க்குக் கற்பனைக் களஞ்சியமாகவும், தத்துவப் பொருளை விரும்புவோர்க்குத் தத்துவ விளக்கமாகவும் அமைந்து மகிழ்வித்தல் காணலாம்.


# அருள்திரு பத்மநாபநங்கை அம்மன் திருக்கோயில்

**பத்மநாபநல்லூர்,**

**தோவாளை வட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.**

பாரதப் பெருநாட்டின் தென்கோடிப் புண்ணிய பூமியாம் கன்னியாகுமரி மாவட்டத்தில், தோவாளை வட்டத்தின் தலைமையிடமாகிய பூதப்பாண்டி என்ற ஊரிலிருந்து கிழக்காக இரண்டு கல்தொலைவில் அமைந்துள்ள பத்மநாபநல்லூர் என்ற திருத்தலத்தில் அருள்தரும் பத்மநாபநங்கை அம்மன் கோவில் கொண்டு, மெய்யன்பர்களுக்கு வேண்டுவன அளித்து அருள்பாலித்து வருகின்றாள்.

அம்மையின் திருத்தலம் நோக்கிப் பக்தகோடிகள் வருகைபுரிந்து, அம்பாளின் அருள் பெற்று எல்லா நலனும் பெற வருக வருக என்று வரவேற்று அழைக்கின்றோம்.

**எஸ். நீலகண்ட பிள்ளை,**
அறங்காவலர்.

# தென்னாடும் கண்ணபிரானும்

தேவி. இராமாநுசதாசர்.

திருமாலைப் பரம்பொருள் என்று உணர்ந்து வழிபட்டு வந்த முறை தமிழ் மக்களது புராதன சமயங்களுள் ஒன்றாகும். கடல் சூழ்ந்த பூமியை நான்கு நிலங்களாய்ப் பகுத்ததுடன், அந் நிலங்களுக்குத் தெய்வங்களை வகுத்துப் போந்த ஆதி தமிழ் ஆசிரியர்கள் காடு சார்ந்த நிலமான முல்லையையும், அதன் ஆதி தெய்வமான திருமாலையும் முதற்கண் வைத்துச் சிறப்பித்துள்ளதை மிகப் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்திற் காணலாம். எனவே, நானிலம் என்ற பெயரை இப் பூபாகம் பெற்றதற்கு முன்பே திருமாலுக்கு உரிமையும் தலைமையும் இந்நாட்டில் ஊன்றி விட்டன என்பது அறியப்படுகிறது. இத்தகைய உரிமை பற்றியே, 'அங்கண்முல்லையின் தெய்வ மென்றருந் தமிழுரைக்கும் செங்கண்மால்' (பெரிய புராணம் திருக்குறிப். 18) என்றார் சேக்கிழாரும். 'மாயோன் மேய காடுறை யுலகம்' ஆன முல்லைக்குரிய மக்களை ஆயர் ஆய்ச்சியர் என்று கூறுவர் தமிழ் முன்னோர். கோகுலத்தவராய்த் 'தென்னவன் தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத்து ஆயர்' என்று கூறப்படும் இன்னோர் தம் குலத்து வளர்ந்தருளிய கண்ணபிரானைத் தம் தொழு குலமாகக் கொண்டவர் என்பது யாவரும் அறிவர்.

'மாயோன்' என்பதும் 'கண்ணன்' என்பதும் 'கருநிறமுடையோன்' என்பதும் ஒத்த பொருளாதல் காண்க. இவ்வுரிமைத் தலைமைகள் அப்பெருமானுக்கு இங்கு அமைந்ததற்கு அவனது இறைமைக் குணங்களே காரணமாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பிற் றாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' எனப் பூவை நிலையாகிய புறத்துறையைக் கூறுமிடத்து அக்கடவுளின் பொருள் சேர் புகழ்களைப் பலபட விசேடித்துக் கூறியவாறு, எக்கடவுளரையும் அவ்வாசிரியர் கூறாமை குறிப்பிடத் தக்கது.

சங்க காலத்துப் பரிபாடல், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலும், ஆண்டாள் ஆழ்வாராதிகள் அருளிச் செயல்களிலும் அமைந்த காதற் பாக்கள் யாவும் அவர்கள் கண்ணனிடம் வைத்த இத்தகைக் காமப் பகுதியையே அநுசரித்துக் கூறியவை என்பது அறிஞர் துணிபு. இவற்றால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றியிருந்தமை விளக்கமாம்.

வள்ளுவர் தம் பெருநூலுள் பிற கடவுளர் எவரையுங் குறிப்பிடாத நிலையிலும்,

தாம் வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல்
தாமரைக் கண்ணா னுலகு? (1103)

எனக் கூறுவராயின், அது திருமாலின் பரத்துவ நிலை அக்காலத்துத் தமிழ் மக்கள் உள்ளங்களில் எத்துணையளவு ஊன்றிக் கிடந்தது என்பதனைக் காட்டக் கூடியதன்றோ? இக்குறள் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்தபின் தன் தலைவனது தளர் நிலைமை நோக்கி, 'நிரதிசய இன்பத்துக்குரிய நீ இச்சிற்றின்பத்துக்கு இத்தன்மையனாதல் தகாது' என்ற பாங்கனுக்கு அத்தலைவன் சொல்லியதாக இருத்தலும் நோக்கத்தக்கது.

இவற்றினின்று லீலா விபூதி, நித்திய விபூதி என்ற இருவகைப் பெருஞ் செல்வங்கட்குத் தனியிறைமை திருமாலுக்கே உரியது என்ற கொள்கையே வள்ளுவரும் கொண்டது என்பது பெறப்படுகிறது.

'தாமரைக் கண்ணான் உலகு' என்பது பரமபதமாகும். அப்பரமபதத்திலும் மேம்பட்ட இன்பம் வேறில்லை என்பதே வள்ளுவர் திருவுள்ளம். இவ்வள்ளுவனார் போலவே, திருமாலை முழு முதற் கடவுளாகக் கொண்டு தம் பெரும் பக்தி வெளிப்படப் பாடிய சங்கப் புலவர்களும் பலர்.

இங்ஙனம் தமிழ் மக்களின் ஆதி தெய்வங்களுள் ஒருவரான கண்ணபிரான் தாமே தனித்தும் நம்பி மூத்த பிரானுடனும் (பலராமன்) நிகழ்த்தியதாக அம்மக்கள் வழங்கி வந்த சரிதங்கள் பல. அதனால் கண்ணபிரான் வழியினராய்த் தென்னாட்டிற் குடியேறிய வேளிரும், அப்பிரான் வளர்ந்த கோகுலத்தவராய் இங்கு வந்தேறிய ஆயரும் போன்ற பழந் தமிழ்க் குடிகளால் அச்சரித வழக்குகள் இங்கு பேசப் பெறலாயின என்றே கொள்ளத் தகும். அவற்றுட் சில வருமாறு :

**குருந்தொசித்தது :**

கண்ணபிரான் குருந்தமரத்தை முறித்தது அல்லது வளைத்தது என்று பொருள்படும். கண்ணபிரான் யமுனையில் நீராடி நின்ற கோபியருடைய துகில்களை ஒருங்கே வாரிக் கொண்டு, அந் நதிக் கரையிலிருந்த குருந்த மரத்தின் மேலேறப் போவதைக் கண்டறிந்தவனும், கஞ்சனால் ஏவப்பட்டவனுமாகிய

அசுரனொருவன், அப்பெருமானை நலிதற்காக அம்மரத்தில் ஆவேசித்துக் கிடந்தான் என்பதும், அஃதறிந்த கண்ணபிரான் அந்த மரத்தை முறித்துப் போட்டார் என்பதும் புராண வரலாறுகும். சீவகசிந்தாமணி (நாமகளிலம்பகம் 209)—விளையாட்டு நிமித்தமாகக் கோபியருடைய துகில்களையெல்லாம் கவர்ந்து குருந்த மரத்தில் ஏறி நின்ற கண்ணபிரான், நம்பி மூத்த பிரான் ஆங்கு வருதலை யறிந்து, தம் செய்கையை அவர் காணின் தமக்கு மிக்க பழியுண்டாகும் என்று நினைத்து, அக்குருந்த மரத்தை முறித்து யமுனை ஆற்றில் வீழச் செய்து, தாம் கவர்ந்த துகில்களை நீரினின்ற அக்கோபியர் எளிதில் பெறும் வண்ணம் செய்ததன்றித் தாமும் நீரில் நீந்தி வேறிடஞ் சென்றார் என்கின்றது. அகநானூற்றில் வடக்கணுள்ள யமுனை ஆற்றின் துறையிலே நீராடி நின்ற கோபியர் பலராமன் அங்கு வர, தழையை உடுத்துத் தங்கள் மானத்தைக் காத்துக் கொள்ளுதற் பொருட்டும், அவர்களும் தாமும் பலராமர் கண்ணில் படாமலிருக்கவும் மரத்தை வளைத்துக் கொடுத்த திருமாலே என்கிறார் மதுரை மருதனிளநாகனுர் என்ற சங்க காலப் புலவர். இதனால் இவை சங்க காலத்துக்கு முன் வழங்கிய சரிதமாதல் தெளியப்படுகிறது.

**குடக் கூத்து முதலிய ஆடல்கள் :**

அநிருத்தன் சோணிதபுரத்தே பாணாசுரன் மகளான உஷா தேவியின் காதலனாக அவளோடிருத்தலை அவ்வசுரன் கண்டு அவனைச் சிறைப்படுத்த, அவன் பாட்டனாராகிய கண்ணபிரான் அவனைச் சிறை மீட்ட வரலாறு புராணங்களிற் கூறப்பட்டுள்ளது.

பழந்தமிழ் நூல்களில் இச்சரித சம்பந்தமாக மூன்று கூத்துக்கள் கூறப்படுகின்றன. அவை குடக்கூத்து, பேடு, மல்லாடல் என்பன. இவற்றுள் குடக்கூத்தென்பது—கண்ணபிரான் பாணாசுரன் நகரிற் சென்று குடங் கொண்டு ஆடியதைக் குறிப்பதென்பர். இதனை 'வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணிலம் அளந்தோனாடிய குடமும்' என்ற சிலப்பதிகார அடிகளால் உணர்க.

இங்ஙனம் கண்ணன் ஆடிய இக்கூத்தினைத் திருவாய்மொழி, சிறியமடல், மற்றும் தேவாரம் முதலியனவும் சிறப்பித்துக் கூறலாயின.

பேடு என்னுங் கூத்தாவது, கண்ணபிரான் மகனாகிய பிரத்யும்னன் (இவனைக் காமனென்று தமிழ் நூல்கள் கூறும்). மேற்சொன்ன சமயத்தே பேடி யுருவங் கொண்டு ஆடியதென்பர். இதனை 'வாணன்பேரூர் மறுகிடைத்தோன்றி—நீணில மளந்தோன் மகன் முன்னாடிய பேடிக் கோலத்துப்பேடு' என மணிமேகலையில் வருதலால் அறியலாம்.

மல்லாடல் என்பதும் அவ்வூரிலேயே பகவானே ஆடியது என்பர் அடியார்க்கு நல்லார்.

இஃதன்றி அப்பிரான் நிகழ்த்திய அல்லியத்தொகுதி என்ற வேறு கூத்தும் உண்டு. (சிலப். 6—46—8).

**சீமாலிகன் தலை யறுப்புண்டது :**

சீமாலிகனென்று ஓர் இடையன். இவன் கண்ணபிரானுக்கு உசாத் துணைவனாய் உடனிருந்தவன். இவனுடன் கண்ணபிரான் ஒருகால் சம்பாஷித்துக் கொண்டு செல்லும்போது, அப்பெருமானது கரத்திருந்த சக்கராயுதத்தைத் தான் ஏந்தி வரவிரும்பி அதைத் தன்னிடம் கொடுக்குமாறு இவன் கண்ணபிரானைப் பலமுறை கேட்க, பெருமான், 'இது தலையை அறுத்துவிடும்' என்று கூறியும் கேளானாய், அவ்விடையன் வற்புறுத்த, முடிவில் சக்கராயுதத்தைக் கண்ணபிரான் அவன் கையிற் கொடுக்கும்படியாக நேரவும், உடனே அஃது அவன் தலையை அறுத்துத் தள்ள, அவன் நற்கதி பெற்றனன் என்பர். இது,

'சீமாலிகனவனோடு தோழமை கொள்ளவும்
வல்லாய் சாமாறு
அவனை நீ யெண்ணிச் சக்கரத்தால்
தலைகொண்டாய்'

என்று பெரியாழ்வார் திருமொழியாலும் அதன் வியாக்கியானத்தாலும் அறியக் கிடக்கின்றது.

நக்னஜித் என்ற சத்தியவதியை, நப்பின்னையைப் போல் விடை தழுவி மணந்த சரித்திரமொன்று தவிர, வேறெதுவும் புராணங்களிலும் வடநூல்களிலும் காணப்படவில்லை. பழைய தமிழ் நூல்களோ, கண்ணபிரானுடைய மற்றைத் தேவியரைப் பற்றி ஒன்றுமே கூறாமல், நப்பின்னையோடு அப்பெருமான் புரிந்த லீலைகளைக் கூறுகின்றன.

வடநாட்டார் இராதா தேவியைக் கண்ணன் காதலியருட் சிறந்தவளாகக் கொண்டாடுதல் போலத், தென்னாட்டவரால் பண்டைக் கால முதலே பாராட்டப்படுந் தேவியார் இந்த நப்பின்னைப் பிராட்டியாவர்.

இவற்றால், இப்பிராட்டியாரைப் பற்றி வடநாட்டாருக்குத் தெரிந்தவற்றினும் அதிகமான வரலாறுகள், தமிழகத்திற் பழங்கால முதலே வழங்கலாயின என்பது நாம் நன்கறியக் கூடியது. இவ்வாறு வடநூல்களிற் காண்டற்கரியனவாய்த் தமிழ் நாட்டில் பெருவழக்குப் பெற்றிருந்த கண்ணபிரான் சரிதங்கள் வேறு சிலவும் இருக்கலாம்.

# கூடல் மாநகர் எடுத்த பொற்கிழி விழா

சங்கம் வைத்து மொழி வளர்த்தது தென்பாண்டி மண்டலம். முத்தமிழை முறையாக வளர்த்துப் புலவர்கள் பலர் கூடி ஆராய்ந்து தீந்தமிழைத் திக்கெட்டும் பரவச் செய்த நாள்.

அந்நாள் மதுரை மாநகரம் பாண்டிய மன்னன் சூடாமணி மாறனால் ஆட்சி செய்யப்பட்டு வந்த காலம். பாண்டிய மன்னன் தனது அரண்மனை நந்தவனத்தில் மஞ்சள் வெய்யில் மாலையில் தன் துணைவியுடன் உரையாடிக் கொண்டிருந்தான்.

புலமையும், வீரமும், விவேகமும் நிறைந்த சூடாமணி மாறன், தன் துணைவியின் கூந்தலில் இருந்து வந்த நறுமணத்தை நுகர்ந்தான். இந்த இனிய நறுமணம் பலவகைப் பூக்களைக் கூந்தலில் சூடியதனால் வந்ததா? அல்லது இயற்கையிலேயே பெண்களின் கூந்தலில் நறுமணம் கமழ்ந்துள்ளதா என்று சிந்தித்தான்.

தானாக ஒரு விடை கண்டறிய முடியவில்லை. எனவே மறுநாள் புலவர்கள் அவையில் இதனை அறிவித்துத் தன் சந்தேகத்தைப் போக்குவோருக்குப் பொற்கிழி அளிப்பதாக அறிவித்தான்.

சங்கப் புலவர்கள் அரசனது ஐயத்தினைப் போக்கும் வகை அறிந்திடாது திகைத்தனர். பலர் ஆராய்ச்சியும், வாதமும் செய்து வந்தனர்.

தருமி என்ற ஏழை. அவன் சிறந்த பக்தன். அரசன் அறிவித்த அறிவிப்பைக் கேள்விப்பட்ட அவன், இறைவனிடம் சென்று அரசனின் உள்ளத்திலிருக்கும் சந்தேகத்தைப் போக்கும் வகையில் ஒரு கவிதை தரவேண்டும் என்று வேண்டி நின்றான்.

கருணையே உருவான சிவபிரான் கவிதை ஒன்றை எழுதி, அந்த ஏட்டைத் தருமிக்குக் கிடைக்கும்படிச் செய்தார்.

''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி,
காமம் செப்பாது கண்டது மொழிமோ !
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே?''

என்ற இக்கவிதையைக் கண்ட தருமி மகிழ்ச்சி மிகக் கொண்டான்.

பாண்டியன் அரசவை நோக்கி விரைந்தான். அவையிலே பாடினான். மகிழ்வுற்ற பாண்டியன் தருமிக்குப் பொற்கிழி அளிக்கும்படி கூறினான்.

ஆனால் அது சமயம் அவையில் வீற்றிருந்த பெரும் புலவர் நக்கீரர், பாடலில் சொற் குற்றம் இல்லையாயினும், பொருட் குற்றம் இருப்பதாகக் கூறி, தருமிக்குப் பொற்கிழி அளிப்பதைத் தடுத்து நிறுத்தினார்.

தனக்குக் கிடைக்க இருந்த பொற்கிழி கிடைக்காமல் போகவே, தருமி மீண்டும் இறைவனிடம் முறையிட்டான். தருமியின் முறையீட்டைச் செவியுற்று, அடியவரை ஆட்கொண்டருளும் இறைவன் புலவர் வடிவில் அங்குத் தோன்றி தருமிக்கு ஆறுதல் கூறி அரசவைக்கு அழைத்துச் சென்றார்.

அவையில் நக்கீரனிடம் வாதம் புரிந்தார். கல்விச் செருக்குமிக்க நக்கீரனைத் தடுத்தாட்கொள்ள விரும்பிய சிவபிரான், நெற்றிக் கண் கொண்டு வெப்பம் உறுவித்துப் பொற்றாமரைக் குளத்தில் விழுந்து வருந்தும்படிச் செய்தார். பின் அவருக்கு அருள் செய்தார். தருமிக்குப் பொற்கிழி கிடைக்கச் செய்தார்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்ததாகக் கருதப்படும் இந்நிகழ்ச்சியினை ஒட்டி மீண்டும் புலவர்களுக்குப் பரிசளிக்கத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்தது. அறநிலைய ஆட்சித் துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் செயலாக்கிடத் திட்டமிட்டார்கள்.

அதன் தொடர்பாகத் தேர்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இதில் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசனார், 'திருக்கோயில்' ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள், பேராசிரியர் அவ்வை துரைசாமி, டாக்டர் சுப. அண்ணாமலை, பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் ஆகியோர் இடம் பெற்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் தரப்பட்ட ''அங்கயற் கண்ணி ஆலவாய் அப்பன்'' என்ற தலைப்பில் 1,000 வரிக் கவிதையும், ''அன்னை மீனாட்சி'' என்னும் தலைப்பில் 100 வரிக் கவிதை மூன்றும் தேர்வு செய்யப்பட்டன.

தேர்வு செய்யப்பட்ட கவிதைகளுக்குப் பரிசளிக்கும் விழா 14—9—74 சனிக்கிழமையன்று மதுரை மாநகரில் அருள்திரு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும், மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பி. ராமன் அவர்களும், அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவிற்கு வருகை தந்தபோது வாயிலில் யானை முதல்வரை வரவேற்றது. பல ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு விழாவினை விமரிசையாக நடைபெற்றிட வழிசெய்தனர்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் சிறப்புரை ஆற்றி, கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற திரு. அரு. சோமசுந்தரம், திரு. இராம. பெரிய கருப்பன், திருமதி தங்க அன்புவல்லி ஆகியோருக்குப் பொற்கிழி அளித்தார்கள். அத்துடன் திருவில்லிப்புத்தூர்த் தேரோட்டத்தின்போது கலசம் விழுந்து இறந்தவர் குடும்பங்களுக்கு உதவித் தொகையினையும் அளித்தார்கள்.

தேரோட்டத்தில் காயமடைந்தோருக்கு அறநிலைய ஆணையர் திரு. கே.எஸ். நரசிம்மன் அவர்கள் உதவித் தொகையினை வழங்கினார்கள்.

துணை ஆணையர் ம. அ. முருகேசன் அவர்கள் நன்றி கூற, விழா இனிதே முடிவுற்றது. விழாக் காட்சிப் புகைப்படங்கள் முன்பே தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

இவ்விழா ஆண்டுதோறும் நடைபெற இருக்கின்றது. பழமையையும், தமிழ்ப் பண்பாட்டையும் பேணிக் காத்து வருகின்ற தமிழ்நாடு அரசின் சாதனைகளில் இவ்விழா மற்றுமோர் மைல் கல்லாகத் திகழ்கிறது.

—தொகுப்பு: கே. எஸ். ஜெகந்நாதன்.



சேலம் அருள்மிகு சுகவனேசுவரர் திருக்கோவில் மண்டபத்தை 24-5-74 அன்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் திறந்து வைத்தார்கள். உடன் அறங்காவலர் குழுத் தலைவர் பி. எஸ். மாணிக்கம், நிர்வாக அதிகாரி கே. ஆறுமுகம் பி.ஏ.

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர்
அவர்களால் வழங்கப்பட்ட பொற்கிழி பரிசளிப்பு விழாவில்
முதற்பரிசு பெற்ற "மீனாட்சி மைந்தன்"
எழுதிய வரலாற்றுக் குறுங்காவியம்

# "பாண்டிமாதேவி"

கவிதைத் தொடர்

**டிசம்பர் இதழில் துவங்குகிறது.**

# அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

**பசவலிக்குட்டை திருப்பத்தூர் வட்டம் வடார்க்காடு மாவட்டம்**

மேற்படி ஆலயம் திருப்பத்தூர்-திருவண்ணாமலை தடத்தில், திருப்பத்தூரிலிருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. சுனைகள் சூழ்ந்த குன்றின் மேலுள்ள திருக்கோயிலில் தமிழ்க்கடவுள் முருகன், வள்ளி தெய்வயானையுடன் காட்சியளிக்கின்றார். அன்பர்கள் தரிசித்து அருள்பெற வேண்டுகிறோம்.

**பி. லோகநாத கவுண்டர்,**
அறங்காவலர்குழுத் தலைவர்

**டி. என். ராம்செட்டி,**
**சி. கந்தசாமி கவுண்டர்,**
**எம். ஆர். ஜெயபாலன்,**
**வி. கிருஷ்ணன்,**
அறங்காவலர்கள்.

**எஸ். தண்டபாணி,**
செயல் அலுவலர்.

# அருள்திரு
# சங்கமேசுவரர் ஆலயம்

**பவானி [அஞ்சல்]. கோவை மாவட்டம்**

பழம்பெரும் புகழ்வாய்ந்த பவானி நகரில் காவேரி, பவானி சங்கமத்தில் வீற்று அருளாசி வழங்கும் அருள்திரு சங்கமேசுவரர் ஆதிநாராயண பெருமாள் ஆலயங்கள் பாடல் பெற்ற புனித தலங்களாகும்.

சைவமும் வைணமும் ஒருங்கே இணைந்து அமைந்த இவ்வாலயங்கள் சமீப காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

அருளாசிபெற அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலய நிர்வாகிகள்



# அருள்திரு மாதேஸ்வரர் மற்றும் வரதராஜப்பெருமாள் ஆலயம்

**குறிச்சி அஞ்சல்.**

பவானி வட்டம், கோவை மாவட்டம்.

எங்கும் புகழ் கொங்கு நாட்டின் பவானி வட்டத்தில் குறிச்சி கிராமத்தில் ஜீவ நதியாக ஓடுகின்ற சித்தார் நதியின் தென்கரையில் அமைந்துள்ள அருள்திரு வரதராஜப் பெருமாளையும், வடகரையில் அமைந்துள்ள அருள்திரு மாதேஸ்வரரையும் வணங்கி, வாழ்வில் எல்லா நலனும் பெற உளமார அழைக்கின்றோம்.

ஆலய நிர்வாகிகள்.



# அமலனாதி பிரானும் இறைவனின் கண்ணழகும்

கே. இ. பார்த்தசாரதி. பி. ஏ.

'அமலனாதிபிரான்' நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் எட்டாம் பிரபந்தம். இது பத்து பாசுரங்களையே கொண்டது. ''அமலனாதி பிரான்'' என்று தொடங்குவதால், முதற் குறிப்பு என்னும் இலக்கணத்தால் பிரபந்தம் முழுதும் இப்பெயர் பெற்றது. திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு என்பனபோலப் பெயரைக் கொண்டது. பத்துப்பாசுரமும் எளிய சிறு சொற்களைக் கொண்டவை. ஆனால் ஒவ்வொன்றும் நெஞ்சைத் தொடும் கருத்துக்களை உடையது.

இப்பிரபந்தத்தை இயற்றியவர் திருப்பாணாழ்வார். இவர் திருச்சி மாவட்டத்தில் உறையூருக்கு அண்மையில் பிறந்தார். பாணர் குலம். எப்பொழுதும் நாரத முனியைப் போல் வீணையுங் கையுமாகப் பரமனது புகழையே வாயாரப் பாடிக் காலம் கழிக்கலானார். ஒரு நாள், திருவரங்கப் பெருமான் தனக்குப் பணி யாற்றும் லோக சாரங்க முனிவரை அழைத்துத் திருப்பாணாழ்வாரைத் தோளில் ஏற்றிக் கோயிலுக்குள் சுமந்து வரக் கட்டளையிட்டார். முதலில் பெரிதும் தயங்கிய ஆழ்வார் ஈசனது ஆணையைச் சிரமேற் கொண்டு, முனிவரது தோளில் ஏற, முனிவரும் அவரைப் பெருமானது முன்னிலைக்குத் தாங்கிச் சென்றார். ஆழ்வார் ஈசனது அழகுக்குத் தோற்று, அவனது அழகைத் திருவடிமுதல் திருமுடி வரையில் நுகர்ந்து பத்துப் பாசுரங்களைப் பாடி அவனது கமலத் திருவடியில் அடங்கினார். இப் பத்துப் பாசுரமே அமலனாதிபிரான் பிரபந்தமாயிற்று.

இப்பாசுரங்கள் பத்தும் அன்பாகிய அமுதம் நிரம்பிய பொற்குடங்களாக விளங்குகின்றன. வேதாந்த தேசிகன் ''பாண்பெருமாள் அருள் செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்'' என்று இப்பிரபந்தத்தின் பெருமையைப்பற்றிப் பாடியுள்ளார்.

இறைவன் அருள்கூர்ந்து தனக்குக் காட்டின திருமேனியின் அழகை, ஆராஅமுதமாய் நுகர்வதற்குத் திருமேனியை எட்டு அங்கங்களாக வகுத்தார். பாதகமலம், நல்லாடை, உந்தி, உதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய், கண்கள் என்பன எட்டு அங்கங்கள். முதல் எட்டுப் பாட்டுகளில் இந்த எட்டு அங்கங்களின் அனுபவம். ஒன்பதாவது பாசுரத்தில் திருமேனி அழகுமுழுவதையும் கண்டு களிக்கிறார்.

எட்டாவது அங்கமாகிய கண்ணின் அழகைப் பற்றிய பாசுரம் கீழ்வருமாறு :

பரியனாகிவந்த அவுணன் உடல்கீண்ட, அமரர்க்கு
அரியவாதிப் பிரான் அரங்கத் தமலன் முகத்துக்
கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரிஓடி,
நீண்டஅப்
பெரியவாய கண்கள் என்னைப் பேதைமை செய்
தனவே

தேவர்களிடம் பெற்ற வரங்களாலே பருத்த உடலை உடையவனைப் பிரகலாதனைக் கொல்லுவதற்கு வந்த அசுரனை இரணியனுடைய சரீரத்தை எளிதில் கிழித்து எறிந்தவனையும், பிரமன் முதலிய தேவர்களுக்குக் கிட்ட அரியவனை, உலகுக்குக் காரணமாய், உபகரிப்பதற்கு முற்பட்டவனை, சீரங்கத்தில் பாம்பணையில் படுத்துள்ள தூய்மை உடையவனை அரங்கநாதனுடைய திருமுகத்தில் கறுத்து, விசாலமுள்ளவையாகி, பிரகாசமுடையவையாய், செவ்வரிகள் படர்ந்து, காதுகள் வரையிலும் நீண்ட பெருமை பொருந்தியவையான அந்தத் திருக் கண்கள் ஆழ்வாரின் அறிவைப் பறித்து உன்மத்தனாகச் செய்து விட்டன என்று அரங்கன் கண்களின் அழகை வருணித்துள்ளார்.

அரங்கனே ஆழ்வாருக்குக் காட்சி தர வரித்துத் தனதருகே வருவித்துத் தன் காட்சியைத் தந்தான். இது அவனது இன்னருளேயாகும். இறைவன் அருள் இல்லாவிடின் அடியார்களுக்கு அவனிடமிருந்து யாதொரு பலன்களும் கிட்ட மாட்டா.

இப்பொருளையே முண்டகம், கடவல்லி முதலிய உபநிடதங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இறைவன் கருணையைக் காட்டும் அங்கம் கண்ணாகும். ''கருணை பொங்கும் கண்கள்'' இறைவன் கண்கள். எல்லா உறுதிப் பொருள்களையும் இறைவன் கடைக்கண் பார்வையின்

மூலமாகத்தான் அடையக்கூடும். அவனது கண் பார்வை இன்றி அமையாதது. ஆகையினுல் ஆழ்வார் கண்களின் அழகில் ஈடுபடுகிருர்.

ஆழ்வார் அருச்சாமூர்த்தியின் எழிலில் கண்ணைச் செலுத்திக் கொண்டிருக்கும்போது, நரசிம்ம அவதாரத்தின் நினைவு வந்துவிட்டது. நரசிம்ம அவதாரத்தின் படியை அரங்கனிடத்தில் காண்கிருர். சீற்றத்தோடு கூடிய திருமுகத்தில் அருள் மயமாய் இரணியன் மகனை பிரகலாதனைக் குளிரக் கடாட்சித்த நரசிம்மன் திருக்கண்களை வருணிக்கிருர். வைஷ்ணவத்தில் இறைவன் கண்ணழகுக்கு இப்பாட்டையே மேற்கோளாகக் காட்டுவது மரபு.

இரணியன் தேவர்களிடம் பலவாறு வரங்களைப் பெற்று, அதனுல் தனக்கு ஒருவரும் நிகரில்லை என்று இறுமாப்படைந்து, அஞ்சாநெஞ்சனைப் பருத்த சரீரத்தைப் பெற்றவன். இறைவனிடத்தில் பகைமையே பூரித்த பரிய உடலையுடையவன். இறைவனிடத்தில் பகைமை அவன் உடலைக் காட்டிலும் பெரியது. அவன் ஆன்மாவோ அவனது பரிய உடலுக்குள் மூழ்கி உள்ளிருப்பதே தெரியாமலிருந்தது. மேரு மலை நடந்து வருவதுபோல பிரகலாதனைக் கொல்லும் பொருட்டுச் சிம்மாசனத்திலிருந்து குதித்து ஓடி வந்து தன் கைமுட்டியினுல் கம்பத்தைத் தட்டினுன்.

''நினைந்து நைந்து உள்கரைந்து உருகி'' என்றும், ''அடியேன் உடலம் நின்பால் அன்பாயே, நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே'' என்று நம்மாழ்வார் சொன்ன படியே, பரமனையே நினைத்து நினைத்து, அவனைப் பெருவிடில், அடியார்கள் உடல் மெலிவார்கள். தமோகுணத்தினுல், இரணியன் உடல் பருத்தவன். சத்துவகுணத்தினுல் அடியார்கள் உடல் மெலிந்திருப்பார்கள்.

இறைவனுக்குரிய உயிருக்கு ஊறு நிகழாமல் 'கிள்ளிக் களைந்தான்' என்பது போல, இரணியன் தனது பெருமையை நினைத்து இறுமாப்புடன் பருத்திருந்த உடல், கோரைப் பாயைப் பின்னுபவன் கோரையைக் கிழிப்பது போலவும், வாழை மடலைக் கிழிக்குமாபோலவும் இரு கூருக்கப்பட்டது.

நம்மாழ்வார் ''பத்துடை அடியவர்க்கு எளியவன், பிறர்களுக்கு அரிய வித்தகன்'' என்ருர். திருப்பாணுழ்வாரும் பக்தனுகிய பிரகலாதனுக்கு எளியவனுகிய பரமனும், பிரமன், இந்திரன் முதலான தேவர்களுக்கு அரியவன் என்பதை 'அமரர்க்கு அரிய' என்பதனுல் உரைக்கின்ருர். அமரர்களுக்கு அரியனுகியிருந்தும், தம்முடைய எளிமையைப் பாராது, தம்மை அடிமைகொண்ட எளிமையை மனத்துக்கொண்டு மகிழ்கிருர் ஆழ்வார்.

இங்ஙனம் ஆழ்வாரிடம் காட்டிய ஒப்பற்ற அருளுக்குக் காரணம் இறைவன் 'ஆதி'யாகி இருப்பதாகும். அவனே ஆதி காரணமாயுள்ளவன். முதன்மையானவன். 'பிரான்' என்ற சொல்லால் அவன் செய்த உபகாரத்தை நினைக்கிருர். ஆதிப் பிராஞனகையால் தானே முற்கோலி உபகரிக்குமவன். தேவர்களுக்கும் கிட்ட அரியனுயிருந்தும் பிரகலாதனுடைய விரோதியை முற்பாடனுய்ச் சென்று போக்கிய உபகாரகன். திவ்விய தலங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களில் ஆதிப்பிரான் அரங்கன் என்பர். ''ஆராதவருளமுதம் பொதிந்த கோயில்' அரங்கமேயாகும்.

அரங்கத்தமலன் என்ற சொற்றொடரிலிருந்து நரசிம்ம மூர்த்தியைக் காட்டிலும், திருவரங்கத்தில் சாய்ந்துள்ள பரமனின் மேன்மைகள் நன்று தோன்றும். நரசிங்க உருவம் எடுத்தது சில நிமிஷங்களேயாகும். நம்முடைய தாழ்வு பாராமல், நம்முடைய விரோதிகளைப் போக்கிப் பரம புருடார்த்தத்தைத் தரும் தூய்மை அரங்கத்தானுக்குத்தான் உண்டு. அன்றியும் நம்மைக் காப்பதற்காகவே, வைகுண்டம் முதலிய இடங்களை விட்டு அரங்கத்திலே படுகாடு கிடக்கும் தூய்மையைப் பற்றிச் சொல்லுவது ஆழ்வாருக்குத் திகட்டாத அமுதமாகும். இறைவன் ஒரு குற்றமுமில்லாதவனுக இருந்தால்தான் தன்னை அடைந்தவர்களைக் குற்றங்களிலிருந்து விடுவிக்க முடியும். ஆதலால் இறைவன் குற்றமற்றவனும். அவனே அமலன், விமலன், நிமலன், நின்மலனுவான்.

பரமனது திருமுகம் சந்திர மண்டலம் போன்றது. சந்திர மண்டலத்தில் பூத்த தாமரை மலர்கள் போன்ற திருக்கண்கள். அக்கண்களுக்கு நடுவில் எடுத்துக்காட்டாக இரண்டு கரு விழிகள் உள்ளன. இவ்விழிகள் அடியார்களைக் குளிர நோக்குவதால் அங்குமிங்கும் அலைந்து கண்களை முழுவதும் நிறைப்பதுபோலத் தோன்றும். கண்களைக் கண்டவாறே நமது குற்றம் குறைகள் எல்லாம் தீரும்படியாகக் குளிர்ந்துள்ள கண்கள்.

கண்கள் 'புடைபரந்து' உள்ளன. கறுத்த விழிகள் ஆழ்ந்த நீர் நிலையின் எழிலைப் பெற்று உள்ளன. கடலைத் தடாகமாக்கினுற் போல், கருவிழிகளைச் சுற்றிப் பரந்த இடமுடைமையை இங்குக் குறிக்கிருர் ஆழ்வார். கண்களே அருள் நிரம்பிய கடலாயிற்று. ''கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்'' என்ருர் கம்பர்.

'மிளிர்தல்' என்பது விரைந்து அசைதல். அரங்கத்தமலனது கண்கள் கருணையினுல் மிளிரும். காண வேண்டுமென்ற ஆழ்வாரது ஆவலைக் காட்டிலும் இவரை நம் அருளுக்கு இலக்காக்க வேண்டுமென்ற பரமனது ஆவல் அதிகமாக இருப்பதால், அவனது கண்கள் விரைந்து மிளிர்கின்றன. கடலில் அலைகள் போல் அலைந்து கொண்டிருக்கின்றன.

இறைவன் கண்களில் தாமரையிதழிலே மெல்லிய ரேகைகள் போல், சிவந்த ரேகைகள் உள்ளன. இவை அவன் லட்சுமிபதியாயிருப்ப தற்கும், எல்லாவித செல்வங்களை உடையவனாக இருப்பதற்கும், அவன் அனைவரிடத்துமுள்ள பேரன்பிற்கும் அறிகுறிகளாகும்.

திருக்கண்கள் திருச்செவியளவும் நீண்டு உள்ளன என்பது உட்கருத்து. தம்மளவும் அக் கண்கள் வந்து நீண்டதை ஆழ்வார் நினைப்ப தாகும். திருக்கண்கள் செவியளவும் நீண்டுள்ள தற்கு, இராமானுசரின் முதல் சீடரான பராசர பட்டர், பரமன் கண்களின் நீட்சியின் காரணத் தைக் கூறுகிறார். வைகுண்டத்தில் அங்குள்ள வர்களுக்கு மட்டும் அருள இரு கண்கள் ; அவதாரங்களில் தன்னை வந்து அடைந்தோருக்கு அருள இரு கண்கள்; சீரங்கத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக வருவோருக்கு அருளவும் இரு கண்கள் என்பது எவ்வாறு பொருந்தும். உடம் பெல்லாம் கண்ணாக வேண்டாவோ? எனவே கண்கள் அருகிலுள்ள காதுகளைச் சாடி இறுதி யில் எல்லா அவயவங்களையும் தமதாக்கிக் கொள்ளும். திருமேனி முழுவதும் கண்களாகி விடும்.

இறைவன் திருக்கண்களின் பெருமையும், அழகும் சொல்லுக்கடங்கா என்பதை 'அப் பெரியவாய கண்கள்' என்பதனால் விளக்குகிறார். கடைசியாக அத்திருக்கண்கள் ஒன்றும் கரை யாத கல்நெஞ்சனை தன்னை மெய்ம் மறக்கச் செய்தன என்கிறார். இவ் வறிவுக் கலக்கம் அவன் அழகிலே அலமருகை. கண்கள் என்று பன்மையில் சொல்லியிருப்பதால், 'எனது மனத்தைக் கவர இவற்றுள் ஒன்றே போதும். ஒன்று கவர, அதனால் துவண்ட மனத்தை மற்றதும் நலிந்தது' என்ற கருத்தையும் கொள் ளலாம் என்பர்.

இறைவன் கண்களின் எழிலை, 'அரியவாகி', 'புடைபரந்து', 'மிளிர்ந்து', 'செவ்வரிஓடி', 'நீண்ட', 'அப்பெரியவாய' என்ற ஆறு சொற் றொடர்களினால் ஆழ்வார் நுகர்ந்த இன்பம், ஒப் பற்ற அறுசுவை நுகர்ச்சியாகும். ஆழ்வார் திருவடிகளே சரணம்! ஜீயர் திருவடிகளே சரணம்!



சேலம் சுகவனேசுவரசுவாமி கோயில் சார்பில் 50 ஏழைக்குழந்தைகளுக்கு இருவேளை இலவசப் பால்வழங்கு விழாவில் சேலம் மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி திரு எம். கிருஷ்ணன் அவர்கள் பால்வழங்கி துவக்கிவைத்தார்கள். உடன் அறங்காவலர் குழுத்தலைவர் திரு பி. எஸ். மாணிக்கம் எம். சி. நிர்வாக அதிகாரி திரு கே. ஆறுமுகம் பி. ஏ. விழாவில் கலந்துகொண்ட பெருமக்கள்.

# அருள்திரு அழகிய சோழநங்கை அம்மன் திருக்கோயில்

## தேரூர்

### கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டத்தின், சுசீந்திரம் பழைய ஆற்றின் வடகரையில் தேரூர் என்னும் சிற்றூரில் சைவவேளாளர் மரபினர் சமுதாயத்திலும், தண்ணீர் வளவயல் சூழத்தின் நடுவே தண்ணருள் பாவித்து நிற்கும் அருள்மிகு அழகியசோழநங்கை அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை இத்தலத்தில் அவதரித்து, தமது 13-வது வயதில் அழகிய சோழநங்கை அம்மனின் பெயரில் பாமாலை புனைந்து பாடியிருக்கிறார்கள். அவர் பெயரில் ஒரு சிறப்புமிக்க நூலகம் ஒன்று இக்கோவிலுக்குச் சொந்தமாய் உள்ளது.

கண்கண்ட தெய்வமாகி, அன்னை பராசக்தி வடிவம்கொண்டு, மக்களை காத்து வருகின்ற தெய்வக்குலக் கொழுந்தாய் விளங்குகின்றாள். இந்த வட்டாரத்தில் பிரசித்தி பெற்ற கோவிலாகும். நவராத்திரி விழா சிறப்பாகக் கொண்டாடுவதுடன், மாத விசேடங்களும் சிறந்த முறையில் நடந்து வருகிறது.

தேரூரில் உள்ள சில சுற்றுக் கோவில்களும் கஞ்சிமடமும் இக்கோயிலுக்கு அடங்கியவை. யாவரும் நல்வழியில் வாழ அருள்மிகு அழகியசோழ நங்கையைப் பிரார்த்திக்கிறோம்.

**ஜி. சங்கரநாராயணன்,**
செயல் அலுவலர்.

# அருள்திரு அகத்தீஸ்வர சுவாமி திருக்கோயில்

## திருப்பூண்டி

### நாகை வட்டம் : : தஞ்சை மாவட்டம்

இத்தலம் நாகையிலிருந்து திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் நாகையிலிருந்து 11 கல் தொலைவில் உள்ளது.

அம்பாள் பெயர் அருள்மிகு சௌந்திரநாயகி. இத்திருத்தலம், தமிழ்முனிவர் அகத்தியருக்கு இமய வெற்பில் நடந்த திருமணக்கோலத்தைக் காட்டி அருள்பாலித்தமையால் திருமணப் பூண்டி என்ற பெயரால் வழங்கப்பெறும் பெருமையும், இத்தலத்தின்மேல்பால் முன்னாளில் சந்திரனுக்கு குரு சாபத்தால் ஏற்பட்ட சயரோகம் என்ற பெரு வியாதியை போக்கியமை பற்றி சந்திரா நதி என்ற தீர்த்தச் சிறப்பையும் பெற்றும், அகத்தியருக்கு அருள்பாலித்தமையால் அகத்தீஸ்வரர் என்னும் பெயருடன் விளங்கித் தம்மைத் தரிசிப்பவர்களுக்கு இஷ்டசித்திகளைத் தந்து அருள்செய்யது நிற்கும் பேரருள்மிக்க இறைவனை வணங்கி எல்லா வளமும், உடல் நலமும் பெற்றிட வாரீர், வாரீர் என அழைக்கின்றோம்.

இந்த ஆலயம் நீண்ட காலத்திற்குப் பின் சென்ற 31-3-71-ல் திருப்பணி துடங்கி, 14-6-1972-ல் திருக்குட நன்னீராட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

**கோ. குஞ்சிதபாதம்,**
செயல் அலுவலர்.

தொலை பேசி எண். 37.

# அருள்திரு அக்னீசுவரசுவாமி திருக்கோயில்

## திருப்புகலூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம்.

திருப்புகலூர் இந்த புராதன சிவத்தலம் மாயவரம்-காரைக்குடி புகைவண்டி பாதையில், நன்னிலம் புகைவண்டி நிலையத்திற்கு 5 கிலோமீட்டர் தூரத்திலும், நாகப்பட்டினம் பேருந்து பாதையில் நன்னிலத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. இறைவன் பெயர் அக்னீசுவரர். இறைவி பெயர் சூளிகாம்பாள். இறைவனுக்குக் கோணப்பிரான், சரண்யபுரீச்வரர் போன்ற நாமங்களும் இறைவிக்கு கருந்தார்குழலி அம்பிகை என்ற நாமமும் இருந்து வருகின்றது. சமயக்குரவர் நால்வரில் மூவர் பாடிய தலமாகும். திருநாவுக்கரசர் இறைவனோடு இரண்டரக்கலந்த தலமும் இதுவேயாகும். நாவுக்கரசருக்கு பெரியதொரு திருவிழா சித்திரை மாதத்தில் சதய நட்சத்திரத்தை பத்தாம் நாளாகக் கொண்டு பத்து தினங்கள் நடத்தப்படுகிறது. அவ்விழாவின் சமயம் திருமுறை மாநாடும் தமிழக திருக்கோயில் ஓதுவாமூர்த்திகளைக்கொண்டு மிகச் சிறப்பாக நடத்தப்படுகிறது. மேலும் வைகாசி பிரம்மோற்சவம் வைகாசி விசாகத்தை பத்தாம் நாளாகக்கொண்டு 10 தினங்கள் நடத்தப்படுகிறது. இவைகளைத் தவிர மாதாந்திர உற்சவங்களும் நடைபெறுகிறது. நஞ்சை நிலங்களிலிருந்துதான் இத்திருக்கோயிலுக்கு வருமானம் அதிகமாக கிடைக்கின்றது. ஆறுகால பூசைகள் செவ்வனே நடத்தப்படுகின்றது. ஆகம பாடசாலை ஒன்றும், சித்த வைத்தியசாலை ஒன்றும் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 18,000/- செலவில் நடத்தப்படுவதுடன் பள்ளி மாணவர்களுக்குப் பகல் உணவும் வழங்கப்படுகிறது. இக்கோயில் இறைவன் சந்நிதிக்கு வடபால் அர்த்தமானீச்வரர் சன்னதி ஒன்றும் இருக்கிறது. இறைவியின் பெயர் மனோன்மணி. இது ஒரு தனித் தலமாகவே அமைந்திருக்கிறது. திருப்புகலூரிலேயே அவதரித்து இறைவனுக்குப் புட்பத்தொண்டு செய்து முக்திபெற்ற அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய முருகநாயனாருக்குத் தனிச் சந்நிதி அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்குச் சொந்தமாக மற்றோர் சிவத்தலமும் திருப்புகலூரிலிருந்து ஒன்றரைக்கல் தூரத்தில் ராமநந்தீசுவரம் என்ற ஊரில் உள்ளது. அவ்வாலய இறைவன் பெயர் இராமநாதர். இறைவிபெயர் சூளிகாம்பாள்.

இந்த புராதன பெரிய சிவத்தலத்தை காணவரும் பக்தர்களின் எண்ணிக்கையோ நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. இதுகாறும் தரிசியாதவர்கள் ஒருமுறை தரிசனம் செய்து இம்மைப்பயனையும் அடைய விரும்புகிறோம்.

**ஏ.எஸ். பார்த்தசாரதி**, பி.எஸ்ஸி.,
பொருளாளர்.

**ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வர பண்டார சந்நிதிகள்**
பரம்பரை தருமகர்த்தா
(வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்)

# அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில்

## இராமேசுவரம்

அகில இந்திய ஒருமைப்பாட்டின் எடுத்துக்காட்டாக விளங்கும் அருள்திரு இராம நாதசுவாமி திருக்கோயில் ஒரு தீவில் அமைந்தது. புராதன சிற்பக் கலையின் சின்னமாகவும், பன்னிரு ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்ருகவும், மூர்த்தி, தீர்த்தம், தலம் ஆகிய முப் பெரும் மகிமையும் கொண்டு விளங்குகிறது.

இத்திருக்கோயிலில் 5-2-1975-ம் தேதி அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடை பெறவிருக்கிறது. அதன் தொடர்பாக அதி துரிதமாக திருப்பணிகளும், கொடிமரம், ஸ்தூபிகள் தங்க ரேக்கு, வர்ண வேலைகளும், மராமத்து வேலைகளும் பல லட்சக்கணக்கான ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

பக்தப் பெருமக்கள் ஷை நற்பணிகளுக்கு மனமுவந்து தாராளமாக நன்கொடை வழங்கி, பேரும் பெயரும், புண்ணியமும் பெற்று நற்பயன் அடைய வேணுமாய் வேண்டப் படுகிறது. அரசின் 1961-ம் வருடத்திய வருமானவரி சட்டத்தின் 88-வது பிரிவில் 6-வது உப பிரிவின் கீழ்-வழங்கப்பட்டுள்ள எண். 50 (F எண் 16/40-65-IT (A)—அறிக்கையின் படி வருமான வரியினின்றும் இந்த நன்கொடைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. நன் கொடைகளை நிர்வாக அதிகாரி, அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேசு வரம் P.C. 623526 என்ற முகவரிக்கு மணியார்டர் மூலமாகவோ அல்லது பாங்க் டிராப்ட், செக்குகள் மூலமாகவோ அனுப்ப வேண்டப்படுகிறது.

நிர்வாக அதிகாரி,

**அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில்,**

இராமேசுவரம்.

# திருவருட்பாவில் இலக்கணத் திறன்

ந. ரா. முருகவேள் M.A., M.O.L.

## முன்னுரை

''பொள்ளாச்சி வள்ளல்'', ''சன்மார்க்கச் செம்மல்'' திரு. நா. மகாலிங்கம் அவர்கள், சிறப்புற நடத்தி வரும் இராமலிங்கர் பணி மன்றத்தின் சார்பில் நிகழும் வள்ளலார் விழாவின் இக் கருத்தரங்கத்தில், ''திருவருட்பாவின் இலக்கணத் திறன்'' என்னும் பொருள் பற்றி யான் பேசுதல் வேண்டும் என்று, இங்கு வந்ததும் நண்பர் திரு. டாக்டர் ஔவை நடராசன் அவர்கள், என்னை அன்புடன் கேட்டுக் கொண்டார். ''இலக்கணத்தில் எழிற் கற்பனைகள்'' என்னும் ஆய்வு நூல் ஒன்றினை யான் எழுதியிருத்தல் குறித்து, எனக்கு இத்தலைப்பினை அளித்திருக்கின்றனர் போலும்!

''இலக்கணத் திறன்'' என்னும் தொடர், தொல்காப்பியம் நன்னூல் முதலிய நம் தமிழ் இலக்கண நூல்களின் செய்திகளை மட்டுமே குறித்தல் வேண்டும் என்னும் யாப்புறவு ஏதுமின்மையின், அதனை ஈண்டுப் பொதுவாக ஏற்றபெற்றி வேறு வகை நிலைகளிலும் போற்றிப் பொருள் கொள்ளுதல் பொருந்தும். எனவே, இந்த நேரத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப, கவிதையும் கவிஞர்களும் குறித்து, மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் வகுத்துள்ள சில இலக்கணங்களைச் சுட்டிக் காட்டி, அவற்றிற்குத் திருவருட்பாப் பாடல்கள் எங்ஙனம் பொருந்துகின்றன? இராமலிங்க அடிகளார் எங்ஙனம் இணையற்ற சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார்? என்பது பற்றி மட்டும், ஈண்டுச் சுருக்கமாகச் சில கருத்துக்களைக் கூறி அமைதல் சாலும் என நினைக்கின்றேன்.

## கவியரசர்

''எளிமையான நடையில், தெளிவான கருத்துக்களை, இனிய சுவை நிரம்பும்படி, கற்பவர் உள்ளம் கவலை தவிர்ந்து களிப்புற்று மகிழும்நிலையில், எவரொருவர் அழகுற எடுத்துப் பாட வல்லவராகத் திகழ்கின்றாரோ, அவரே சிறந்த கவிஞர்; கவிஞர்களுக்குள்ளே தலைசிறந்த பெரும் கவியரசர்'' என்னும் கருத்தமைய ஜான் கீட்சு என்னும் ஆங்கிலப் பெருங்கவிஞர் பாடுகின்றார்.

''எவர் ஒருவர் எளியநல்ல
இனியஎழிற் சொற்களினால்,
சுவைபெருகத் தெளிவுமிகத்
துயர்போக்கி மகிழ்வுறுத்தி,
நவையொழிக்கும் பாடல்கள்
நலம்பொதுளப் பாடுவரோ,
அவர்கவிஞர்; கவிஞருளே
அரசர்எனத் திகழ்ந்தொளிர்வர்''
—ந. ரா. மு.

(1) "They shall be accounted poet - kings
Who simply tell the most heart - easing things"
—John Keats.

இம்முறையில் இனிது ஆய்ந்துநோக்கின், இராமலிங்க அடிகளார், தலைசிறந்த ஒரு பெரும் கவியரசர் என, நாம் பெரிதும் போற்றத் தக்க நிலையில், இணையற்றுத் திகழ்கின்றார்! இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாப் பாடல்கள் எளிய நல்ல இனிய எழிற் சொற்களினால், இயன்றுள்ளன; சுவை பெருகித் தெளிவு மிக்குத் திகழ்கின்றன; தம்மை ஓதுந்தோறும் நம்முடைய துயரங்களைப் போக்கி, நம்மை மகிழ்வுறுத்தி, நம்பால் உள்ள பல வகைக் குற்றங்களாகிய நவைகளை நீக்கி ஒழிக்கின்றன. திருவருட்பாப் பாடல்களை அன்புடன் விரும்பி ஆர்வம் கொண்டு ஓதுந்தோறும், நம் கல்மனமும் கரைந்துருகி, பக்தியுணர்வு பெருகி, நமக்குப் பலவகை நலன்கள் விளைகின்றன! இது முக்காலும் உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை!

''வெம்பும் உயிருக் கோர்உறவாய்
வேளை நமனும் வருவானேல்,
தம்பி தமையன் துணையாமோ?
தனயர் மனைவி வருவாரோ?
உம்பர் பரவும் திருத்தணிகை
உயர்மா மலைமேல் இருப்பவர்க்குத்
தும்பைக் குடலை எடுக்காமல்,
துக்க வுடலை எடுத்தேனே!'' (1)

''அவல வயிற்றை வளர்ப்பதற்கே
அல்லும் பகலும் அதில்நினைவாய்க்
கவலைப் படுவ தன்றிச்சிவ
கனியைச் சேரக் கருதுகிலேன்;
திவலை ஒழிக்கும் திருத்தணிகைத்
திருமால் மருகன் திருத்தாட்குக்
குவளைக் குடலை எடுக்காமல்
கொழுத்த உடலை எடுத்தேனே!'' (2)

''குற்றம் புரிதல் எனக்கியல்பே!
குணமாக் கொள்ளல் உனக்கியல்பே!
சிற்றம் பலவா, இனிச்சிறியேன்
செப்பும் முகமன் யாதுளது?
தெற்றென் றடியேன் சிந்தைதனைத்
தெளிவித் தச்சம் துயர்தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்சோதி
ஈக தருணம் இதுவாமே!'' (3)

—திருவருட்பா.

## கவிதைக் கூறுகள்

ஒரு சிறந்த கவிதையானது, தன்கண் பல்வகை நற்கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். கவிதையானது கவிஞனின் சிறந்த புலமைநலத்தின் வெளிப்பாடாக இருப்பதுடன், தன்னைக் கற்பவர்களுக்கும் நல்ல புலமை நலனை விளைவித்து அளிப்பதாக இருத்தல் வேண்டும். கவிஞனின் உள்ளத்திற் பொங்கி எழும் உணர்ச்சிகளின் விளைவாய், கற்போர்களின் உள்ளத்தினில் அத்

தகைய சிறந்த நல்ல உணர்ச்சிப் பெருக்கினை எழுப்ப வல்லதாகவும், விழுப்பம் மிக்கு விளங்குவதே, நல்ல இனிய சிறந்த கவிதையாகும். கவிதையானது, தான் வெளியிட விரும்பும் கருத்துக்களைச் சுவை நிரம்பிப் பொதுளும்படி, வெவ்வேறு வகையான சொற்பொருள் நலங்களுடன் பொற்புற விளக்கிக் காட்டவல்லதாகவும், கற்பனைத் திறன் செறிந்ததாகவும் இருத்தல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, தாம் வெளியிடும் கருத்துக்கள் அல்லது செய்திகள், தொன்றுதொட்டுப் போற்றப் பெற்று வரும் இயல்வரம்புகளுக்கு உட்பட்டுக் கலைநலம் திகழவும், கவின்மிக்கு விளங்கவும் பாடப்படுவனவே, நல்ல சிறந்த கவிதைகள் எனப்படும். வில்லியம் என்றி அட்சன் (W. H. Hudson) என்னும் ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர், அறிவு நலம் (Intellectual element), உணர்ச்சி நலம் (Emotional element), கற்பனை நலம் (Imaginative element), கலை நலம் (Technical element) என்னும் நான்கு கூறுகள், சிறந்த கவிதையில் அமைந்திருக்கவேண்டுமெனக் குறிப்பிடுகின்றார்.

### நாற்கூறுகள்

திருவருட்பாப் பாடல்களில், அறிவு நலம், உணர்ச்சி நலம், கற்பனை நலம், கலை நலம் என்னும் இந்த நான்கும், நனி இனிது சிறப்புற அமைந்திருக்கின்றன என்பது, நம் சன்மார்க்க அன்பர்கள் அனைவரும் அறிந்தது.

''காமவுட் பகைவனும், கோபவெங் கொடியனும்,
கனலோப முழுமூ டனும்,
கடுமோக வீணனும், கொடுமதம் எனுந்துட்ட
கண்கெட்ட ஆங்கா ரியும்,
ஏமம்அறும் மாச்சரிய விழலனும், கொலையென்று
இயம்புபா தகனும், ஆம்இவ்
எழுவரும், இவர்க்குற்ற உறவான பேர்களும்,
எனைப்பற்றி டாம லருள்வாய்..'' (1)

''நிலையுறு நிராசையாம் உயர்குலப் பெண்டிரொடு,
நிகழ்சாந்த மாம்பு தல்வனும்,
நெறிபெறும் உதாரகுணம் என்னுநற்பொருளும்,
மருள்நீக்கும் அறிவாந் துணைவனும்,
மலைவறு நிராங்கார நண்பனும், சுத்தமுறும்
மனம்என்னும் நல்லே வலும்,
வருசகல கேவலமி லாதஇட மும்பெற்று
வாழ்கின்ற வாழ்வு அருளுவாய் . . .'' (2)

—தெய்வமணிமாலை.

என்றும் பிறவாறும் வரும் பாடல்கள் பலவும், இவ்வுண்மையைச் செவ்விதின் விளக்கப்போதிய சான்றுகளாகும்.

### தெய்விக நலம்

இனி இந் நான்கு கூறுகளுடன், நாம் நம்முடைய நாட்டின் பண்பாட்டிற்கு ஏற்பத் தெய்விகக் கூறு (Subline element) என்பதும், சிறந்த கவிதைகளில் செவ்விதின் அமைந்திருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.

''ஓங்கும் அறிவுநலம் ,உள்ளத் துணர்ச்சிநலம்,
பாங்குமிகும் கற்பனைப்பண்பு நலம்—தேங்கமழும்
செய்ய கலைநலம், சீர்த்தெய் விகநலமும்
எய்தியதே நற்கவிதை யாம்!''

—ந. ரா. மு.

இது நம்முடைய தனிப்பட்ட கருத்தன்று. அருட்டிரு இராமலிங்க அடிகளாரே இங்ஙனம் கருதுகின்றார். ''இறைவனே! நின்னைப் பாடாதவர்கள் இயற்றுகின்ற பாட்டுக்குப் பெயர் யாதோ? அதற்குரிய பண் யாதோ? அப்பாட்டினை எழுதும் ஏட்டுக்குப் பயன்படும் மை (Ink) எதுவோ? அழுக்குமிக்குக் கலங்கிய சேற்றில் உறங்குவதற்காக அதன்கண் இறங்குகின்ற எருமைக் கடா மாட்டுக்கு வீடு எதற்கு? பஞ்சணை எதற்கு?'' என்றும்; ''இறைவனே, நின்னுடைய பொருள்சேர் புகழ் பொருந்தாத, துப்பற்ற வெறும் பாட்டிற்குச் சுவையுண்டோ? அதனை ஆழ்ந்து வருந்திக் கற்றுச் சொல்லிக் கொண்டு திரிகின்ற வாய்க்கு ஏதேனும் சிறப்பு உண்டோ? ஒரு சிறிதாவது இருக்குமாயின், அஃது, உப்பில்லாத புல்லிய அருவருக்கத் தக்க உணவை உண்டவர் நாவிற்குச் சுவையும் உவப்பும் உண்டாதலே போலும்'' என்றும் கூறுகின்றார்.

ஆட்டுக்குக் கால்எடுத் தாய்! நினைப்
பாடலர் ஆங்கியற்றும்
பாட்டுக்குப் பேர்என்கொல்? பண்ணென்கொல்?
நீட்டிஅப் பாட்டெழுதும்
ஏட்டுக்கு மைஎன்கொல்? சேற்றில்
உறங்க இறங்கும்கடா
மாட்டுக்கு வீடுஎன்கொல்? பஞ்சணை
என்கொல்? மதித்திடினே.'' (1)

''ஒப்பற்ற முக்கட் சுடரே! நின்
சீர்த்தி யுருதவெறும்
துப்பற்ற பாட்டிற் சுவையுளதோ?
அதைச் சூழ்ந்துகற்றுச்
செப்புற்ற வாய்க்குத் திருவுளதோ?
சிறிதேனும் உண்டேல்,
உப்பற்ற புன்கறி யுண்டோர்தம்
நாவுக்கு உவப்புளதே!''

—திருவருண் முறையீடு

### ஐவகை யூற்றுக்கள்

''தெய்விக நலம் என்பது, ஐந்து ஊற்றுக்களினின்று பொங்கி எழுகின்றது. அவற்றுள் முதலாவதும் மிக முக்கியமானதும், கருத்துக்களைத் தெளிவுற அறுதியிட்டு உறுதியுடன் தெரிந்து புரிந்து கொள்ளுதலாகும். இரண்டாவது, ஆற்றல் மிக்க உள்ளெழுச்சி உணர்ச்சியாகும். கவிதைச் சிறப்புக்குரிய இவ்விரண்டும், பெரும்பாலும் கருவிலேயே திருவாக அமையத்தக்கன எனலாம். இனி, ஏனையன மூன்றும் கலையியற்பாற்பட்டன. மூன்றாவது ஊற்றானது, கருத்துக்கள் இனிய எழில் வடிவம் கொள்ளுதலாகும். அது கருத்துக்களைப் பற்றியனவும், அவற்றை வெளிப்படுத்தும் சொற்களைப் பற்றியனவும் என இரண்டு வகைப்படும். அடுத்து நான்காம் ஊற்று, குறிப்பிடத் தக்க மொழி நடை பற்றியது. சொற்களைத் தேர்ந்து அமைத்தல், கருத்துக்களுக்குக் கவர்ச்சி மிக்க வடிவம் கொடுத்தல், கவிஞனின் தனியியல்பைப் புலப்படுத்தும் சொல்நடை அமைப்பு என்பவை இதனைச் சார்ந்தன. இங்ஙனம் மேற்குறித்த நான்கினையும் ஒருங்கிணைத்து இயைத்துப் பொருத்தமான சிறந்த கட்டுக்கோப்புடன், விளங்கும்படி செய்வது, ஐந்தாம் ஊற்று

ஆகும்''. இவ்வாறு லாங்கினஸ் (Prof. Longinus) என்னும் இலக்கியத் திறனய்வாளர் செவ்விதின் விளக்குகின்ருர்.

''தெய்வநலம் ஐந்தூற்ருற் சிறந்தெழூஉம்;
கருத்துணர்ந்து தெளிந்து தேர்தல்;
தொய்வில்பெரும் உணர்வாற்றல்; சூழ்கருத்திற்கு
உருவொடுசொல் தோற்று வித்தல்;
செய்யநற்சொல் கலேயிெனடு சிறந்ததனி
இயலமைப்பு; சேர்த்தி வற்றை
மெய்யிணேத்துப் பிணேக்கும்நலம்; இவைஐந்தும்
தெய்வநலம் விளங்கச் செய்யும்'' (2)

—தமிழாக்கம், ந. ரா. மு.

## திருவருட்பாத் திறன்

மேற்குறித்த இந்த அரிய இலக்கணத்தின் படியே, நம் இராமலிங்க வள்ளலாரின் திருவருட்பாப் பாடல்களில், சிறந்த கருத்துக்கள் தேர்ந்து உணர்ந்து தெளிந்து பாடப் பெற்றுள்ளன ; அக்கருத்துக்கள் ஆற்றலோடும், உள்ளெழுச்சி உணர்ச்சிப் பெருக்கோடும் வெளியிடப் பெற்று உள்ளன. அடிகளார் இத்தகைய தெய்விக அருட்பாக்களேப் பாடுதற்குக் கருவிலேயே திருவுடையவராக விளங்கியிருந்தார். கருத்துக்களும், அவற்றை வெளியிடும் சொற்களும், நம்மனேர் மனத்திற் பதியும் வகையில், அழகிய வடிவங்கள் கொண்டு, இயல்பாகவே இனிதாக அமைந்திருக்கின்றன. தாம் கையாளும் சொற்களேத் திறன் தெரிந்து தேர்ந்தாய்ந்து, அடிகளார் சிறப்புற வழங்கியுள்ளார். அவற்றின் அமைப்பும் முறையும் மிக அழகியனவாக நுண்ணிதின் இயன்று விளங்குகின்றன. வள்ளலாருக்கே உரிய எளிமை—இனிமை—தண்மை—நுண்மை—ஒண்மை முதலிய பண்புகள் புலப்படும் வண்ணம், திருவருட்பாப் பாடல்களில் சொற்களும் சொற்றெடர்களும் அமைந்து காணப்படுகின்றன. சொற்களும், சொற்றெடர்களும், கருத்துக்களும், அவற்றை உட்கொண்ட செய்யுட் டிறங்களும், பிறவும், பொருத்தமும் சிறப்பும் மிக்க நிலேயில் இணேந்து பிணேந்து, அரிய கட்டுக்கோப்புடன், எழிலுற ஒன்றி, நன்கினிது தெய்விகநலம் சிறந்து செறிந்து திகழ்கின்றன.

''பேதமுரு மெய்ப்போத வடிவம் ஆகிப்
பெருங்கருணே நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சீதமிகுந்து அருள்கனிந்து கனிந்து மாருச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
ஆதரவோடியன் மௌனச்சுவைமேன்மேற்கொண்டு
ஆனந்தச் சுவைஒழுக்கி அன்பால் என்றுஞ்
சேதமுருது அறிஞருளந் தித்தித்து ஓங்குஞ்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே''.

(2) "The sublime rises from 5 fountains. The first and most important is a firm grasp of Ideas. The second is vigorous and inspired emotion. These two constituents of poetic excellence are for the most part inborn. The other three come from art. The third is the formation of figures, of which there are two kinds, those of ideas and those of words. Next is notable language, which has as its parts the choice of words and figurative and individual diction. The fifth, which serves to hold all the other in unison is fitting and dignified arrangement"

—Prof. Longinus, On the Sublime.

உடல்குளிர உயிர்தழைக்க உணர்ச்சி ஓங்க
உளங்கனிய மெய்யன்பர் உள்ளத் தூடே
கடலனைய பேரின்பந் துளும்ப நாளுங்
கருணேமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே,
விடலரிய எம்போல்வார் இதயந் தோறும்
வேதாந்த மருந்தளிக்கும் விருந்தே வேதந்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே'' (2)

—மகாதேவ மாலே.

என்பன போலவரும் பாடல்கள் பலவும், இவ்வுண்மையை இனிது உணர்த்தா நிற்கும்.

## சிறந்த பெருநூல்

''உண்மையிலேயே மிகச் சிறந்த ஒரு பெருநூலுக்குரிய அடையாளம் யாதெனின், அது தான் வெளியிடுவதற்குச் சில புதிய, தற்படைப்பான செய்திகளேப் பெற்றிருத்தல் வேண்டும் ; அவற்றை ஒரு புதிய முறையில், தனக்கே சிறப்பாக உரிய தனித் தன்மையான நெறியில் வெளியிடுதல் வேண்டும்''(3). இவ்விலக்கணத்திற்கும், திருவருட்பா மிகவும் பொருந்தி விளங்குகின்றது.

''எத்துணேயும் பேதமுருது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி யுள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்ருர்
யாவர்,அவர் உளந்தான்,சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தேர்ந்தேன்;அந்த
வித்தகர்தம் அடிக்குஏவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ'' (1)

''கிழக்குவெளுத் தது, கருணே அருட்சோதி உதயங்
கிடைத்தது,எனது உளக்கம லங்கிளர்ந்தது, என
தகத்தே
சழக்குவெளுத் தது,சாதி யாச்சிரமஆ சாரஞ்
சமயமதா சாரம்எனச் சண்டையிட்ட கலக
வழக்குவெளுத் தது,பலவாம் பொய்ந்நூல்கற்
றவர்தம்
மனம்வெளுத்தது, வாய்வெளுத்தது, வாயுற
வாதித்த
முழக்குவெளுத் தது,சிவமே பொருளெனுஞ்சன்
மார்க்க
முழுநெறியிற் பரநாத முரசுமுழங் கியதே'' (2)

''சேய்போல் உலகத்து உயிரைஎல்லாம்
எண்ணிச், சேர்ந்து பெற்ற
தாய்போல் உரைப்பர்சன் மார்க்கசங்
கத்தவர்; சாற்றும் எட்டிக்
காய்போற் பிறர்தமைக் கண்டாற்
கசந்துட் கடுகடுத்தே
நாய்போற் குரைப்பர்,துன் மார்க்கசங்
கத்தவர் நானிலத்தே'' (3)

''பொத்திய மலப்பிணிப் புழுக்கு ரம்பைதான்,
சித்தியற் சுத்தசன் மார்க்கச் சேர்ப்பினுல்,
நித்திய மாகியே நிகழும் என்பது,
சத்தியம்! சத்தியம்! சகத்து ளீர்களே'' (4)

(3) "The mark of a really great book is that it has something fresh and original to say, and that it says this in a fresh and independent way." —W. H. Hudson.

''உருவர் ஆகியும், அருவினர் ஆகியும்,
   உருவரு வினராயும்,
ஒருவ ரேயுளார் கடவுள்; கண்டு அறிமினோ
   உலகுளீர்! உணர்வின்றி
இருவ ராம்என்றும், மூவரே யாம்என்றும்,
   இயலும்ஐ வர்கள்என்றும்,
எருவ ராயுரைத்து உழல்வதென்? உடற்குயிர்
   இரண்டுமூன்று எனலாமோ?'' (5)

—ஆறாம் திருமுறை

என்பன போல வரும் எண்ணற்ற பாடல்கள் பலவும், சில சிறந்த தற்படைப்பான செய்திகளைப் புதிய முறையில், தனித் தன்மை மிக்க விழுமிய நிலையில், வெளியிட்டு விளக்குதல் நுண்ணிதின் எண்ணி மகிழ்தற்குரியது.

''மதித்த சமயமத வழக்கெல்லாம் மாய்ந்தது
   வருணாச் சிரமமெனும் மயக்கமும் சாய்ந்தது
கொதித்த லோகாசாரக்கொதிப்பெல்லாம் ஒழிந்தது
   கொலையும் களவும்மறைப் புலையும் அழிந்தது'' (1)

''குறித்த வேதாகமக் கூச்சலும் அடங்கிற்று
   கொதித்த மனமுருட்டுக் குரங்கும் முடங்கிற்று
வெறித்தவெவ் வினைகளும் வெந்து குலைந்தது
   விந்தைசெய்கொடுமாயைச்சந்தையும்கலைந்தது'' (2)

சத்திய ஞானசபை என்னுட் கண்டனன்
   சன்மார்க்க சித்தியை நான்பெற்றுக் கொண்டனன்
நித்திய ஞான நிறையமுது உண்டனன்
   நிந்தை உலகியற் சந்தையை விண்டனன்'' (3)

''சாதி சமயச் சழக்கெலாம் அற்றது
   சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
மேதினி யிற்சாகா வித்தையைக் கற்றது
   மெய்யருட் சோதிஎன் உள்ளத்தில் உற்றது'' (4)

—ஆறாம் திருமுறை.

என்றிங்ஙனம் வரும் எத்துணையோ பல எளிய இனிய சிறந்த பாடல்கள், திருவருட்பாப் பாடலின் பொது நெறி மாட்சியினையும், புது முறை யாட்சியினையும் கொண்டு, எவர் உளத்தினையும் கவர வல்லனவாகத் திகழ்தல் காண்கின்றோம்.

## முடிவுரை

இனி, வேறு ஒரு வகையிலும் திருவருட்பா நூல், சிறந்து இனிது விளங்குவதைக் காணலாம். அருட்டிரு விவேகானந்த அடிகள், ''கடவுளைத் தந்தை என்று வழங்குவதிலும், தாய் என்று போற்றுதல் சிறப்புடையது ; நண்பன் என்று கருதுவது அதனை விட மேலும் உயர்ந்தது ; ஆனால் இவைகளில் மிகவும் உயர்ந்தது, கடவுளைக் காதலனாக அல்லது காதலியாகக் கொள்ளுவதாகும். இவ்வெல்லாவற்றினும் மேலான நிலை யாது எனின், காதலனுக்கும் காதலிக்கும் இடையே எத்தகைய உயர்வு தாழ்வும் காணாமையாகும்'' (4) என்று குறிப்பிடுகின்றார். விவேகானந்தர் குறிப்பிடும் நிலையில், நாயக—நாயகி பாவம் அமைந்து, எத்தனையோ பல எண்ணிறந்த பாடல்கள் திருவருட்பா நூலில் விளங்குதலைக் காண்கின்றோம். சிறப்பாக மூன்றாம் திருமுறை முழுவதும், இவ்வகைப் பொருட்டுறையிலேயே அமைந்து திகழ்கின்றன. ஆறாம் திருமுறையிலும் பெரும் பகுதி இத்தகையனவாக இயன்றுள்ளன.

''சேமமிகும் திருவாத
   வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த
   வாசகத்தை எண்ணுதொறும்
காமமிகும் காதலன்தன்
   கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையாள்
   இன்பினும்இன் பெய்துவதே''

—ஆளுடையடிகள் அருள்மாலை

என்பன போன்று வரும் பாடல்களின் அருமை பெருமைகளும், சொற்பொருட் சுவை நலங்களும் அளவிட்டுரைத்தற் கரியன. இனைய பல பெரு நலங்கள் வாய்ந்து, இணையற்ற செந்தமிழ்த் தெய்விகப் பனுவலாகத் திகழும் திருவருட்பாவினை, நாம் இடையறாது ஓதி இன்புறுவதுடன், இராமலிங்க அடிகளாரின் சன்மார்க்கக் கொள்கைகளையும் கடைப்பிடித்தொழுகி, வையத்து வாழ்வாங்கு வாழ முயலுவோமாக!

[சென்னைத் திருமயிலை ஏ.வி.எம். இராசேசுவரி கலியாண மண்டபத்தில் நிகழ்ந்த வள்ளலார் விழாவில், காஞ்சி தொண்டைமண்டலாதீனம் சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவைத் தழுவியது. (5-10-74)

—ஆசிரியர்.]

(4) "Calling God Mother is a higher idea than calling Him Father, and to call Him Friend is still higher, but the highest is to regard Him as the Beloved. The highest point of all is to see no difference between lover and beloved."

—Swami Vivekanandar.

# குன்றுதோறாடும் குமரன்



கவிஞர் மனலைச ப. கீரன், B.A., B.T.

தமிழகத்தில் உயர்ந்தோங்கும் கோவில் தம்மில்
தலைதூக்கும் கோபுரம்போல் எங்கும் இல்லை!
குமிழ்சிரிப்பின் குமரனவன் குடியி ருக்கும்
குன்றுகள்போல் உயரிடத்தில் துலங்கும் கோவில்
இமிழ்கடலின் உலகினிலே யாண்டும் இல்லை!
இளமையினில் அழகினிலே தந்தை யார்க்கும்
அமிழ்தான அறிவூட்டும் ஆற்றல் தன்னில்
அறுமுகன்போல் அகிலத்தில் தெய்வம் இல்லை!

அழகான முருகனுக்குக் கோவில் கண்டோர்
அலைகடலின் திருச்செந்தூர், பழனிக் குன்று,
பழமுதிர்நற் சோலைதிருப் பரங்குன் றம்போல்
பக்திகமழ் சாமிமலை எல்லாம் கூட்டிக்
கிழமையுடன் படைவீடாய்ப் போற்றும் போது
கிறங்கவைக்கும் பலகோவில் விளங்கல் கண்டார்!
அழகாகக் குன்றுதொறும் ஆடல் என்றே
அழகனவன் கோவில்கள் கணக்கில் சேர்த்தார்!

செந்தமிழர் நாட்டிற்கு வடக்கின் எல்லை,
திகழ்கின்ற திருப்பதியாய் அந்நாள் சொன்னர்!
சந்ததமும் அழகனவன் அருளின் ஊராய்த்
தமிழ்கூறு நல்லுலகின் எல்லை தன்னில்,
முந்துபுகழ்த் திருத்தணிகைக் குமரன் உள்ளான்!
மொய்க்கின்ற அடியார்கள் இசைத்தல் காண்போம்!
கந்தனவன் சினந்தணிந்து, துணைவி யோடு
களித்திருக்கும் தணிகைநலன் பாடல் ஆற்றேன்!

நினைத்தாலே அழகொழுகும் முருகன் ஊரும்,
நிமிர்கழுத்தின் மயிலதனின் சிறகு போல
மனத்தினிலே பதிந்திருக்க விளங்கும் ஊராம்
மயிலத்தில் மேட்டினிலே கோவில் ஓங்கிச்
சினத்தாலே சிலிர்க்கின்ற மயிலின் கொண்டை
திகழ்வதுபோல் விளங்குவதைப் புனைந்து கூறிப்
பிணைத்திங்கே காட்டுதற்கும் திறனே கொள்ளேன்;
பிள்ளையவன் பேரழகை யாரே சொல்வார்!

மரகதத்துத் தீவெனவே போற்றற் கான
வளநாடாம் இலங்கையதன் வனப்பும் வாழ்வும்
கரவின்றித் தமிழரெலாம் உழைப்பி னலே
காண்கின்றேம் என்றாலே ஏலார் சில்லோர்!
பரவுகின்ற பசுமைவன நடுவில் ஆங்கே
பைந்தமிழ்போல் கதிர்காமம் விளங்கல் பார்த்தால்,
குரவனவன் குமரன்சீர் அழகே எங்கும்
குலுங்கிமிக ஆள்வதனை எல்லாம் ஏற்பார்!

மலைநாடே எனப்போற்றும் மலேசியத்தில்
மலையுண்டு, வனமுண்டு; தமிழர் உண்டு!
கலைமணக்கச் செய்கின்ற முருகனுக்குக்
கவின்பெருகு கோவிலுக்கும் குறையும் உண்டா?
தலைநகர்கோலாலம்பூர் பத்துக் குன்றில்
சாலவுயர் குகையினிலே கோயில் உண்டு!
அலைதழுவும் எழில்தீவாம் பினாங்கில், சிங்கை
அனைத்திடமும், குமரனுக்குக் கோவில் உண்டு!

ஆற்காடு மாவட்டப் பேரைச் சொன்னால்
அனல்பறக்கும் வறட்சிக்காம் பகுதி என்போம்!
ஏற்றமிகும் வள்ளிமலை என்றால், உள்ளம்
என்றென்றும் குளிர்ந்துவிடும் குமரனாலே!
தோற்றமுயர் இரத்னகிரி பாலமுருகன்
சுவாமிகளை ஈர்த்துயர்ந்து மக்கள் எல்லாம்
போற்றலுற வேலவனின் கோவில் ஓங்கும்!
புல்லறிவால் முருகன்சீர் புனைதல் ஆமோ?

# அருள்திரு
# ஜம்புகாரண்யேசுவரர் திருக்கோயில்

**கூந்தலூர் நன்னிலம் வட்டம் தஞ்சை மாவட்டம்**

இவ்வாலயம் பூந்தோட்டம்-கும்பகோணம் பெருவழித்துறையில் கும்பகோணத்திலிருந்து 20 கி.மீ. கிழக்கே உள்ளது. இவ்வாலயத்திலுள்ள இறைவனைத் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியுள்ளார். இவ்வாலயத்திலுள்ள முருகப்பெருமானை அருணகிரிநாதர் பாடியுள்ளார். அண்மையில் திருப்பணி செய்யப்பெற்றுக் குடநீராட்டு விழா நடைபெற்றுள்ளது. திருக்கார்த்திகை உற்சவம் இவ்வாலயத்தில் சிறப்புப் பெற்றது. இறைவனின் பெயர் ஜம்புகாரண்யேசுவரர். இறைவியின் பெயர் ஆனந்தவல்லி.

**திரு. உதயராஜ், பி.ஏ.,**
செயல் அலுவலர்.

# ஒன்றில் பெருவலி யாதுள?

டி. என். சுகி சுப்பிரமணியன்

ஒன்றுக்குள் ஓராயிரம் உண்மைகள் — உருவங்கள் — உணர்ச்சிச் சுழிப்புகள் உறங்கிக் கிடக்கின்றன. இதனோடு ஒன்றிப் போய்விடு வது சமய தத்துவ விசாரம்.

ஒன்று பெரிதா? ஒன்றுக்கு மேற்பட்ட எண்கள் பெரியனவா? கணக்கியலின்படி ஒன்று சிறிய எண்; ஒன்பது பெரிய எண். சமயக் கண் கொண்டு பார்க்கும்போது ஒன்றே பெரிது.

காட்சியிலே கலை இல்லை; அதன் இன்பங் கள் உட்பொருள்கள் யாவும் காணும் கண் களில், இனம் காணும் அறிவுக்குள் இருக்கின் றன. ஒன்றினை உணர்வது மிகப் பெரிய ஆற்றல், உணர்ந்த ஒன்றினைப் பிறருக்கு உணர்த்துவது வித்தகத் தன்மை.

இத்தகு வித்தகத் தன்மையே சாலச் சிறப் புடையது.

எல்லாக் காட்சிகளுக்கும் அடிப்படை கட் புலன்; கண்ணுகிய பொறிக்குப் புலனுக நின்று ஆட்டுவிக்கும் திறன் அறிவுக்கு உளது. குரு டாகி விட்டவனுக்கு நித்தியமாய் இருக்கும் சூரிய உருவம் பயனற்றது. ஆயினும் அதன் சூடு குருடனுக்குப் பயன் தரும்.

சமயத் துறையில் குருடுகளின் குருட்டாட் டம் அதிகம். கண்ணிருந்தும் சூரியனைக்காணர். சூரியனை உணர்த்தும் ஏவுகணைகள் தேவை. இவையே திருப்பாட்டுக்களாக ஞானிகள் எழுதி வைத்துள்ளார்கள்.

ஒன்று.

இதிலிருந்து பல தோன்றுகின்றன. தோன்றிய பல ஒன்றுக்குள் வந்து ஒடுங்கிக் கொள்ளுகின்றன.

இந்த அலகிலா விளையாட்டு வித்தும் — விருட்சமும்; — முட்டையும் — பறவையும் போன்ற அற்புத நாடகம்.

கணக்கியலுக்குள் 'ஒன்று' என்னும் தன்மை, தாயும்—தந்தையுமாய் இருப்பது போல, எல்லா எண்களின் மறைவுக்கும் பிறப் புக்கும் 'ஒன்று' (1) என்னும் எண் அடித்தளம்.

தத்துவ ஞானிகளும், சோதிடர்களும் ஒன்று என்னும் எண்ணிற்கு மாபெரும் சக்தி யுண்டு என்பார்கள். சூதாடிகளும் 1 அல்லது 2 என்னும் எண்களின் சூது விளையாட்டை நன்கு அறிவார்கள். என்றுமுள மந்திர சக்தி 1 எண்ணுக்குள் அதிகம். ஆயிரமாயிரம் ஆண்டு கள் நிலைத்து நிற்கும் உண்மையைச் சொல்லும் சொற்கள் யாவும் மந்திரங்கள். ஏட்டிலும் மக்கள் இதயத்திலும் நிற்கும் தேவார திருப்பதி கங்கள் திருமுறைப் பாடல்கள் யாவும் மந்திரங் கள்.

எதனைப் பகுக்கவும் வகுக்கவும் பெருக்க வும் முடியுமோ அது மிகப் பெரிய எண். முதன்மை ஸ்தானம் வகுக்கும் எண் எதுவெனில் அது 1 ஆகும்.

கோள்விட்டுக் கோள் போகும் யந்திரங் களின் சாதனைக்கு அடிப்படை 'ஒன்று'. இது விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குரிய எண் மட்டுமா?

'ஒன்று' மெய்ஞ்ஞான வளர்ச்சிக்கும் உரிய எண்.

'ஒன்றென்றிரு, அது உண்டென்றிரு' என்று மந்திரச் சொல்லை அறிவோம்.

1. இதனை எழுதினல் அதற்கு ஒலி வடிவம் இல்லை. வரி வடிவம் இருக்கிறது. படித்தவர் களுக்கு 1 என்பதற்குள் ஒலி வடிவம் வரிவடிவம் இரண்டும் இருப்பது தெரிய வரும். ஓசையாய் ஒலியாய் அமைவது ஒன்று. நமது அறிவுக்கு விழும் திரைகள் அனந்தம். நமக்குள் எழும் ஐயங்கள் கோவில் கொண்டு கோபுரம் போல நிமிர்ந்து நிற்கும். அறிவு முனையை அகற்றி விட்டு, சமய தத்துவங்களைப் பார்க்க வேண்டு மென்று வழி பேசப்படுகிறது.

''அருளால் எவையும் பார் என்றான் —அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்''

அறிவு, விஞ்ஞானத்திற்கு அடிப்படை வித்து; அருள் மெய்ஞ்ஞானத்திற்கு ஆதி வித்து.

எல்லாத் திருப்பாட்டும் மந்திரம் என்றே கூறுதல் வேண்டும். இந்த மந்திரங்களுக்குள் திருமந்திரம் மிகச் சிறப்புடையது.

ஆண்டவனுக்குச் செய்யப்படும் இலக்கணங் கள் பலப்பல.

''உருவிலி! ஊனிலி! ஊனமொன் றில்லி
திருவிலி! தீதிலி! தேவர்க்குத் தேவன்''

உருவம் இல்லாதவன், ஊன் உடம்பு இல்லாதவன்; ஊனம் இல்லாதவன்; தீதும் இல்லாதவன். எல்லா இல்லாமைகளும் இல் லாத திருவிலியைத் தேவர்க்குத் தேவன் என்று ஒப்ப முடியுமா?

முடியும்!

இதோ ஒரு பாடல். திருமூலருக்கு ஒன்று முதல் எட்டு வரையிற் சொல்லத் தெரிகிறது. இது பாலர் வகுப்புக் கணக்குப் பாடம் ஆகுமா? ஒவ்வொரு எண்ணுக்குள்ளும் ஓராயிரம் உண்மையின் வேர்கள் ஓடிப் பரந்திருக்கின்றன.

ஒன்றவன் தானே;
　　இரண் டவன், இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்;
　　நான்குணர்ந் தான்; ஐந்து
வென்றனன்; ஆறு
　　விரிந்தனன்; ஏழு ம்பர்ச்
சென்றனன்; தானிருந்
　　தானுணர்ந்(து) எட்டே!

600 008.

'ஐந்தவித்தான்' என்று கடவுளுக்குத் திருவள்ளுவர் இலக்கணம் வகுத்துள்ளார்.

ஐந்து பொறிகளுக்கும் ஆற்றல் அளித்து ஆறு ஆதாரங்களிலும் விரிந்து, சகஸ்ர தளத்தின்மேல் பொருந்தி அட்ட மூர்த்தமாகிறான் இறைவன்.

ஒன்றே பலவாய்க் கிளைத்துப் பல பெயரினைப் பெறுகிறான்.

ஒன்றவன்—எட்டாக மாறியதோடு நின்றவனா? இல்லை. அட்ட மூர்த்தமாக விளங்கும் சிவன் ஒன்பது பேதமாக நவந்தரு பேதனாய்—நடிக்க வல்லவன்.

ஆண்டவனை அடைய—இனம் காண மூன்று வழிகள் இருக்கின்றன.

பிரமன், திருமால், உத்திரன், மகேஸ்வரன் நான்கும் உருவமுள்ள நிலை.

விந்து, நாதம், சத்தி, சிவம் நான்கும் உருவமற்ற நிலை; அதாவது அருவநிலை.

அருவத்திற்கும் உருவத்திற்கும் இடைப்பட்ட நிலை வேண்டுமே. அருவுருவ நிலை. அதன் வடிவம் இலிங்க வடிவம்.

மேற்சொன்ன நவந்தரு பேதங்களைத் தெய்வம் என்றும் சுட்டிக் காட்டினார்கள்.

அரு வாய்
உரு வாய்
அரு வுருவாகிக்
குரு வாய்

இருப்பவன் இறைவன். இதுவே இறைவனைச் சுட்டும் மந்திரச் சொற்கள்.

ஒன்றாகக் காண்பதும், ஒன்றைப் பெருக்கிக் காண்பதும், ஒன்று ஒன்றிலே கரைந்து போய் விடுவதும் அலகிலா விளையாட்டு, சமய தத்துவத்தின் தரிசனங்கள்.

குற்றால மலைச் சாரலில் ஒரு காட்சியைப் பார்க்கலாம்.

பலா மரங்களைப் பார்க்கிறோம். மரத்திலே பலாப் பழங்கள் மண்டிக் கிடக்கின்றன. இது உண்ணத் தெரிந்த மனிதனின் பார்வை.

பக்தர் ஒருவர் பார்க்கிறார்.

கிளைகிளையாய்க் காய்த்துக் கிடக்கும் அத்தனையும் சிவலிங்க வடிவமாகத் தோற்றம் தருகின்றன.

மீண்டும் அவரது பக்திக் கண் பழத்தினை ஊடுருவிப் பார்க்கிறது. அப்போதும் சிவலிங்க வடிவமாகப் பலாச்சுளைகள் தெரிகின்றன.

சுளைகள் ஈன்ற வித்தினைப் பார்க்கிறார்.

அதுவும் சிவலிங்க வடிவம்!

பழமெலாம் சிவலிங்கம்.

சுளையெலாம் சிவலிங்கம்.

வித்தெல்லாம் சிவலிங்கம்.

இவ்வாறு பலாப்பழத்தினைப் பார்க்கிறார் திருக்குற்றாலத் தலபுராணம் பாடிய திரிகூட ராசப்ப கவிராயர். பலாப்பழக் காட்சியிலே சிறப்பு இல்லை. பக்தி என்னும் கண்கொண்டு அருள் பழுத்த உள்ளத்தோடு பார்க்கிறவர்களுக்குப் பார்க்குமிட மெல்லாம் நீக்கமற நிறைந்த பரம்பொருள் ஒன்றே என்று தெரிய வரும்.

பழம் வேறு; சுளை வேறு; கொட்டை வேறு என்பதனை விஞ்ஞானம் சொல்லும். எல்லாம் ஒன்றின் விளக்கங்கள் என்று மெய்ஞ்ஞானம் பேசும்.

நூலறிவினால் வாலறிவனைக் காண இயலாது. நுண்ணறிவால் காண இயலும். இதுவே ஞானியர்கள் காட்டும் அருள் வழி.

உணர்வு வழி, உள்ளத்தின் வழியே சென்று, தேனை, பாகை, திகழ் ஒளியை, பிறப்பையறுக்கும் பெரு மருந்தைத் தேடிக் கொண்ட நெஞ்சங்கள் சமயத் துறையில் பலர். அவர்கள் வழி சென்று பயனடைந்தவர்களும் பலர்!

மண்ணின் பயன் வளம்; இதனை நாம் உழைத்தறிவோம்.

பண்ணின் பயன் இசை; இதனை நாம் கேட்டறிவோம்.

விண்ணின் பயன் மழை; இதனை நாம் தேக்கிப் பயன் காண்போம்.

கண்ணின் பயன் ஒளி; இதனை நாம் கருணையாக மாற்றிக் காண்போம்.

கருத்தின் பயன் என்ன?

கடவுளை உணர்வது!

வேதத்தின் பயன் என்ன?

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

ஒன்றின் பயன் என்ன?

உலகெலாம் உணர்ந்தானோடு ஒன்றி வாழ்வது.

*

# THE TAMILNADU DAIRY DEVELOPMENT CORPN. HELPS THE HELPLESS



Helping 'Blossoms in the dust' is TNDDC's gesture for the year. In accordance with the Chief Minister's plea to aid the physically handicapped in Tamilnadu, the Tamilnadu Dairy Development Corporation pledges to do the following:

* Employ five handicapped persons in the Corpn. for the year 1974-75.
* Donate free milk - 100 litres per day to handicapped children, during the course of this year.

TNDDC appeals to social service and charitable organisations to help continue this scheme in the coming years.

**Let us unite - to help the helpless!**

**The TAMILNADU DAIRY DEVELOPMENT CORPN. LTD.,**

(An Undertaking of the Govt. of Tamilnadu)

5, Ritherdon Road, Vepery,
Madras-600007.
Phone: 35185, 38537 & 31447.

*Milk is health.*



# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.

ஆரோக்யம் தரும் சுத்தமான தேன், கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட் ஆடைகள், சுத்தமான எண்ணெய், கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப் பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல பொருட்களையும் வாங்கலாம்.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களில் 200க்கும் மேலான காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கின்றன.

தொலைபேசி சென்னை 29684, 81954 திருச்சி 3814 கோவை 35051




கதர் கிராமத் தொழில் வாரியம் தமிழ்நாடு


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.